# மொழிக் கட்டுரைகள்

R005E01

வெ. சுப்பிரமணியன்

# மொழிக் கட்டுரைகள்

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழ்ப் பதிப்பகம்
2, கால்வாய்க்கரைச் சாலை,
கஸ்தூரிபாய் நகர்
அடையாறு, சென்னை-600020.

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| 1. Title of the Book | — | MOZHIK KATTURAIGAL |
| 2. Author | — | S. V. SUBRAMAIAN,<br>Director and Chief<br>Proffessor, I.I.T.S.<br>Adayaru, Madras-600020. |
| 3. Language | — | Tamil |
| 4 Edition | — | Second |
| 5. Date of Publication | — | Nov. 1974, Jan. 1978 |
| 6. Copyright holder | — | S. V. Subramanian |
| 7. Paper used | — | 10.9 kg. White Printing. |
| 8. Size of the book | — | 18×12.5 con (crown) |
| 9. Printing types used | — | 10 pt, 8 pt, 12 pt, 18 pt. |
| 10. No. of pages | — | 166 |
| 11. No. of Copies Printed | — | 1000 |
| 12. Printer | — | Novel Art Printers,<br>Madras-600 014. |
| 13. Binding | — | Card Board. |
| 14. Price | — | Rs. 5/- |
| 15. Publisher | — | Tamil Pathippakam<br>2, Canal Bank Road,<br>Kasturibai Nagar<br>Adayaru, Madras-600020. |
| 16. Subject | — | Study on language and<br>grammer. |
| 17. Summary | — | Literary-grammatical<br>Comparison. |

## என்னுரை

பல கட்டுரைகள் மொழி இயல் கருத்தரங்குகளில் படித்தவை. தமிழ்மொழி பற்றிய சில எண்ணங்களைத் தொகுத்துத் தர வேண்டுமென்ற எண்ணம் இத் தொகுப்பால் நிறைவேறுகின்றது.

இக்கட்டுரைகளைத் தொகுத்துத் தந்த என் ஆய்வாளருக்கும், அச்சுப் பிரதிகளைச் செவ்வையாகப் பார்த்த என் மாணக்கர்க்கும் சிறப்புற அச்சிட்டளித்த நாவல் ஆர்ட் அச்சகத்தார்க்கும் என் ஆசியும் நன்றியும்.

அன்பன்

ச. வே. சுப்பிரமணியன்,

# உள்ளே


| | | | |
|---|---|---|---|
| 1 | சொல்லும் பொருளும் | ... | 1 |
| 2 | அத்து | ... | 2 |
| 3 | தொகைகள் | ... | 11 |
| 4 | வினையெச்சங்கள் | ... | 18 |
| 5 | தொல்காப்பியரின் சொற்பாகுபாடு | ... | 31 |
| 6 | மாத்திரை | ... | 39 |
| 7 | பெயர்ப் பாகுபாடும் அகநானூற்றுப் பெயர்களும் | ... | 53 |
| 8 | அகநானூற்றில் பெயர்மாற்று வடிவங்கள் | ... | 58 |
| 9 | யாப்பு எழுத்து | ... | 69 |
| 10 | சொல்லிலக்கண வரலாற்றில் | ... | 76 |
| 11 | தமிழ்மொழி — வரலாற்று அகர வரிசையில் 'ஐ' | ... | 94 |
| 12 | தமிழில் உயிரொலி மாற்றங்கள் | ... | 99 |
| 13 | தமிழ் மெய்யொலி மாற்றங்கள் | ... | 104 |
| 14 | தொன்னூல் விளக்கம் — நுண்மதிப்பீடு | ... | 107 |
| 15 | தமிழிலும் மலையாளத்திலும் பா அமைப்பு ஓர் ஒப்பாய்வு | ... | 115 |
| 16 | 'அரி' சொல்லும் பொருளும் | ... | 142 |
| 17 | சிலம்பில் வரி | ... | 158 |

# சொல்லும் பொருளும் 1

0.1. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல். சொல். 155) என்பது தொல்காப்பியம். பொருள் என்ற சொல்லுக்குப் பல பொருள் உள. இங்குப் பொருள் என்று கூறுவது, ஒரு பொருளைக் குறிக்கின்ற வடிவத்திற்கும் அப்பொருளுக்கும் உள்ள தொடர்பு எனக் கொள்ளலாம். காட்டாக, மரம் என்ற சொல் வடிவம் (form or reference) அதைக் கூறியவுடன் நமக்கு அதன் பருப்பொருள் வடிவமாகிய (content or referent) மரத்தை நம் கண்முன் கொண்டு வருகிறது. 'வா' என்ற சொல்லைக் கேட்டவுடன் அது வருதல் தொழிலைக் குறிப்பதாக உணர்கிறோம். இது போன்ற சொற்களைக் கூறும்போது சூழ்நிலை இன்றியே பொருளை உடனே உணர்கிறோம். அதுபோன்றே மா என்ற சொல்லைக் கூறியவுடன் பொருள்கூற இயலவில்லை. இதற்குச் சூழல் தேவைப்படுகிறது. காரணம், அச்சொல் பல பொருளில் வழங்கப்படுவதே.

1.0. 'மா' என்ற சொல் (1) விலங்கு (2) குதிரை (3) யானை (4) குதிரை பன்றி யானைகளின் ஆண் (5) சிங்க ராசி (6) வண்டு (7) அன்னம் (8) விலங்கு வடிவமாகப் பிறக்கும் மானுடம் (9) மாமரம் (10) அழைக்கை (11) சீலை (12) ஆணி (13) துன்பம் பொறுக்கை (14) ஓர் அசைச் சொல் (15) இலக்குமி (16) செல்வம் (17) சரசுவதி (18) மாற்று (19) ஒரு நிறை (20) $\frac{1}{20}$ஐக் குறிக்கின்ற அளவு (21) நில அளவு (22) வயல் (23) நிலம் (24) வெறுப்பு

(25) கானல் (26) ஆகாது என்ற பொருளில் வரும் ஒரு வட சொல் (27) பெருமை (28) வலி (29) அழகு (30) கருமை (31) நிறம் (32) மாமை நிறம் (33) அரிசி முதலியவற்றின் மாவு (34) துகள் (35) நஞ்சுக் கொடி, என முப்பத்தைந்து பொருளில் வழங்கப்படுவதாகத் தமிழகராதி சுட்டுகின்றது. ஆயின் இலக்கிய இலக்கண நூற் களில் கீழ்க்கண்ட பொருள் களில் பயிலப்படுவதைப் பார்க்கிரும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | மாமரக் கிளவியும் | — மரம்—தொல். | 123 |
| 2 | வழங்கியல் மாவென் கிளவி தோன்றின் | —அளவுப் பெயர்— ,, | 480 |
| 3 | மாவென் கிளவி வியங்கோள் | —அசைச்சொல் ,, | 758 |
| 4 | தெய்வம் உணுவே மா மரம் | — விலங்கு— ,, | 964 |
| 5 | புள்ளியற் கலிமா | — குதிரை — ,, | 1140-4 |
| 6 | மாயிருந் தூவி மயில் | —அழகு— ,, | 1548-2 |
| 7 | மாவேள் எவ்வி | — பெரிய—புறம். | 24-18 |
| 8 | மாப் புகை | —கரிய— ,, | 103-6 |
| 9 | மா காலே | —விரைவு அல்லது மிக்க— ,, | 234-1 |
| 10 | மாப் பிணை | —மான்— ,, | 2-21 |
| 11 | மாப் பயம்பு | — யானை— ,, | 17-14 |
| 12 | மா அரிவை | — மாமை நிறம்— புறம் | 147-5 |
| 13 | மாநிறை வில்லதும் | — நில அளவு— ,, | 184-2 |
| 14 | மா மறுத்த மலர் மார்பு | — திருமகள்— ,, | 7-5 |
| 15 | கோட்டு மா | — பன்றி— நற். | 75-6 |

16 மாவுடைத் தார் – வண்டு—பு. வெ. மா. 6-7

17 கழுநீர் மாமலர் —நிறம்—சிலம்பு 4-40
(அடியார்க்கு நல்லார் உரை)

18 காயங் கொண்டன இஞ்சிமா
—மாவு—மலைபடுகடாம் 126

19 மடநடை மாயினம்—அன்னம்—கலி. 92-17

20 ஒட்டறு செம்பொன்னுக்க
ஒருமாவும் குறையாமல் —மாற்று—பெரியபுரா-
ஏயர் கோன் -137

21 மாமன் —வடசொல்லாக்கி
ஆகாதென்றும்
உரைப்பர் — சிந்தா -484
(நச்சினார்க்கினியர் உரை)

22 மாபாலன் என்பான்—
மா, வியங்கோள்
அசையின்றி இசை
நிறைத்து நின்றது —சிந்தா 695
(நச்சினார்க்கினியர் உரை)

1.1. இவ்வாறு பலபொருளில் பயிலப்படுகின்ற 'மா' என்ற சொல்லுக்குத் தனிப்பொருள் எது என்பதே வினா. பொருளை உறுதிப் படுத்தச் சூழ்நிலையே துணை புரிவதால் அச் சொல்லுக்கெனத் தனிப்பொருள் இல்லை எனக் கூறலாமா? அல்லது அச்சொல் பல பொருள்களை உள்ளடக்கி நிற்கின்றது என்று கூறலாமா?

2.0. 'பலபொருள் ஒரு சொல்'லைப் பற்றிப் பேசுகின்ற தொல்காப்பியம்,

*வினை வேறுபடூஉம் பலபொருள் ஒருசொல்*
*வினை வேறுபடாஅப் பலபொருள் ஒரு சொல் என்று*
*ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்*
—தொல். சொல் 52

என இருகூருகப் பகுக்கின்றது. ஆயின் 'மா' என்னும் சொல்லை இரண்டு வகையிலும் சேர்க்கலாம். மாப்பூத்தது மாக்கொணு என்ற நிலையில் வினைவேறு படுகின்றமைக்குக் காட்டுக் காட்டுகிறுர் சேனுவரையர். வினைவேறுபடாப் பல பொருள் ஒரு சொல்லிற்கு மாமரம் வீழ்ந்தது விலங்குமா வீழ்ந்தது என்பனவற்றைக் காட்டாகக் காட்டுகின்றுர். ஆயின், விலங்கு மாவா மாமரமா என்பதற்குப் புணர்ச்சி விதியே இதைக் காட்டிலும் எளிய சான்ருக அமைகின்றது.

மா + கோடு—மாங்கோடு, மரமாயின்
மா + கோடு—மான்கோடு, விலங்காயின் } தொல்-232

புணர்ச்சியைப் பலவகையாகப் பகுக்கலாம்; எழுத்துப் புணர்ச்சி, பொருட்புணர்ச்சி போன்ற நிலைகளில். வேற்றுமைப் புணர்ச்சியில் தானே, மரமாயின் ஒரு நிலையிலும் வேறு பொருளாயின் வேறுநிலையிலும் புணர்வதைத்தான் தொல்காப்பியத்தின் சில நூற்பாக்கள் சுட்டுகின்றன.

புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை — தொல் 245
ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே — ,, 246
சே என் மரப்பெயர் ஒடுமர இயற்றே — ,, 279
பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும்— ,, 280

இதனுல்தான் தொல்காப்பியம் மரப் பெயர்களுக்குச் சிறப்புப் புணர்ச்சி விதி கூறுகிறது என்பது தெளிவாகின்றது.

2.1. இம்மா வென்னுஞ் சொல்லைக் கேட்டதும், எவ்வகைச் சொல் என்று கூறுவதற்கில்லை. 'போ' என்ற சொல்லைக் கேட்டவுடன் வினைச்சொல் என்று கூறிவிடுகிறோம். 'அன்பு' என்ற சொல்லைச் சொன்னதும் பெயர்ச்சொல் எனக் கூறிவிடலாம். ஆயின், 'மா' என்ற சொல், விலங்கு குதிரை யானை மரம் இலக்குமி நில அளவு போன்ற நிலையில் பயன் படும்போது பெயர்ச்சொல்லாக அமைகின்றது. பெரிய கரிய

போன்ற பொருண்மையுடன் வரும்போது பெயரடைச் சொல்லாகின்றது. அதுவும், நல்ல, பெரிய, சிறிய எனும் சொற்களைப்போல், மைவிகுதி ஏற்காத பெயரடைச் சொல் லாகச் செயல்படுகின்றது. அடுத்தாற்போன்று வியங்கோள் அசைச்சொல்லாகவும், இசைநிறைச் சொல்லாகவும் பயன் பட்டு, இடைச் சொல்லாகவும் நிற்கின்றது.

2.2. 'மா' வென்ற இச்சொல் மற்ளுெரு சொல்லோடு இணைமொழியாக வரும்போதும், சூழலை வைத்தே பொருள் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. 'கோட்டுமா' என்ற சொல்லுக்குக் கொம்பையுடைய விலங்காகிய எருமை, யானை பன்றி போன்ற பல்பொருள் இருந்தாலும், இடம்கருதிப் பன்றி எனக் கொள்வார் அடியார்க்கு நல்லார்.

கூறை கோட்பட்டுக் கோட்டுமா ஊரவும்

—சிலம்பு 15-98

2.3. மா என்ற சொல் புணர்ச்சியில் வந்த 'ன' கரத்தோடு சேர்ந்து 'மான்' ஆகி, மானைமட்டும் குறியாது ஏனைய விலங்குகளையுங் குறித்தது.

கடுமான்—குதிரை—புறம்-162-7

புறநானூற்றில் மட்டும் 21 இடங்களில் 'மான்' என்ற சொல் குதிரையைக் குறிக்கின்றது.

அடுமான் — யானை — 213-8 புறம்

வயமான் — சிங்கம் — 318-5 ,,

வயமான் — புலி — 52-2 ,,

இவ்வாறு சில அடிச்சொற்கள் வளர்ந்து தாமே அடிச் சொல்லாய் நிற்பதையும் காண்கிறோம். 'ஆ' வென்பது, 'இன்' சாரியை பெற்று 'இ' கரத்தை இழந்து 'ஆன்' ஆகிப், பின்பு அதே அடிச்சொல்லாக அமைகின்றது.

3.0. இவ்வாறாக 'மா' என்றசொல் பலபொருளில் பயின்று, பல இலக்கண நிலைகளில் அமைந்து வந்தது. இன்று பெரிய, கரிய, மரம், விலங்கு போன்ற சில பொருள்களில் தான் பயின்றுவருகிறது. மொழியின் பழமையை ஒருசொல் பலபொருளில் பயின்று வருவதை வைத்தும் நிறுவலாம் என் பதற்கு இம் 'மா' என்ற சொல்லையும் ஒரு சான்றாகத் தரலாம்.

# அத்து 2

மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான். மரக்கிளையில் ஊஞ்சல் போடு, மரச்சோலை நிழல் தரும். மரத்தடி வைரம் பாய்ந்தது. மரப்பெட்டி உறுதியானது. இந்த மரங் காய்க்கும். மழையில் மரஞ்சாய்ந்தது. நல்ல மரந்தேடினான். காகம் மரத்தில் கூடு கட்டும். இச்சொற்கள் அனைத்தும் அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்துகின்றவை. மரம் என்ற சொல் மரக், மரச், மரத், மரப். மரங், மரஞ், மரந், மரத்து போன்ற பல வடிவங்களைக் கொண்டுள்ளது.

இவற்றை மாற்று வடிவங்கள் (stem alternants) என்று கூறுவார்கள். ஒரு சொல் இவ்வாறு பல வடிவு எடுப்பதற்குச் சூழ்நிலையே (environment) காரணம். இக்காரணத்தை ஒலியால் வருகின்ற வடிவமாற்றுவிதி (morpho-phonemics) கொண்டு விளக்கலாம்.

மரக், மரச், மரத், மரப் என்ற மாற்று வடிவங்களின் இறுதியில் வருகின்ற வல்லொலிகள் சார்ந்து வந்த வல்லொலிகளுக்குத் தக மாறிவிட்டன. இதை ஒத்த ஒலியாக்கல் (assimilation) என்ற விதியில் அடக்கலாம். இவற்றை முழுநிலை ஒத்த ஒலியாக்கல் (Complete assimilation) என்ற நிலையில் கொள்ளலாம்.

மரங், மரஞ், மரந் என்ற வடிவங்களிலுள்ள இறுதி மெல்லொலி தன்னை நோக்கி வந்த தொடர்புடைய ஒலியால் மாறுதல் அடைகின்றது. 'ம்' என்ற மெல்லொலியின் பின்பு

'க' என்ற வல்லொலி வரும் போது அதற்குத் தொடர்புடைய மெல்லொலியான 'ங' தோன்றுகிறது. இதைப் போன்று ஏனைய இரண்டிற்கும் காரணம் காட்டலாம். பகுதி ஒத்த ஒலியாக்கல் (partial assimilation) என்று இந்நிலையினைக் கூறலாம்.

இவற்றை நன்னூலார்,
மவ்வீறு ஒற்று ஒழிந்து உயிர்ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவு மாகும் —நன். 219

என்ற நூற்பாவால் விளக்குகின்றார்.

இனி 'மரத்து' என்ற வடிவம் எவ்வாறு அமைந்தது என்று பார்ப்போம். இவ்வடிவில் மரம், அத்து என இரண்டு சொற்கள் உள்ளது என்பர். ஏனைய வடிவங்களுக்கு இல்லாத ஒரு நிலையினை இவ்வடிவில் காண்கிறோம். இந்த அத்து ஏன் வந்தது என்றால்

மஃகான் புள்ளி முன் அத்தே சாரியை
—தொல்-எழுத்து-185

என்ற நூற்பாவைக் காட்டுவர். ஆயின் தொல்காப்பியரே கலமென் அளவுப்பெயர்க்கும், அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கும், பனி, வளி என்ற சொற்களுக்கும், அழன், புழன், என்ற மொழிகளுக்கும் விண் என வரும் ஆகாயப் பெயருக்கும், ஆயிரம் என்ற எண்ணுப் பெயருக்கும், நாட்பெயர்க் கிளவிக்கும் அத்துச் சாரியை வரும் என்று பொதுவிதியும், சிறப்பு விதிகளும் கூறுகின்றார். தொல்காப்பியர் கூறும் சொற்கள் மட்டுமின்றி இன்னும் சில சொற்களும் அத்துச் சாரியை ஏற்கின்றன.

அமுது — அமுதத்து; அரண் — அரணத்து; அவை — அவையத்து; இன்பு — இன்பத்து; உலகு — உலகத்து; கதவு — கதவத்து; கால் — காலத்து; கான் — கானத்து; குன்று — குன்றத்து; சூல் — சூலத்து; தூண் — தூணத்து;

நகர் — நகரத்து; நெஞ்சு — நெஞ்சத்து; மதி – மதியத்து; வான் — வானத்து; யா — யாஅத்து; மா — மாஅத்து.

இவ்வாறு உயிர் ஈறும், உகரம் ஏறி வருகின்ற புள்ளி யிறுதிகளும் அத்துச்சாரியை ஏற்கின்றன.

அது மட்டுமின்றி மேலே கூறிய சொற்கள் அம் சாரியை யும் ஏற்கின்றன. அமுதம், அரணம், அவையம், இன்பம், உலகம், கதவம், காலம், கானம், குன்றம், சூலம், தூணம், நகரம், நெஞ்சம், மதியம், வானம் என வரும். இதனுல் அத்துச் சாரியை ஏற்கின்ற சொற்கள் அம் சாரியையும் ஏற் கின்றன. 'அம்' சாரியை ஏற்கின்ற சொற்கள் அத்துச் சாரியை ஏற்கின்றன என்றும் கூறலாம். அம் சாரியை ஏற்ற பின்புதான் அத்துச் சாரியை ஏற்கின்றன என்று கூற வேண்டிய நியதி இல்லை.

"மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை" என்று அத்தில் ஏகாரம் கொடுத்துக் கூறியிருப்பினும் மகர இறுதி 'அம்' சாரியையும் ஏற்கின்றது.

காம் — காமம் = விருப்பம்

நாம் — நாமம் = அச்சம்

அத்துச் சாரியை தோன்றிய பின்பு பெறும் + அவற்றுள் என்ற சொற்கள் 'பெறுமவற்றுள்' என்று புணர்வதுபோல் 'மரமத்து' என்றுதானே புணர்தல் வேண்டும். மரத்து என்று எவ்வாறு ஆகும் என்று கேட்டால்,

அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
— தொல்-புணர்-31

என்ற விதியினைக் கூறி முதலில் 'மரம்' என்பதிலுள்ள இறுதி மகரம் கெடுதற்குக் காரணங் காட்டுவர்,

மகரமெய் கெட்டால் மர+அத்து என்றாகும் போது 'இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும்' என்ற நூற்பா வின்படி மரவத்து என்றல்லவா ஆதல் வேண்டும். எவ்வாறு மரத்து என்றாகும் என்று வினவின்.

அத்தின் அகரம் அகர முனையில்லை —தொல் புணர்-23 என்ற விதியினைக் கூறி, மர+அத்து என்பதில் மர+'அ' கெட்டு 'த்து'ச் சேர்ந்து மரத்து ஆகும் என்று கூறுகின்றார் கள். இத்துணையும் போக 'ம'கர இறுதிச் சொற்கள் வேற் றுமை உருபு ஏற்பதற்காகவே அத்துச் சாரியை ஏற்பதாகக் கருதுகின்றனர் சிலர். அத்துச் சாரியை ஏற்காது வேற்றுமை உருபு ஏற்கின்ற நிலையினையும் நாம் காண்கிறோம்.

ஆசிரியருக்கு — தொல்-செய்யுள்-50

குலக்கு — சிலம்பு

கயக்கு — சீவக சிந்தாமணி

இவ்வாறாக (1) அத்துச் சாரியை மகர இறுதிச் சொற்கள் மட்டுமின்றி ஏனை உயிர், மெய் ஈற்றுச் சொற்களும் ஏற்கும் என்றும் (2) (அ)அதற்கு நிலைமொழி மகரங் கெட ஒரு விதியும் (ஆ) வருமொழி முதலிலுள்ள அகரங் கெட ஒரு விதியும் தேவை இல்லை எனவும் (3) 'அம்' சாரியை ஏற்கின்ற சொற் கள் பெரும்பான்மை அத்துச் சாரியை ஏற்கத் தகுதியுடை யவை யென்றும் (4) அத்துச் சாரியை ஏற்காது 'ம்' இறுதிச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் என்றும் தெளியலாம். மரம் என்பதில் மர் என்பதனையே வேர்ச் சொல்லாகக் கொண்டால் தவறில்லை என்பதும் விளங்குகின்றதல்லவா?

# தொகைகள் 3

1. தொக்கு வருவது தொகை என்று கூறுவர். பொருளும் உருபும் தொக்கி வருவதைக் குறித்தது தொல்காப்பியம். உருபாகிய புறநிலைக்கு முதலிடம் தந்து கூறியது நன்னூல் போன்ற பிற்கால இலக்கணங்கள். அதனால்தான் 'வேற்றுமைத் தொகையே வேற்றுமையியல' (தொல்-சொல் 413) என, பொருளும் உருபையும் சேர்த்துக் கூறியது தொல்காப்பியம்.

*இரண்டு முதலா இடையா றுருபும்*
*வெளிப்படலில்லது வேற்றுமைத் தொகையே*

— நன். 363

என நன்னூல் பேசிற்று. காட்டாக (அ) 'கரும்பு வேலி' என்ற தொகை 'கரும்பான் இயன்ற வேலி' எனத் தொகும்போது மூன்றும் வேற்றுமைத் தொகையாகவும் அமைகின்றது. (ஆ) மட்டுமின்றி வேற்றுமை மயக்கமும் பொருள் அடிப்படையே முதலிடம் பெறும் என்பதைத் தானே உணர்த்துகின்றது, 'சாத்தற்குப் பாடு கிடந்தான்' என்ற விரியில் நான்காம் வேற்றுமை யுருபு வரினும் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்து மயங்கியுள்ளது என்று கூறுவதற்குப் பொருள்தானே அடிப்படை. (இ) 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபு வடிவத்தால் ஒன்றாயினும் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை போன்ற பொருள்களில் அமையும் போது பொருளும் தொகுவது தெளிவே,

2. தொக்கு வருவது 'தொகை' என்பதோடு மட்டு மின்றித் தொகுத்துக் கூறுவது 'தொகை' என்றும் கொள்ள லாம். யானை கொன்றது—யானை கொல்லும் என்ற விரி கொன்ற யானை, கொல்லும் யானை என வகையாகி 'கொல் யானை' எனத் தொகையாயிற்று என்று சொல்லலாம்.

3. சொல் இலக்கணம் பற்றிப் பேசுகின்ற தமிழ் மர பிலக்கணங்கள் ஒன்பதில் தொல்காப்பியம் தொகைகளைப் பற்றி எச்சவியலிலும், நேமிநாதம் எச்ச மரபிலும், நன்னூல் இலக்கணவிளக்கம் பொதுவியலிலும், இலக்கணக் கொத்து, முத்துவீரியம் ஒழிபியலிலும், தொன்னூல் விளக்கம் பெயரி யலின் உட்பகுப்பாகிய தொகைநிலைத் தொடர்மொழிப்பெய ரியல் என்பதிலும், வடமொழி இலக்கணச் சார்புடைய வீர சோழியம், பிரயோக விவேகம் இரண்டும் முறையே தொகைப்படலம், சமாசபடலத்திலும் உரைக்கின்றன. தொகைகளுக்கென இவை வகுத்த தனிப் படலங்கள் அவற் றின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. இவற்றிலிருந்து தொகை இலக்கணம் தனிச்சொல் இலக்கணம் அன்று சொற் றொடர் இலக்கணமே என்பது தெரியக் கிடக்கின்றன.

4. அம்மரபிலக்கணங்கள் அமைத்துள்ள முறைவைப் பின்படித் தொகைகளின் பாகுபாடு புணர்ச்சி யடிப்படை யாகிய வேற்றுமை அல்வழி என்ற நிலையிலும் எண்ணப்பட் டுள்ளது தெளிவு. காரணம் எல்லா இலக்கண நூல்களும் வேற்றுமைத் தொகையை முற்கூறி பின்பு அல்வழிப் புணர்ச் சித்தொகைகளாகிய ஏனைய ஐந்து தொகைகளையும் கூறு கின்றன. இவற்றில் முறைவைப்புமாற்றம் அமைந்துள்ள தைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டும்.

5. தொல்காப்பியம் தொகையின் வகைகளைக் கூறித் தொடங்குகின்றது (தொ-செ-412) நன்னூல் (361, 362) இலக் கண விளக்கம் (334, 335) போன்றவை தொகைக்கு இலக் கணம் கூறி வகைகளைக் கூறுகின்றன. தொன்னூல் விளக்கம் தொகைநிலைத் தொடர் மொழிகளைப் பொருள், இடம், காலம்,

சினை, குணம், தொழில் என்ற நிலையிலும் பேசுகிறது (88). பொருள் —பூண்மார்பன்; இடம் — மலையருவி; காலம் — மாரிநாட்பயிர்; சினை — கைம்மா; குணம் —கருங்குதிரை; தொழில் - கொடைக் கோமான்.

பின்பு தொகைகளின் வகையாக ஆறு தொகைகளைப் பற்றியும் கூறுகின்றது (89).

6. வேற்றுமைத் தொகைகள் அனைத்தும் உருபும் பொருளும் தொக்கத் தொகைகளே. அவை தொக்கோ' விரிந்தோ வரின் அவை சொற்றொடர் என உணர்த்தப்படு கின்றன. இரண்டாம் வேற்றுமைத் தொகை அமைகின்ற பெயர் பெரும்பான்மையும் எழுவாயாக அமையாது. வேற்றுமைத் தொகைகளின் அமைப்பு பெ—$\frac{\text{வே.உ}}{\text{பொருள்}}$ — $\frac{\text{வி}}{\text{பெ}}$.

ஆறும்வெற்மைத் தொகை மட்டும் பெ — $\frac{\text{வே.உ}}{\text{பொ}}$ — பெ என அமையும். வேற்றுமைத் தொகைகளை சிறு வாக்கிய நிலை கடந்த வாக்கியங்கள் (Compelx sentences) என்று கூறலாம்.'

7. உவமத்தொகை

'உவமத் தொகையே உள்ள உவம இயல எனத் தொல் காப்பியமும் (தொல். சொல். 414) இலக்கண விளக்கமும் (337) வரைகின்றன. 'உவம உருபிலது உவமத்தொகை' என நன்னூலும் (336) முத்து வீரியமும் கூறுகின்றன. கூறுகள் பெ - உ:உ-பெ. இது சிறுவாக்கிய நிலையில் (Simple Sentence) இடமாற்றி இலக்கணத்துள் (Transformation) அமையும்.

துடியிடை, மலர்க்கண், தாமரைமுகம். இடை துடி போன்றது; துடிபோன்றது இடை; துடிபோன்ற இடை; துடிபோல இடை; துடி இடை என அமைக்கலாம்.

8. வினைத்தொகை

இது இருநிலைகளில் அமைகின்றது. கொல் யானை, அரிவாள் போன்றவை ஒருவகை. ஆடரங்கு செய்குன்று

போன்றன மற்ருெருவகை. ஆயின் புறநிலை அமைப்பு இரண்டிற்கும் ஒன்றுதான் வினை- பெயர் (அ) முதல்வகையில் வருகின்ற பெயரே வினையைச் செய்கின்றது. யானை கொன்றது, யானை கொல்லும் என. இதுவும் வேற்றுமை மயக்கத்தால் வினையாகவும் பிறவினையாகவும் அமைவதைக் காணலாம். 'புலிகொல்யானை' ஓடாநின்றது, என்பதில் பிறவினையாகவும் அமைவதைப் பார்க்கிருேம். (தொ. சொ 96. (ஆ) இரண்டாவது வகையில் வருகின்ற பெயர் அத்தொழிலைச் செய்வதில்லை. அத்தொழில் செய்யப் பயன்படுகிறது. ஆடரங்கு—அரங்கு ஆடற் குரியது இதுவும் சிறுவாக்கிய நிலையில் இடமாற்று இலக்கணத்துள் அடங்கும்.

### 9. பண்புத் தொகை

இது சிறு நிலை வாக்கியத்திலும் இடமாற்று இலக்கணத்துள்ளும் அடங்கும்.

அமைப்பு

பெ. அ — காட்டு கருங்குதிரை; வட்டப்

அல்லது—பெ — பலகை; தீங்கரும்பு;

பெ — வேழக்கரும்பு

நெடுங்கோல்

### 10 உம்மைத் தொகை

இது சொற்ருெடர் என்ற நிலையில் (Phrase or clause) அமைவது.

காட்டு: உவாப்பதினுன்கு: புலிவிற்கெண்டை; தூணிப்பதக்கு தொடியரை; முப்பத்து மூவர்; பதினைந்து.

### 11. அன்மொழித் தொகை

தொல்காப்பியம் பண்பு, உம்மை, வேற்றுமைத் தொர்கையின் ஈற்றில் நின்றியலும் அன்மொழித் தொகை எனக் கூறுகின்றது. ''சிறுபான்மை உவமத் தொகை நிலைக்

களத்தும் வினைத்தொகை நிலைக்களத்தும் அன்மொழித் தொகை பிறக்கும் என்ப துணர்த்துத லென்க' எனச் சேனாவரையர் உரை உரைக்கின்றது. பிற்கால இலக் கணங்கள் 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகை அன்மொழி எனப் பேசுகின்றன. (அ) வெள்ளாடை பண்புத் தொகை என்ற நிலையில் ஒரு வாக்கியம் அமைகின்றது. ஆடை வெண்மையானது; ஆடை வெண்மை—வெண்மையான ஆடை, வெண்மை ஆடை—வெள்ளாடை—பின்பு வெள் ளாடை—அன் மொழித் தொகையாகும்போது ஆடை உடையாள் அல்லது உடுத்தாள் என ஆடை என்பதே ஒரு வாக்கியமாக அமைகின்றது. அன்மொழித் தொகை யாகு பெயர் என்றும் உரையாசிரியர்கள் கூறுவதுண்டு. அன்மொழித் தொகையில் இரண்டு வாக்கியங்கள் இருக் கின்றன என்று சொல்லலாம். இதையே எல்லாத் தொகைகளின் வழிப் பிறக்கின்ற அன்மொழித் தொகைக்கும் ஒட்டிக் கொள்ளலாம். (ஆ) தகரஞாழல் (இ) பொற்றொடி (ஈ) துடியிடை (உ) தாழ்குழல்

இது சிறுநிலை வாக்கிய அமைப்பில் இடமாற்றிலக்கணத் தோடு பொருந்துவது.

கூறுகள்; பெ—பெ

வி—பெ

12. தொகையில் வினைத்தொகை, பண்புத் தொகை, உவமத்தொகை, சிறு வாக்கியங்களாகவே தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. அன்மொழித்தொகையில் இரண்டு சிறு வாக்கியங்கள் இருப்பதாகக் கூறலாம். வேற்றுமைத் தொகையும், உம்மைத் தொகையும் வாக்கியத்தின் கூறு களாகச் சொற்றொடர்களாக அமைகின்றன.

13 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய' என்ற நிலையில் பார்க்கும்போது அது வாக்கியத்தின் கூறாகிய எழுவாயாகவோ, பயனிலையாகவோ அமையும் ஒருசொல் நிலை என்று கூறலாமா என்பது என் கருத்து.

| | |
|---|---|
| கொல்யானை | வந்தது |
| அது | யானை |
| அது | கொல்யானை |

14. விட்டிசைப் பொருளன் போன்று (Discontinuous morpheme) விட்டிசைத் தொகையும் (Discontinuous Compound) அமைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. 'பேர் இருங்குன்று' என்ற தொடரில் 'பேர்' என்ற அடை இரும் என்ற சொல்லைத் தழுவாது 'குன்று என்ற சொல்லைத் தான் தழுவுகிறது, அல்லது தொடருகின்றது என்று சொல்லலாம். 'உண்கண் கிணைமகள்' என்ற தொடரிலும் 'கண்கிணை' அடுத்திருந்தாலும் 'கண்......... மகள்' என வேற்றுமைத் தொகையாக அமைகின்றது என்று கொள்ளலாம். அடையுடன் கூடிய தொகைகளும் இந்த நிலையில் அமைகின்றன.

சிறுகருங்காக்கை
கருநெடுங்கண்

15. ஒரே தொகை பல பொருளில் அமையும் போது பொருள் மயக்கம் ஏற்படலாம். 'தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ் எல்லைப் பொருளின் மயங்கும் என்ப' நன். 373; தொ. வி. 90

16. தொகைகள் தொக்கும் தொகுத்தும் வருவனவும் சிறு நிலை வாக்கியங்களாகவும், சொற்றொடர்களாகவும் அமைகின்றனவும் இடமாற்று இலக்கணத்துள் அடங்குவனவும் உள என அறிகின்றோம்.

| | தொல் | வீரசோ | நேமி | நன் | பிரயோ | இ.வி | தொ.வி | மு.வீ |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வேற்றுமை | தற்புருடன் வேற்றுமை (1) | வேற்றுமை (1) | (1) | தற்புருடன் (1) | (1) | (1) | (1) |
| 2 | உவமம் | | உவமை (5) | (4) | | (2) | (3) | (4) |
| 3 | வினை | வினை (3) | வினை (3) | (2) | | (3) | (2) | (2) |
| 4 | பண்பு | கருமதாரயன் பண்பு (4) | (4) | (3) | கர்மதராயன் (4) | (4) | (4) | (3) |
| 5 | உம்மை | துவந்துவம் உம்மை (2) | உம்மை (2) | (5) | துவந்தன் (6) | (5) | (5) | (5) |
| 6 | அன்மொழி | பலநெல் பகுவிரீகி அன்மொழி (6) | அன்மொழி (6) | (6) | பலநெல் பெகுவிரீகி (3) | (6) | (6) | (6) |
| | | துவிகு (எண்தொகை) | | | துவிகு (2) | | | |
| | | அவ்விய பாவம் (இடைச்சொல் தொகை) | | | அவ்வியயீ பாவம் (5) | | | |

# வினையெச்சங்கள் 4

0 மரபிலக்கணங்கள்[1] வினையெச்ச வாய்பாடு கூறினும் நன்னூல் ஒன்றே வினையெச்சத்திற்குரிய விதியைக் கூறு கின்றது.

> தொழிலும் காலமும் தோற்றிப் பால்வினை
> ஒழிய நிற்பது வினையெச்சமே...... நன். 342

## 1. காலம்

இங்குக் காலமும் தோற்றி என்று கூறும்போது முற்காலத்தினும் வினையெச்சம் வரும் என்ற எண்ணம் உரு வாகின்றது. அதையே நன்னூல் 'முக்காலமும் முறை தரும்'—நன். 343 எனப்பேசுகின்றது. ஆயின் இரு காலங் களில் தான் வினையெச்சங்கள் அமைவதைப் பார்க்கிறோம். அக்காலங்களை இறந்தகாலம்(Past)இறவாக்காலம் (Non-Past) என்ற நிலையில் அமைப்பது பொருந்தும். இறவாக்காலம்தான், பின்பு நிகழ்காலம், எதிர்காலம் என்ற நிலையில் தெளிவான கால இடைநிலைகளோடு அமைந்தன. நிகழ்கால இடைநிலை

---

1. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் இவை ஒன்பதும் சொல்லிலக்கணம் பற்றிப பேசுகின்ற தமிழ் இலக்கண நூல்கள். வீரசோழியம், பிரயோக விவேகம் இரண்டும் வடமொழி மரபைப் பின்பற்றித் தமிழுக்கு இலக்கணம் கூற முயல்கின்றன.

யோடோ[2] எதிர்கால இடைநிலையோடோ வினையெச்சம் வருவதாகத் தோன்றவில்லை.

1.1 "பகரவுகரம் நகுபு வந்தான் என நிகழ்காலம் பற்றி வரும். நகா நின்று வந்தான் என்றவாறு. ஈண்டு நிகழ்காலமென்றது முடிக்குஞ் சொல்லால் உணரப்படும் தொழிலொடு உடன் நிகழ்தல்'' எனச் சேனாவரையர்[3] செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பற்றிக் கூறும்போது உரைக்கின்றார். ஆயின் 'செய்பு' என்னும் எச்சம் பழங்காலத் தமிழில் இறந்தகால நிலையிலும்; பின்பு இறந்தகாலம், இறவாக்காலம் என்ற இரண்டு நிலையிலும் வருவதைக் காண்கிறோமேயொழிய, நிகழ்காலம் பற்றி வருவதாகத் தோன்றவில்லை.

எடுத்துக் காட்டு :

| | | |
|---|---|---|
| கதறுபு | 337 : 17 அகம் | — கதறி |
| கரிபு | 51 : 6 அகம் | — கரிந்து |
| ஏர்பு | 43 : 2 அகம் | — எழுந்து |
| ஏர்பு | 14 : 104 சிலம்பு | — எழ |
| வருந்துபு | 6 : 171 சிலம்பு | — வருந்தி |

1.2 "அகரம்......மூன்று காலமும் பற்றி வரும்'' எனவும் அவர்[4] உரைக்கின்றார். நன்னூலும் அதை ஏற்றுக் கொள்கின்றது. ஆயின் 'செய' என எச்சம் பொருள் அடிப்படையில் மழை பெய்யக் குளம் நிறைந்தது. மழை பெய்யக் குளம் நிறையும் என இறந்த காலம், இறவாக் காலம் என்ற நிலைகளில் வருமென்று கூறினாலும், நிகழ்கால நிலையில் பயன்

2. ஆராய்ச்சித் தொகுதி— மு. இராகவையங்கார், பக்கம் 305. 306—கின்றீற்று வினையெச்சம் என இலக்கியக் காட்டுக்கள் தந்து கூறினாலும் அக் 'கின்று'—வினையெச்ச விகுதியாகவும், செய, செயின் என்ற வினையெச்ச வாய்பாட்டுப் பொருள்கொண்டு அமைவதாகவும், கூறுவதால் நிகழ்கால இடைநிலையோடு வந்த வினையெச்சம் என்று கூறல் பொருந்தும்.

3. சேனாவரையர்—தொல், சொல். 228—ம் நூற்பா உரை.

4. சேனாவரையர்—தொல், சொல். 228 உரை

பட்டதாகத் தோன்றவில்லை. இலக்கிய நிலையில் பெரும் பான்மையும் இறவாக் காலத்தில் மட்டுமே பயன்படுவதைப் பார்க்கிறோம். இதனால் வினையெச்சங்கள் நிகழ் காலத்தோடு வருவதில்லை என்பது தெளிவு:

*இரு சொற்கள்*

2.1 செய்தென, செயற்கு என்ற எச்சங்களும், வின், முன், கால், கடை......போன்ற வினையெச்ச நிலைகளும் இரு சொல் நீர்மைய என்பது கண்கூடு. செய்தான் என என்பதே செய்தன என அமைந்துள்ளது. வினையெச்ச வடிவங்கள் வினைமுற்றாக அமைவதோடன்றி, வினையால் அணையும் பெயராகவும் பயன்படுவதை நாம் காண்கிறோம்.
எடுத்துக் காட்டு:

வாய்த்தென 70 : 1 அகம்—கை கூடிற்று ஆக
வார்ந்தன்ன 40 : 1 அகம்— ஒழுகியது போலும்
இருந்தாங்கு 233 : 10 அகம்—இருந்ததைப்போல

2.2 தொல்காப்பியம் கூறுகின்ற பின், முன், கால், கடை போன்ற பொருளுடைய இடைச் சொற்கள் போன்று, பின்பு தோன்றிய வான், பான், பாக்குப் போன்றவை அமைய வில்லை. இவை தமக்கென ஒரு பொருளின்றிச் 'செய' என எச்சத்து வாய்பாட்டு நிலையிலேயே பயன்படுகின்றன.

*வகை*

3 வினையெச்சங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்,
**3.1** இறந்தகால வினையெச்சங்கள். அவை

அ) அடிச்சொல் + கால இடைநிலை + விகுதி
செய் + த் + உ
= செய்து

ஆ) அடிச்சொல் + கால இடைநிலை + (விகுதி)
ஆடு + இ + = ஆடி

இ) அடிச்சொல் +(காலஇடைநிலை)+ (விகுதி)
போ + + ய்
= போய்

என்ற மூன்று நிலைகளில் அமையலாம்.

3.2 இறவாக்கால வினையெச்சங்கள்.

அடிச்சொல் + விகுதி
செய் + அ — செய
செய் + இயர் — செயியர்

3.3 கட்டளை வினையெச்சங்கள்.

அடிச்சொல் + விகுதி
செய் + இன் — செயின்

3.4 எதிர்மறை வினையெச்சங்கள்.

அடிச்சொல் + எதிர்மறை + விகுதி
செய் + ஆ + து = செய்யாது

விளக்கம்

4.1 செய்து—எடுத்துக் காட்டு:

புக்கு — 329 : 13 அகம்
கண்டு — 56 : 12 அகம்
சென்று — 227 : 22 அகம்
சென்று — 27 : 4 அகம்

வாய்பாடு 'செய்து' என அமைந்தாலும் உகரம் ஏறி வருகின்ற க, ட, த, ற நான்கும் அமையும். தொன்னூல் விளக்கம் விகுதிகளை மட்டுமே கூறுகின்றது.

4.1.1 உரையாசிரியர்கள்[5] ஆடி, ஓடி போன்றவற்றை 'செய்து' என்னும் வாய்பாட்டில் அடக்கிக் கூறுகின்றனர். ஆயின் தொல்காப்பியம் வாய்பாட்டில் கூறாது இகர ஈற்று வினையெச்சம்[6] எனக் கூறுவதாலும், அமைப்பு முறையில் செய்தும், ஆடியும் வேறுபடுவதாலும் அவ்வாறு அடக்குதல் பொருந்தும் எனத் தோன்றவில்லை.

4.1.2 'ய்' கர ஈறும் இந்நிலையில் அமையுமென்றே கூறுகின்றனர் ஆயின் இறந்த காலத்தைக் குறித்து 'ய்' கரமே விகுதியாக அமைவதால் அவ்வாறு அடக்குதல் முறை எனத் தோன்றவில்லை.

4.1.3 அளபெடை ஏற்று வருகின்ற வினையெச்சங்களையும் ஆடி, ஓடி போன்றவற்றோடு அடக்குவது பொருந்துமெனத் தோன்றுகிறது.

எடுத்துக் காட்டு:

| | | | |
|---|---|---|---|
| எழுதி | — | 67 : 9 | அகம் |
| நீவி | — | 300 : 7 | அகம் |
| வாங்கி | — | 164 : 1 | அகம் |
| உடைஇ | — | 181 : 5 | அகம் |
| சினைஇ | — | 396 : 15 | அகம் |
| தழீஇ | — | 64 : 12 | அகம் |
| ஆய் | — | 56 : 5 | நற் |
| தூஉய் | — | 358 : 6 | நற் |
| பாஅய் | — | 112 : 7 | நற் |

*4.2 செய்யூ*

இறந்தகால வினையெச்சமாக அமைகிறது. இரட்டித்தலை இறந்த காலமாகவும் ஊகாரத்தை விகுதியாகவும்

---

5. அ. சேனாவரையர்-தொல். சொல் 228 உரை.
   ஆ. நச்சினார்க்கினியர்-தொல். சொல் 230 உரை.

6. இனி அணி என்னுங்காலையும் இடனும் வினையெஞ்சு கிளவியும் சுட்டும்அன்ன......தொல் எழு 236.

கொள்ளலாம். அல்லது அடிச்சொல் + (கால இடைநிலை) + விகுதி என்றும் கொள்ளலாம்.

காணூஉ 279 : 2 அகம்

நாகூஉ 248 : 16 அகம்

பொரூஉ 113 : 10 அகம்

### 4.3 செய்பு

காலம் பற்றிக் கூறும்போது உரைக்கப்பட்டுள்ளது (1.1 பார்க்க).

### 4.4 செயியர்

செய்யியர், இயர் எனவும் சுட்டப்படுகிறது. இறவாக் கால வினையெச்சமாக அமைகின்றது.

அடிச்சொல் + விகுதி

உணீஇயர் — 59 : 7 அகம்

செலீஇயர் — 300 : 5 அகம்

பெறீஇயர் — 222 : 12 அகம்

காணியர் — 248 : 5 நற்

'செலீஇயர் என்னும் இவ்வாய்பாட்டு வினையெச்சம் தொழிற்பெயராகவும், இயர் என்னும் வியங்கோளாகவும் பயன்படுகின்றது.

செலீஇயர் 326. 8 அகம் — செல்லுதல்

செலீஇயர் 113. 27 அகம் — செல்லுவதாக

### 4.5 செய்யிய

இறவாக் கால வினையெச்சம்

காணிய 176. 26 அகம்

தீரிய 357 : 3 அகம்

பெறீஇய 242 : 15 அகம்

4.6 செயின்

கட்டளை வினையெச்சம். முன்பு இறவாக் கால நிலையில் பயன்பட்டது. பின்பு இறந்தகால இடை நிலையோடும் வருகின்றது.

அறியின் 49. 13 அகம்

ஏகின் 311. 13 அகம்

கூறின் 241. 3 அகம்

புணர்ந்தால் 7. 2. 2 சிலம்பு

மறைத்தால் 7. 37. 4 சிலம்பு

திரு. அருணாசலம்[7] ஐந்தாம் வேற்றுமை உருவாகிய 'இன்'னையும், இதனையும் தொடர்பு படுத்துகின்றார். அது நினைக்கற்பாலது.

4 6.2 செய்தால் என அமையும் 'ஆல்' என்பதும் கட்டளை வினையெச்சமாக அமையலாம். இங்கு ஆல் என்பது ஆனால் என்பதின் சுருங்கிய வடிவ'மாகக் கொள்ளலாம். 'ஆ' அடிச்சொல்லாகவும் 'ல்' வினைச்யெச்ச விகுதியாகவும் கொள்ளலாம்.

4.6.3 'ஏல், என்பதும் இதனைப் போன்றே அமைகின்றது.

உண்டேல் 368 குறள்

உண்டேல் 14. 57 சிலம்பு

---

7. verbal participles in Tamil......P, Arunachalam Proceedings of the First International Conference —Seminar of Tamil Studies, kuala Lumpur vol. II, p 511

இது பெயரோடும் வருவதால் 'ஏல்' என்பதில் 'ஏ' அடிச்சொல்லாகவும் 'ல்' வினையெச்ச விகுதியாகவும் கொள்வது பொருந்தும்.

*நீயேல்* 7.48.3 சிலம்பு

*4. 7 செய*

*இறவாக் கால வினையெச்சம்*

*அறிய* 95. 3 அகம்
*அறிய* 160. 17 அகம்
*கூற* 314. 15 அகம்

*அகநானூற்று[8] வினையெச்சங்கள் அடிப்படையில் பார்க்கும் போது, இலக்கியங்களில் இவ்வினையெச்சம் தான் மிகுதி யாகப் பயிற்சியில் அமையும் போல் தோன்றுகிறது.*

*4.8 செய்யா*

தொல்காப்பியம் வாய்பாட்டில் இவ்வினையெச்சம் இல்லை. ஆயின் எழுத்ததிகார நூற்பாவில் இவ்வினையெச்சம் குறிப்பிடப்பட்டுள்ளது.

> செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
> அவ்வியல் திரியாது என்மனார் புலவர்
>
> —தொல். எழு 223

இவ்வினைச்சம் இறந்தகால வினையெச்சமாகவும், எதிர்மறை வினையெச்சமாகவும், பெயரெச்சமாகவும் பயன்படுகின்றது. மிகுதியாகச் 'செய்து' என்னும் பொருளில் பயன்படுவதையே காண்கிறோம்.

---

8. அகநானூற்றில் வினையெச்சங்கள்: அ. செய 325 ஆ. செய்து 258 இ. (ஆடி) இ 181 ஈ செய்யாது 63 உ. செய்பு 57 ஊ. செயின் 49 எ. (நசைஇ) இ 41. ஏ செய்யா 15 ஐ. செய்யூ 11 ஒ. செயிய 10 ஓ. மார் 10 ஔ. செயியர் 8

கிளையா 16. 15 அகம்—கீறி
அமையா 27. 14 அகம்—அமையாது
பிழையா 78. 19 அகம்—பெயராமல்
பிழையா 188. 4 அகம்—வழுவாத

4.9 செய்பான் —இறவாக்கால வினையெச்சம்
அலைப்பான் 28 நான்மணி கடிகை
கற்பான் 2070.1 சிந்தாமணி

4.10 செய்பாக்கு—இறவாக்கால வினையெச்சம்
தருபாக்கு 11.1 கார் நாற்பது

4.11 செய்வான்—இறவாக்கால வினையெச்சம்
மாய்வான் 7.8.1 சிலம்பு
அறிவான் 3.367.2 கம்பன்
உய்வான் 1.616.4 கம்பன்

4.12 மல்—ஆமல்—எதிர்மறை வினையெச்சம்
ஞெகிழாமல் 1.61 சிலம்பு
கரையாமல் 18.26 சிலம்பு

4.13 ஆது—எதிர்மறை வினையெச்சம்
துஞ்சாது 298. 23 அகம்
ஓவாது 139. 4 அகம்
பிரியாது 51. 10 அகம்

4.14 மை — எதிர்மறை வினையெச்சம்
வாழாமை 3.160 சிலம்பு

4.15 மார் — இறவாக் கால வினையெச்சம்
களைமார் 107.3 அகம்
கொண்மார் 77.7 அகம்
பேண்மார் 35.7 அகம்

இவ்வாறு மரபிலக்கணத்திலும் இலக்கியங்களிலும் வினையெச்சங்கள் அமைகின்றன.

*பின்குறிப்பு—:*

## வினையெச்ச வாய்பாடுகள்

*செய்து செய்யூச் செய்யு செய்தெனச்*
*செயியர் செய்யிய செயின் செயச் செயற்கென*
*அவ்வகை ஒன்பதும் வினை யெஞ்சு கிளவி*
—தொ. சொ. 228

*பின் முன் கால் கடை வழி இடத்து என்னும்*
*அன்ன மரபின் காலங் கண்ணிய*
*என்ன கிளவியும் அவற்றியல் பினவே*
— தொ. சொ. 299

*செய்து செயச் செய்யாச் செய்யிய செய்தெனச்*
*செய்பு செயின் செயற்கு என்பனவும் மெய்குழலாய்*
*பின் முன் பான் பாக்கும் பிறவும் வினையெச்சச்*
*சொல்முன் வகுத்தோர் துணிவு* — நேமி, சொ 43

*தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை*
*ஒழிய நிற்பது வினையெச்சமே* — நன். 342

*செய்து செய்யூ முதல வாய்பாட்டிற்*
*தன்வினை பிறவினை ஆயிரு வினையொடு*
*முடியும் முறையது வினைசெய்யம்மே* — இ. வி. 245

*செய்து செய்பு செய்யாச் செய்யூச்*
*செய்தெனச் செயச் செயின் செய்யியர்*
*வான் பான் பாக்கின வினையெச்சம்பிற*
*ஐந்தொன்று ஆறும் முக்காலமும் முறைதரும்*
— நன். 343

## வினையெச்ச

| எண் | தொல் | நேமி | நன் | சேனா | நச் | இச் | தொ. வி. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செய்து | √ | √ | √ | √ | √ | உ |
| 2 | செய்யூ | | ,, | ,, | ,, | ,, | ஊ |
| 3 | செய்பு | ,, | ,, | ,, | ,, | ,, | பு |
| 4 | செய்தென | ,, | ,, | ,, | ,, | ,, | உவ்வொடு என |
| | | | | ,, | ,, | ,, | |
| 5 | செயியர் | | செய்யியர் | ,, | ,, | ,, | இயர் |
| 6 | செய்யிய | ,, | ,, | ,, | ,, | ,, | இய |
| 7 | செயின் | ,, | ,, | ,, | ,, | ,, | இன்இல் |
| 8 | செய | ,, | ,, | ,, | ,, | ,, | அ |
| 9 | செயற்கு | ,, | ,, | ,, | ,, | | |
| 10 | பின் | | | | | | |
| 11 | முன் | | | | | | |
| 12 | கால | | | | | | |
| 13 | கடை | | | | | | |
| 14 | வழி | | | | | | |
| 15 | இடத்து | | | | | | |
| 16 | தொல்-எழு 222 | செய்யா பான் | √ ,, | √ | √ | √ | ஆ |
| 17 | | | ,, | | | | |
| 18 | | பாக்கு | வான் | ,, | ,, | | |
| 19 | | | | | ,, | | |
| 20 | | | | ஆன் | | | |
| 21 | | | | உம் | | | |
| 22 | | | | ஆல் | | | |
| 23 | | | | மல் | | | ஆமல் |
| 24 | | | | மை | | | ஆமை |
| 25 | | | | | ஏல்ஏன் | | |
| 26 | | | | | வாக்கு | | |
| 27 | தொல்-எழு 236 | | | | | | இ |
| 28 | | | | | | | ஆது |
| 29 | | | | | | | |
| 30 | | | | | | | |

## அட்டவணை

| மு வீ | இ. காலம் | இறவாக் காலம் | எதிர் மறை |
|---|---|---|---|
| √ | | | |
| ,, | √ | | |
| ,, | ,, | √ | |
| ,, | ,, | | |
| ,, | | | |
| ,, | | ,, | |
| ,, | | ,, | |
| ,, | | ,, | |
| ,, | | ,, | |
| | √ | | √ |
| | | ,, | |
| | | ,, | |
| | | ,, | |
| | | ,, | |
| | | | ,, |
| | | | ,, |
| | | ,, | |
| | ,, | | |
| | | | ,, |
| மார் ய் | ,, | ,, | |

தொல்-தொல்காப்பியம்
நேமி-நேமிநாதம்
நன்-நன்னூல்
சேனா-சேனாவரையர்
நச்-நச்சினார்க்கினியர்
இ வி-இலக்கணவிளக்கம்
தொ. வி-தொன்னூல் விளக்கம்
மு. வீ.-முத்துவீரியம்
இ. காலம்-இறந்தகாலம்

வான், பான்—என்பதை 'ஆன்' என்று கூறுவர் உரையாசிரியர்.

செய்து செய்யூச் செய்யாச் செய்பு
செய்தெனச் செயச் செயின் செய்திய செய்யியர்
வான் பான் பாக்கின வினையெச்சம் பிற
ஐந்து ஒன்று ஆறு முக்கால முறைதருமே
— இ. வி 246

வினையெச்சங்கொள் விகுதி இ உ
உவ்வோடு எனவும் ஊ பு ஆ இறப்பே
அ இரு கருத்தா அணையின் நிகழ்வே
ஒரு கருத்தாவும் ஓர் இடத் திரண்டு
மியை அ அன்றி இல் இன் இய இயர்
வான் பான் பாக்கு வரும் பொழுதாம் பிற
—தொ. வி. 119

என ஒழித்து ஒழித்த இறப்பெச்சத்தும்
வான் பான் பாக்கென வரு மூன்றற்கும்
ஏற்கும் ஒரு கருத்தா இரண்டும் பிறவே
- தொ. வி 120

எதிர்மறை எச்சத்து இயலும் விகுதி
ஆமல் ஆது ஆமை ஆ என நான்கே
— தொ. வி. 121

செய்து செய்யூ செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கு என
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி
— மு. வீ. வி 29

பின் முன் கால் கடை யொடு வான் பானிடம்
அன்ன கிளவியும் அவற்றியல் பினவே
— மு. வீ. வி 30

# தொல்காப்பியரின் சொற்பாகுபாடு 5

*1. சொல்*

*தொல்காப்பியம் சொல்லைக் கிளவி, சொல், மொழி என்று மூன்று சொற்களால் குறிக்கின்றது. இவை வினையடியினின்றும் எழுந்தவை. முதற்சொல் 'வி' என்னும் தொழிற் பெயர் விகுதி ஏற்றது. ஏனைய முதனிலைத்தொழிற் பெயர்கள். இம்மூன்றினுள் கிளவி என்பது, எழுத்தையும் சொல்லையும் தொடரையும் குறிக்கின்றது.[1] அவை ஒரே மாதிரியாக நூல் முழுவதும் பயன்படுத்தப்பட்டன என்று கூறுவதற்கில்லை. தம்முள் பொருள் வேற்றுமையின்றியும் வழங்கப் பட்டுள்ளன.[2] தொல்காப்பியத்தில் மிகுதியாகக் கிளவி (368 இடங்கள்)யும் அடுத்த நிலையில் சொல் (167 இடங்கள்)லும் குறைந்த அளவில் மொழி (135 இடங்கள்)[3]யும் பயிலப்பட்டுள்ளன.*

---

1. அ. சகரக்கிளவி (462) அகரக்கிளவி (226), உகரக் கிளவி (410)
   ஆ. நாழிக்கிளவி (240), புளிமாக்கிளவி (244)
   இ. பால் மயங்குற்ற ஐயக்கிளவி (506)
2. சாரியை மொழியே (119)
   சாரியைக்கிளவி (201)
   வேற்றுமைச் சொல்லே (591)
   வேற்றுமைக்கிளவி (55?)
3. கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தொல்காப்பியச் சொல்லடைவு (வெளியிடப்படாதது) கிளவி ப, 135, 136, சொல், ப. 173, மொழி; ப. 302.

**2. இலக்கணம்**

பொதுநிலையில் சொல்லுக்கு இலக்கணம் கூறும் போது மரபின் வழி நின்று

*உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே*
*அஃறிணை என்மனார் அவரல பிறவே*
*ஆயிரு திணையின் இசைக்கு மன் சொல்லே* (434)

என ஒழுக்க அடிப்படையில் திணையைப் பகுத்து அத்திணைக் கண்தோன்றுவது சொல் எனப் பேசுகின்றது.

புறநிலை அடிப்படையை வைத்து இலக்கணம் கூறும் போது,

*பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்*
*சொல்லின் ஆகும் என்மனார் புலவர்* (641)

என இரு தன்மையைக் கூறுகின்றது. சொல்லுக்கு அடிப்படை பொருண்மைதான். அதனால்தான் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (640) என்று முன்னும் விளக்குகின்றது. பொருண்மை நிலையை மேலும் இருவகைப் படுத்தி 'தெரிபு வேறு நிலையல், குறிப்பில் தோன்றல்' (642) எனத் தொல்காப்பியம் தெளிவு படுத்துகின்றது, சொன்மை என்பது சொல்லின் புறவடிவத்தைத்தான் (form) உணர்த்து கின்றது என்பது வெளிப்படை.

**3, சொல்வகை**

சொற்கள் பலவகைப்படும்[4]. தொல்காப்பியம் வழக்கு, செய்யுள் என்ற இரண்டையும் நோக்கி இலக்கணம் அமைத்த

---

4 இயற்றமிழ்ச் சொல் செய்யுள் ஈட்டச்சொல். இசைத்தமிழ்ச் சொல், கூத்துச் சொல், இலக்கியச் சொல் எனப் பலவாருகப் பகுக்கலாம் எனத் தோன்றுகிறது,

''இனிச்சொல் வருமாறு;- அது மூன்று வகைப்படும் உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல்லென. அவை நெஞ்சோடு கூறல், கேட் போர்க் குரைத்தல், தானேகூறல் என்பன என்னை? நெஞ்சோடு கூறல், கேட்போர்க் குரைத்தல், தஞ்சம். வரவறிவு, தானே கூறலென்றம் மூன்

காரணத்தால் அவற்றின் செயற்பாடும் பயனும் கருதி இயற்றமிழ்ச் சொற்கள் எனப்பெயர். வினை, இடை, உரி என்ற நான்கையும்[5], செய்யுள் ஈட்டச்சொல்லாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நான்கையும்[6] வகுத்துக் கூறுகின்றனர்.

### 3.1 சொல்லின் வடிவமும் அமைப்பும்.

சொல்லின் மிகச் சிறிய வடிவம் ஓரெழுத்து[7] என்பது வெளிப்படை. ஒன்று, பல என்பது வடமொழிக் கொள்கை என்று எண்ணுவதும் விவாதிப்பதும் உண்டு. ஆயின் தொல்காப்பியம் இங்கு மட்டுமன்றிக் குற்றியலுகரப் புணரியலிலும் (406, 411, 417) ஈரெழுத்து மொழியைச் சுட்டுவதால் இது தொல்காப்பியத்தின் எண்ணமே எனவும் குற்றியலுகரத்தைப் பொறுத்த நிலையில் ஈரெழுத்து ஒரு மொழியும்

---

றென்ப செம்மைச் சொல்லே'' என்றாராகலின், (இதைக் கூத்துச் சொல் எனக் கூறலாமா?)—சிலம்பு: 3. 13, அடியார்க்கு நல்லார் உரை.

''சொல்வகை நான்கு வகைப்படும்—சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என'' (இவற்றை இசைத்தமிழ்ச் சொற்களெனக் கூறலாமா?) சிலம்பு 3. 13 அடியார்க்கு நல்லார் உரை.

இலக்கிய நிலையில் பேச்சுச் சொல்லாக அமையும் போது மூவகையாகக் கூறுகின்றனர்.

''சொல்லின் குழு எனவே 1. செஞ்சொல், 2. இலக்கணச்சொல், 3. குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின'—திருக்குறள் 711 பரிமேலழகர் உரை.

5. ''சொல்லெனப் படுப பெயரே வினை என்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே'' (643)

''இடைச் சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்று வழி மருங்கில் தோன்றும் என்ப'' (644)

6. இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென் றனைத்தே
செய்யுள் ஈட்டச் சொல்லே'' (880)

7. ''ஓரெழுத் தொரு மொழி ஈரெழுத் தொருமொழி இரண்டிறந்
திசைக்குந் தொடர் மொழி உளப்பட மூன்றே மொழிநிலை தோன்
றிய நெறியே'' (45)

தேவைப்படுகிறது என்பதையும் உணருகிறோம்[8]. பின்பு இப் பாகுபாடு தனிமொழி, தொடர்மொழி என்ற நிலையில் அமைந்தது எனக் கொள்ளலாம்.

### 3.2 புணரியல் அடிப்படை.

புணர்ச்சிக்காகவே உயிரிறுசொல், மெய்யிறு சொல் என எழுத்தடிப்படையில் சொற்கள் உரைக்கப் படுகின்றன. அதோடு நிறுத்த சொல், குறித்து வருகிளவி என்ற இட அடிப்படையிலும் பெயர்ச் சொல்லோடு பெயரும் வினைச் சொல்லோடு வினையும் தம்முள் ஒன்றுபட்டும் மாறியும் புணரும் நிலையில் சொல்லடிப்படையிலும் அமைக்கப்படு கின்றன.

3.3 பொருள்களை இரண்டு தலையில் விளக்கவியல் மொழியியலார் (descriptive linguists) பகுப்பர். 1. அடிச் சொல்லாக அமைந்த உருபன்கள் (root morphemes or semantemes). 2. ஒட்டுகளாக அமைந்த உருபன்கள் (non root morphemes or affixes). தமிழில் தனிச் சொல்லில் அமைந்த அகப் புணர்ச்சி (internal sandhi) அல்லது தொடர்ச் சொற்களில் அமைந்த புறப் புணர்ச்சி (external sandhi) என்ற இரு நிலைகளில் அமைக்கும்போதும் சேர்வன அடிச் சொற்களும் ஒட்டுகளுமே.

அதனால்தான் நாற் சொற்களில் உரிச்சொல்லை அடிச் சொற்களாக அமைந்த உருபன்கள் என்றும், அவற்றின் அடிப்படையில் பெயர்ச் சொற்கள் வினைச் சொற்கள் எனத் தொழில் அடிப்படையைக் கொண்டு இடைச் சொல்லை ஒட்டு

8. முற்றியலுகர ஈரெழுத் தொருமொழிகளைப் பற்றி வரையறை யிருந் தமையால்
''உச்சகாரம் இருமொழிக் குரித்தே'' (75)
''உப்பகாரம் ஒன்றென மொழிப
.............................. (76)
என்பன போன்ற நூற்பாக்கள் தோன்றின.

களாக அமைந்த உருபன்கள் என்றும் கூறுகின்றவர்களும் உண்டு.[9]

### 3.4 சொற் பிறப்பியல் அடிப்படை.

செய்யுள் ஈட்டச் சொற்களாக அமைந்த இயற் சொல், திரி சொல், திசைச் சொல், வடசொல் என்பன சொற் பிறப் பியல் அடிப்படையில் பெயர் கொடுக்கப்பட்டன என்று தோன்றுகிறது.[10] இயற் சொல்லை அம்மொழியில் இயற்கை யாகத் தோன்றி வழங்குவன (native word) என்றும் திரி சொல்லை அம்மொழியின் கண் உறழ்ந்து வருவன (free variation) என்றும் திசைச் சொல்லை ஒரு மொழி பேசப்படும் பகுதியில் இடத்துக்கு இடம் வேறுபட்டு வழங்குவன (regional dialects) என்றும் வட சொல்லை வடமொழிச் சொற்கள் (borrowed from sanskrit) என்றும் கொள்ளல் வேண்டும். திரி சொல்லைக் கிளைமொழிச் சொற்கள் என்றும் திசைச் சொல்லை ஏனைய திராவிடமொழிச் சொற்கள் என்றும் கொண்டால் பொருந்துமா என்ற வினவும் எழுகின்றது.

9. Wiccol — root according to Tolkaappiyam den otes... It is important to note that text roots according to him can occur both as verb roots and noun roots. This is of fundamental importance as the distinction between noun and verb is syntactic rather than monphological, inspite of attempts made by the speakers to differentiate them. Non-root monphemesitaiccol, மீனுட்சிசுந்தரன் ப. 75-76

10- தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையிலும் நான்காக வகுக்கப்பட்டன, ஆதலால் தன்சொல் அயற்சொல் என்கிற முறைபில் தென்சொல் வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன் சொற்குள் செந்தமிழ். கொடுந்தமிழ் என்கிற முறையில் நாட்டுச்சொல், திசைச்சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரிபும் பற்றி இயற்சொல், திரிசொல் என்ற பாகுபாடும் தோன்ற இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கமைந்தன - தேவ நேயப்பாவாணர். (தொல்-சொல்-சேனு. உரை ப203.

### 3.5 ஏனைய அடிப்படைகள்

இவை போக திணை, பால், எண் என்ற இவற்றின் அடிப் படையிலும்,[11] இட அடிப்படையிலும்[12] வினை அடிப்படை யிலும்[13] சொற்கள் வகைப் படுத்தப் பட்டனவாக அறி கின்றோம்.

## 4. ஒரு சொல்லின் வகை

தொல்காப்பியம் சொல்லைப் பல நிலைகளில் வகைப் படுத்தியுள்ளதைக் கண்டோம். ஒரு சொல்லின் உட்பிரிவுகளைப் பெயர்ச் சொல்லில் மட்டும் உணர்த்த முயல்கின்றேன். இது போன்று வினை இடைச்சொற்களின் உட்பிரிவுகளையும் நோக்கு தல் பொருந்தும்.

### 4.1 பெயர்

வேற்றுமை யுருபு ஏற்கும் நிலையுடையதும் (553) கால இடைநிலை ஏற்காததுமாய் (554) அமைபவை பெயர்ச் சொற்களாக அமைகின்றன.

பெயர்களை வகைப்படுத்தும்போது வடிக்கும் போல் மரபு நிலையில் நின்று உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர் கள், இருதிணைப் பெயர்கள் (விரவுப் பெயர்கள்) என வகைப் படுத்துகின்றனர்.

---

11 ''ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற் சொல் உயர்திணை யவ்வே'' (485)
''ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற் சொல் அஃறிணை யவ்வே'' (486)
''பாலறி கிளவி'' (494)
''பால் மயக்குற்ற ஐயக் கிளவி''; (506)
''பன்மைக் கிளவி'' (500)

12 ''தன்மைக் கிளவி'' (694)
''முன்னிலை மொழி'' (265)
''படர்க்கைச் சொல்'' (690)

13 ''ஒருவினைக்கிளவி—வேறுவினைக்கிளவி'' (558)
''வேறு வினைப் பொதுச்சொல்'' (529)

இப்பெரும் பகுப்பின்றி உட்பகுப்புகளாகப் பொருள் அடிப்படையில் பெயர்ச் சொற்களை வகைப்படுத்தியுள்ளார். அவை: 1. நிலப் பெயர். 2. குடிப் பெயர், 3. குழுவின் பெயர், 4. வினைப் பெயர், 5. உடைப் பெயர் (650), 6. பண்புப் பெயர் (568—3, 619, 625, 650) 7. முறைப் பெயர் (621, 650), 8. சினைப் பெயர் (650) 9. திணைப் பெயர் (650), 10. ஆடியல் பெயர் (650), 11. எண்ணியல் பெயர் (650), 12. இயற்பெயர் (521), 13. சினை முதற்பெயர் (659), 14. சுட்டு முதற்பெயர் (612, 627, 633), 15. வினாவின் பெயர் (622, 633), 16. இடக்கர்ப் பெயர் (250) 17. படர்க்கைப்பெயர் (320), 18. முன்னிலைப் பெயர் (320), 19. மரப் பெயர் (181, 217, 313, 386, 415, 416), 20. பின்னிடப் பெயர் (574), 21. அளபெடைப் பெயர் (620, 626, 634), 22. கிளைப் பெயர் (605, 613), 23. திசைப் பெயர் (201), 24. உணவுப் பெயர் (308), 25. நாட்பெயர் (331, 286), 26. அளவுபெயர் (168), 27. நிறைப் பெயர் (167), 28. திங்கள் பெயர் (248, 286) இவை போல் இன்னும் பல, இவ் உட்பகுப்புகள் தேவையா? என்ற வினா எழுவது இயல்பு. ஆயின் ஒரே ஈற்றையுடைய சொல் மரப்பெயராயின் புணரும் நிலையும் விலங்குப் பெயராயின் புணரும் நிலையும் சுவைப் பெயராயின் புணரும் நிலையும் வேறுபடுகின்றது.

மா + கோடு — மான் கோடு (மா — விலங்கு)

மா + கோடு — மாங்கோடு (மா — மரம்)

புளி + கோடு — புளியங் கோடு (மா — மரம்)

புளி + கூழ் — புளிங் கூழ் (புளி — சுவை)

இவை போன்றே எண்ணுப் பெயர்களும் திசைப் பெயர்களும் தமக்கெனத் தனித்த புணர்ச்சி விதிகளைக் கொண்டுள்ளன. இவற்றினின்றும் ஒரு சொல்லின் உட்பகுப்பு காரண காரியங்களோடேயே அமைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவு.

5. முடிபு.

தொல்காப்பியத்தில் சொற் பாகுபாடு ஒழுக்க அடிப்படையிலும் அதன் காரணமாகத் திணை, பால், எண், இடம் என்ற நிலையிலும் புறநிலை அடிப்படையில் புணர்ச்சிக்கு அமையும் சொற் பகுப்பிலும் பயன்நிலை அடிப்படையில் நான்காகவும் பிறப்பியல் அடிப்படையில் நான்காகவும் பொருள் அடிப்படையில் பலவாகவும் வகைப்படுத்தப்பட்டதாக நினைக்கின்றேம்.

# மாத்திரை 6

*மாத்திரை என்ற சொல்லுக்குப் பொருள்*

'மாத்திரை' என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி 1) கணப்போது 2) கண்ணிமைத்தல், கை நொடித்தல் அளவான காலம் 3) செய்யுளில் வரும் எழுத்தொலி அளவு 4) குற்றெழுத்து 5) குருவிற் பாதி 6) காலவிரைவு 7) அளவு 8) மிகச்சுருக்கமான இடம் 9) குளிகை 10) துறவியின் தண்ட கமண்டலம் 11) பாக்கியம் என்ற பல பொருட்களைத் தருகின்றது.

*இலக்கியச் சான்றுகள்*

'பகலுந்துஞ்சான்' என்ற சிலப்பதிகார அந்தி மாலைச் சிறப்பு செய்காதை 81-ஆம் வரிக்குப் பொருள் எழுதுகின்ற அரும்பத உரையாசிரியர் 'ஒரு மாத்திரைப் பொழுதும் துஞ்சாளுய்' என 'கணப்போது' என்ற பொருளில் பயன்படுத்துகின்ருர். 'கேட்டல் மாத்திரை யல்லது' எனப்புறம்216—1லும் இமைத்தோர் விழித்த மாத்திரை ஞெரேரென எனப் புறம் 376—7லும்

*பாத்திரம் பெற்ற மணமகிழ் மடவாள்*
*மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி*

என மணிமேகலை 11 : 59—60லும் 'அளவு' என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. 'சொல்லும் மாத்திரையிற்' 399 : 2, மாத்திரை அளவில்' 1—797 1, 'வருகதேர் எனும் மாத்திரை' 3—377—1, 'ஏயெனும் மாத்திரை' 5—809—1,

5—902—4, 6—2095—2, 'நிலையும் மாத்திரை' 5—1229—3, 'திணையின் மாத்திரை' 6—1551-4, 'கால மாத்திரை' 6—3479—1, எனப் பத்து இடங்களில் அளவு, கால விரைவு, ஒலியளவு, பொழுது என்ற பொருள்களில் கம்பர் பயன் படுத்தியுள்ளார்.

*இலக்கியத்தில் ஆளப்பட்ட அகர வரிசைக்கு வராத பொருள்கள்*

ஆயின் 'முலைக் கோள் விடா மாத்திரை ஞெரேரென' என்ற பொருநராற்றுப்படை 141-ஆம் வரிக்குப் பொருள் எழுதுகின்ற நச்சினார்க்கினியர் 'முலையுண்டலைக் கைவிடாத இளைய பருவத்தே' எனப் 'பருவம்' என்று பொருள் தரு கின்றார். 'பணிவில்சீர் மாத்திரையின்றி நடக்குமேல்' என்ற நாலடியார் 242-ஆம் பாட்டு 'வரம்பு அல்லது எல்லை' என்ற பொருளைத் தருகின்றது. 'புல்லிடைப் பெயரா மாத்திரை' என்ற திணை மாலை நூற்றைம்பதின் 143-ஆம் பாடல் 'வேளை' என்ற பொருளைத் தருகின்றது. 'மாத்திரை யறிந்து மயங்கா மரபின்' என்ற சிலப்பதிகார ஊர் காண்காதை 149-ஆம் வரி 'தாள அறுதி' என்ற பொருளில் குறிப்பிடுகின்றது. இதற்கு இரண்டரை நாழிகையை இருபத்தெட்டுக் கூறிட்டு ஒரு கூறென்று அடியார்க்கு நல்லார் உரை தருகின்றார். அதன்படி மாத்திரை 2.14 நிமிடங்களை இசை நிலையில் குறிக்கின்றது.

*ஆத்திரை தருப்பணம் மாத்திரை கூட்டி*
*உண்புழி விக்கிக் கண்புகச் செருமி*

என்ற பெருங்கதை (2—9—250—251) வரிகள் மருந்தாகிய மாத்திரையைக் குறிக்கிறது.

'செம்பொன் மாத்திரை செரீஇய காதினர்' என்ற அடியில் காதணி என்ற பொருள் குறிக்கப்படுகின்றது. இவ் வாறு பருவம், வரம்பு, வேளை, தாள அறுதி, மருந்தாகிய மாத்திரை, காதணி என்ற பொருள்களை அகராதி தராமை தமிழ் மொழிக்கு வரலாற்று முறையில் ஓர் அகர வரிசை தேவை என்பதைச் சுட்டுகின்றது.

*மாத்திரை*

இங்கு 'மாத்திரை; என்ற சொல்லுக்கு 'ஒலி எழுத்தின் அளவு' அல்லது 'ஒலி எழுத்தின் தோன்றி முடியுங் காலம்' என்ற பொருளேத் தருகின்ற இலக்கண மாத்திரை பற்றியே குறிப்பிடுகின்றேன். இதனைக் கண்ணிமை, நொடி என்ற சார்த்தியளத்தல் முறையில் அளக்கின்றனர். இது அளவை ஏழனுள் ஒன்றெனை உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

*தன்மை*

பரிமேலழகர் தம் 27-ஆம் குறள் உரையில் தன் மாத்திரைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். அதற்குப் பஞ்ச மகா பூதங்கட்குக் காரணமான மூலப் பொருள்கள் என்ற விளக்கந் தரப்படுகின்றது. அதுபோன்று எழுத்துக்களுக்கு மூலப்பொருளாய் மாத்திரை அமைகின்றது என்று கூறலாம். முதல் இரண்டு சூத்திரங்களில் முதல் சார்பெழுத்துக்களைப் பற்றிப் பேசுகின்ற தொல்காப்பியம் 3, 4, 5, 6, 7 ஆகிய சூத்திரங்களில் மாத்திரைகளைப் பற்றிப் பேசிவிட்டு, பின்பு உயிர் மெய் என்ற எழுத்துக்களைப் பற்றிப் பேசுகின்றது. வழக்கு மொழிக்கு மூலப்பொருளாய் அமைகின்ற மாத்திரை செய்யுள் மொழிக்கும் முதல் உறுப்பாய் அமைகின்றது. அதனால்தான் செய்யுளியல் முதல் சூத்திரம் 'மாத்திரை எழுத்தியல் அசைவகை எனு' என்று தொடங்குகின்றது. இதனை விளக்கப் புகுந்த உரையாசிரியர் "மற்றிது முறையாய வாறென்னையோ வெனின் மாத்திரை எழுத்தினது குணமா கலானும், அசையுஞ் சீரும், அடியுந் தூக்கும், பாவும் வண் ணங்களுமென்று இன்னோரன்ன வெல்லாம் மாத்திரை நிமித்த மாகத் தோன்றுவன ஆதலானும் அது முன் வைத்தான் என்று குறிப்பிடுகின்றார். எழுத்து நிலையில் வழக்கு மொழிக் கும் செய்யுள் மொழிக்கும் பார்க்கின்ற கோணங்கள் வேறு பட்டாலும் (உ-ம்) குற்றியலுகரம் வ. மொ. 6, செ. மொழி 7. ஒற்றளபெடை வ. மொ. 42. நன். 11. இ வி, செ. மொ. 22. மாத்திரை நிலையில் பெரும்பான்மை வேறுபாடில்லை என்று கூறலாம். மாத்திரை எழுத்தின் ஒலி அளவைக் குறிப்

பதோடு மட்டுமின்றி பொருள் தெரிவதற்கும் வேறுபாட்டிற் கும் காரணமாக அமைகின்றது என்பதை,

அஃதிவண் நுவலா எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே
— தொல். எழுத்து. 103

'மெய்தெரி' என்றதனுன் 'முற்கு' முதலியன முயற்சி யாற் பிறக்குமெனினும் பொருள் தெரியா நிலைமைய ஆகலின் அவற்றிற்கு அளபு கூருராயினர் என்பது பெறப்பட்டது எனக் குறிப்பிடுகின்ருர் இளம் பூரணர்.

மாத்திரையின் அளவு

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே
—தொல். எழுத்து 7

என்ற நூற்பாவிற்கு உரை எழுதுகின்ற நச்சினுர்க் கினியர் கண்ணிமை நொடி என்னும் பல பொருள் ஒரு சொற்கள் ஈண்டுத் தொழின் மேலும் ஓசை மேலும் முறையே நின்றன. ஆசிரியர் எல்லாரும் எழுத்திற்கு இவையே அளவாகக் கூறலின் இவரும் கூறினுர். இயற்கை மகன் தன் குறிப் பினுனன்றி இரண்டிமையும் ஒருகாற் கூடி நீங்கின காலக் கழி வும் 'அ' எனப் பிறந்த ஓசையது தோற்றக் காலக் கழிவும் ஒக்கும். இக்கண்ணிமையினது பாகம் மெய்க்கும் சார் பிற் ருேற்றத்திற்கும் இதன் பாகம் மகரக் குறுக்கத்திற்கும் கொள்க. இக்கண்ணிமை இரட்டித்து வருதல் நெடிற்கும் அது மூன்றும் நான்குமாய் வருதல் அளபெடைக்குங்கொள்க. அதுபோலவே நொடித் தற்ருெழிலிற் பிறந்த ஓசையது தோற்றக் கேட்டுக் காலக்கழிவும் 'ஆ' எனப்பிறந்த ஓசையது தோற்றக் கேட்டுக் காலக் கழிவும் ஒக்கும். ஏனையவற்றிற்கும் கூறியவாறே கொள்க என்றெழுதுகின்ருர். இதனையே நன் னூலர் 'இயல்பெழுமாந்தர் இமை நொடி மாத்திரை' என்று பேசுகிருர். இதனையே ஏனைய மரபிலக் கணங்களும் ஏற்றுக் கொள்கின்றன. ஆயின் இங்கு நொடி என்பது நொடித்தற்

றெழிலையன்று, நொடித்தலால் பிறந்த ஓசையே. இதனை உணராது நொடித்தல் தொழிலையே நான்காகப் பகுத்து,

உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே —மு. வீ. 98

என்று பிற்காலத்தார் நூற்பா செய்து விட்டார்கள். இது போன்ற முற்காலத்தார் கருத்தைப் பிற்காலத்தார் பிழைபட உணர்ந்து நூற்பா செய்கின்ற நிலைகள் சிலவற்றைக் காண்கிறோம். இந்நொடித்தலால் வருகின்ற ஓசையே மாத்திரை என்பதற்கு மலைபடுகடாம் சான்று தருகின்றது. 'நொடிதருபாணிய பதலையும் (மலைபடுகடாம்—11) 'மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடையது' என எழுதுகின்றார்.

மாத்திரை வருத்தனம், மாத்திரைச் சுருக்கம் என்ற சொல்லணிகள் மாத்திரையின் அடிப்படையில் அமைந்தவை என்பது எண்ணத் தக்கது. குறத்தி குறி சொல்ல வரும்போது 'மாத்திரைக் கோல்' ஏந்தி வருவதாகக் குறவஞ்சி நூல்கள் பேசுவது உன்னத் தக்கது.

### உயிர் எழுத்துக்கள்

குறில் — ஐந்து குறில்களும் ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை பெறும் என்பதனை எல்லா மரபிலக்கணங்களும் ஒப்புகின்றன. அவற்றுள் இகரம், உகரம் என்ற இரண்டு குறில்கள் அரை மாத்திரையாய்ச் சில இடங்களில் ஒலிக்கின்றன.

### குற்றியலுகரம்

வழக்கு மொழிக்கு வகை ஆறாகவும் வரி 36 ஆகவும் செய்யுளுக்கு வகை ஏழாகவும் வரி 42 ஆகவும் இருப்பினும் மாத்திரை ½தான். குறில் உகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் ஒலி நிலையிலும் பொருள் நிலையிலும் வேறுபாடுண்டு. கட்டு—குறில் உகரம். ஏவல் வினையாகவும் 'பிடித்துக் கட்டு' என்ற பொருளிலும், கட்டு—குற்றியலுகரம் தொழிற் பெயராகவும்

'பொருள்களின் தொகுதியாகிய கட்டு' என்ற பொருளிலும் பயன்படுகின்றது. காது பெயர்ச் சொல்லாகும்போது குற்றியலுகரமாகவும், வினைச் சொல்லாகும்போது முற்றியலுகரமாகவும் ஒலிக்கிறது.

*குற்றியலிகரம்*

(1) குற்றியலுகரத்திற்கு முன் 'ய'கர இனம் வரும் போதும் 'உ'கரம் இகரமாகத் திரிந்து குறுகி ஒலிப்பது ஒன்று. (2) மியா என்னும் உரையசைக் கிளவியிலுள்ள 'இ'கரம் குறுகி ஒலிப்பது. (3) ல், ர், ள், ன் என்ற புள்ளிக்குப் பின் 'ய' கர இனம் வரும்போது தோன்றுகின்ற குற்றயலிகரம் மற்ருென்று. இவற்றில் 'உ'கரம் இகரமாகத் திரிகின்ற குற்றியலிகரம் ஒலி நிலையிலும் பொருள் நிலையிலும் வேறுபடுகின்றன. ஏனையவை ஒலி நிலையால் மட்டுமே வேறுபடுகின்றன. பேதை என்பதியா தெனவினவின்—குற்றியல் இகரம், பேதை என்பதி யாதெனவினவின் குறில் இகரம் உகரம் இகரமாகத் திரிந்து வருகின்ற குற்றியலிகரம் சிலப்பதிகாரத்தில் 47 காணப்படுகின்றன.

'ஆடரங்கியாங்கணும்' — சிலம்பு—26—68
'பனியரசி யாண்டுளன்'— ,, —14—112
'கண்டியாவும்' — ,, —9—68
'கழிந்தியாங் கணும்' — ,, —15—46
'சிலம்பியாப் புறவில்லை'— ;, பதிகம் 24
'என்றியான்' — ,, 21—28

புள்ளி முன் தோன்றிய 'இ'கரங்கள் 19.

'இகலி யானை' சிலம்பு—25—193
'என்றீரியாதவர்' —பதிகம் 37
'இருளியாமத்து' —27—78
'போக்குவனியான்' —16—129

நெடில்

நெடில்கள் ஏழும் இயல்பாக ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரை பெறுகின்றன. அவற்றில் 'ஏ' என்ற நெடில் ஒரு மாத்திரையாக ஒலிக்கின்ற இடங்கள் உண்டு.

*ஈற்று நின்றிசைக்கும் 'ஏ' என இறுதி*
*கூற்று வயின் ஓரளபு ஆகலும் உரித்தே*
—தொல். சொல். 286

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. செய்யுளிறுதிக் கண் நின்றிசைக்கும் ஈற்றசை ஏகாரம் கூற்றிடத்து ஒரு மாத்திரைத்தாகலும் உரித்து என உரை கூறி 'கடல்போல் தோன்றல காடிறந் தோரே' (அகம்-1) என்பதை உதாரணம் காட்டுகின்றார். ஏனைய நெடில்களில் ஐகாரம் ஔகாரம் குறுகும் நிலையுடையன எனக் குறிக்கப்படுகின்றன.

ஐகாரக் குறுக்கம்

*ஓரளபாகும் இடனுமா ருண்டே*
*தேருங்காலை மொழி வயினான* —தொல். எழுத்து 57

என்ற தொல்காப்பிய நூற்பா, ஐகார குறுக்கத்திற்கு ஒரு மாத்திரை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இக்கருத்தை நன்னூல், இலக்கண விளக்கம், முத்து வீரியம் போன்ற மரபிலக்கணங்கள் வழிமொழிகின்றன. ஆயின் வீரசோழியமும், நேமி நாதமும் யாப்பருங்கல உரையும் 1½ மாத்திரை என்று பேசுகின்றன.

*'ஒன்றரையாகும் ஐ ஔ' என வீர சோழியமும்—5*
*'ஐ ஔ அளவு ஒன்றரை' என நேமிநாதமும் —5*
*'அளபெடை தனி இரண்டு அல்வழி ஐ ஔ*
*உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்'*

என்ற அவிநயச் சூத்திரத்தை எடுத்துக்காட்டுகின்றது யாப்பருங்கலக் காரிகை உரை. ஆயின் செய்யுள் நிலைக்கு அடிப்படையாக அமையும் மாத்திரை ஒன்று அல்லது இரண்டே

யாகும். இவ்வொன்றரை மாத்திரையை எந்நிலையில் செய்யுளுக்கு அமைக்க முடியும் என்று தோன்றவில்லை. ஆகவே 'ஐ'காரக் குறுக்கத்திற்கு ஒரு மாத்திரை என்று கொள்வதே பொருந்துமெனத் தோன்றுகிறது. ஐகாரக் குறுக்கத்தில் ஒலி நிலையில் வேறுபாடுண்டே தவிரப் பொருள் நிலையில் வேறுபாடில்லை.

ஔகாரக் குறுக்கம்

தொல்காப்பியர் ஔகாரக் குறுக்கத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசியதாகத் தோன்றவில்லை. நன்னூல், இலக்கண விளக்கம், முத்து வீரியம் ஔகாரக் குறுக்கத்திற்கு ஒரு மாத்திரை என்று குறிப்பிடுகின்றன. விரசோழியமும், நேமிநாதமும் $1\frac{1}{2}$ மாத்திரை எனப் பேசுகின்றன. செய்யுளியலும், யாப்பும்,ஔகாரக் குறுக்கம் பற்றிக் குறிக்கவில்லை. பயிற்சி மிகுதியாக இல்லாத காரணத்தால் இதனைப் பற்றிச் செய்யுள் மொழி பேசவில்லையோ எனத் தோன்றுகிறது.

அளபெடை—உயிர் அளபெடை

நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்
—தொல். எழுத்து 6

என்று தொல்காப்பியர் கூறினரே யொழிய எத்தனை மாத்திரை கூட்டுதல் வேண்டும் என்று அவர் கூறவில்லை. நச்சினார்கினியர் நான்கு மாத்திரை வரை பெற்று நின்ற அளபெடைகளை எடுத்துக் காட்டுகிறார்.

'செறாஅ அய் வாழிய நெஞ்சு' —குறள் 1200

'தூஉஉத் தீம்புகைத் தொல் விசும்ப'
—மலைபடுகடாம் ஈற்று வெண்பா

'இலா அஅர்க் கில்லை தமர் — நாலடியார் 283

வீரசோழியம், நேமிநாதம். நன்னூல், மூன்று உயிரளபு

என்று குறிக்கின்றன. முத்துவீரியம், அளபெடை மூன்றன் மேல் ஆம் என மொழிப என்று உரைக்கின்றது.

விளி

உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையி னிசைக்கும் வழக்கத் தான

— தொல். சொல். 152

என்று உரைக்கின்றாரே தவிர எத்தனை மாத்திரை என்று குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆயின் 'அளபெடை தன்னியல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும். இகர ஈற்றுப் பெயர் இ, ஈ ஆகாது இயல்பாய் விளி யேற்கும் செயற்கையுடையவாம் என்றெழுதுகின்றார். அதனால் விளிக்கு இயற்கை போக ஐந்து மாத்திரை என்றால் ஏழு மாத்திரை வரை கொள்ளலாமே எனத் தோன்றுகிறது.

மெய்

எல்லா மரபிலக்கணங்களும் அரை மாத்திரை என்பதை ஏற்கின்றன.

மகரக்குறுக்கம்

மெய்யெழுத்துக்களில் மகரம் மட்டுமே குறுகுகின்றது.
அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை

— தொல். எழுத்து 13

எனத் தொல்காப்பியமும்,

'ணன முன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்'

— நன் 96

என நன்னூலும்,

'லள மெய்திரிந்த னண முனும் வருமொழி
வகார மிசையும் மகாரங் குறுகும்' —இல. வி. 2!

என இலக்கண விளக்கமும் குறிப்பிடுவது மரபிலக் கணங் களின் வளர்ச்சியையும், மொழி மாற்றத்தை உற்று நோக்கு கின்ற தன்மையையும் குறிப்பிடுகின்றன. 'ர'கரத்திற்கு முன்னும் மகரம் குறுகிற்று போலும்.

கொண்ம் — சிலம்பு 9 — 73
போன்ம் — ,, 11 — 183
தீர்ம் — ,, 9 - 14

'வ' காரத்திற்கு முன் குறுகிய மகரம் சில இடங்களில் தன்னை இழந்து விடுகிறது.

கூலம் + வாணிகன் — கூலவாணிகன்
—சிலம்பு. பதிகம் 89

ஒற்றளபெடை

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில்,
அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணி
நரம்பின் மறைய என்மனார் புலவர்
—தொல் எழுத்து 33

எனப் பொது நிலையில் இசையில் உயிர் எழுத்துக்கள் தம் எல்லையைக் கடந்து ஒலித்தலும் ஒற்று நீண்டு ஒலித்தலும் இயல்பென்று கூறுகின்றாரேயொழிய ஒற்றளபெடையைப் பற்றிக் குறிப்பிடுவதாகக் கூற இயலாது. தொல்காப்பியம், செய்யுளியல் 330-ஆம் நூற்பாவில் ஒற்றளபெடை பற்றிப் பேசுகின்றார். ஆயின் ஒற்றளபெடைக்குரிய மாத்திரை அவர் கூறவில்லை. பேராசிரியர் 'கண்ண்டண்ண் ணெனக் கண்டுங் கேட்டும்' (மலைபடு: 352) என்ற ஒற்றளபெடை குறிலைப் போன்று ஒரு மாத்திரை பெறுவதாகக் கூறி 'கண்ண்' என்பதனைத் தேமாவாகக் கூறுகின்றார். நன்னூ லும், முத்துவீரியமும் யாப் பருங்கலக்காரிகை யுரையும் ஒற்றளபெடைக்கு ஒரு மாத்திரை எனப் பேசுகின்றன. ஏனைய மரபிலக்கணங்கள் இதைப் பற்றிப் பேசவில்லை.

**ஆய்தம்**

ஆய்தத்திற்கு அரை மாத்திரை என்பதனை எல்லா மரபிலக்கணங்களும் ஏற்றுக்கொள்கின்றன.

எஃகு — புறம்—233
பஃறி — பட்டினப்பாலை—30
கஃசு — குறள்—307
வெஃகி — குறள் 107
அஃகா — தொல். எழுத்து: 40

இச்சொற்களில் ஆய்தம் அரை மாத்திரை பெறுகின்றன.

**ஆய்தக் குறுக்கம்**

ஆய்தக் குறுக்கம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டாலும் (தொல். எழுத்து: 40) மாத்திரை கூறவில்லை. நேமிநாதம், நன்னூல், முத்துவீரியம், யாப்பருங்கலக்காரிகையுரை இவையே ஆய்த குறுக்கத்திற்குக் கால் மாத்திரை என்று பேசுகின்றன. இவ்வாய்தம் புணர்ச்சியால் தோன்றும் ஆய்தமே.

'ல, ள ஈற்றியை பின் ஆய்தம் அஃகும்' —நன். 97
'ல ள இறு புணர்ச்சியின் ஆய்தம் ஆஃகும்'
—மு. வீ. எழு. 39

காட்டு
பல் + துளி → பஃறுளி... சிலம்பு 11—19.
கொல் + தச்சர் → கொஃறச்சர் சிலம்பு 5—29

ஆயின் ஆய்தம் 'கஃ ஃறென்னும் கல்லதரத்தம்' என நிறத்தின் கண்ணும் 'சுஃஃறென்னும் தண் டோட்டுப் பெண்ணை' என இசையின் கண்ணும் வந்த ஆய்தம் ஒரு மாத்திரை பெற்று சீர்நிலை யெய்துங் கால் ஆண்டுப் பெறுகின்ற ஒரு மாத்திரைக்கு ஈண்டு எதிரது போற்றி விதி கூறினர்' என நச்சினார்க்கினியர் (தொல்: எழுத்து: 40) எழுதுகின்றார்.

ஆய்தம் இருக்கும் மெய்யின் தன்மையைப் பெறுவதை உணருகிறோம்.

*முடிவுரை*

மாத்திரையின் அடிப்படையில் பார்க்கும்போது, 1) உயிர் மெய்க்கெனத் தனிமாத்திரை இல்லை. 'மெய் யோடியையினும் உயிர் இயல் திரியா' எனத்தொல்காப் பியரும், 'உயிர் மெய் மற்றெழுத்தன்று உயிர் மாத்திரையே பெறும்' என வீரசோழியமும் 'உயிர் மெய் பெறும் உயிரே' என நேமிநாதமும் உயிர் மெய்க்குத் தனிமாத்திரையில்லை என்பதைச் சுட்டுகின்றன. மாத்திரை பற்றிப் பேசுகின்ற நூற்பாவில் நன்னூலும் இலக்கண விளக்கமும் உயிர்மெய் பற்றிப் பேசவில்லை. அதற்கெனத் தனி மாத்திரை இன்மை யான் புணர்ச்சி நிலையிலும் உயிர்மெய் என்ற பாகுபாட்டால் எந்தப் பயனும் இல்லை. வடிவநிலை எந்நிலையிலும் இல்லை.

2) குற்றியலுகரம், குற்றியலிகரம், இரண்டும் ஒலி நிலை யிலும், பொருள் நிலையிலும் குறில் உகரத்தினின்றும் குறில் இகரத்தினின்றும் வேறுபட்டிருப்பதால் அவற்றைத் தனி ஒலிகளாகக் கொள்ளலாம். சார்பெழுத்துக்களாகக் கொள் வதில் தவறில்லை.

3) ஐகாரக் குறுக்கம், இயல்பு ஐகாரத்தினின்றும் ஒலி நிலையில் வேறுபாடிருப்பினும் பொருள் நிலையில் வேறுபாடின் மையால் சார்பெழுத்தாகக் கொள்ள வேண்டுமா? ஔகார குறுக்கமும் இத்தகையதே. அதோடு பயிற்சியும் குறைவாய் இருப்பதால் சார்பெழுத்தாகக் கொள்ளத் தேவையில்லை என்றே கொள்ளலாம்.

4) உயிர் அளபெடை ஒலி நிலையிலோ பொருள் நிலை யிலோ வேறுபாடில்லை.

ஒற்றளபெடை பயிற்சியால் மிகக் குறைவு. ஒலி நிலை யிலும் பொருள் நிலையிலும் வேறுபாடில்லை. சிலப்பதிகாரத் தில் ஒற்றளபெடை ஒன்று கூட இல்லை. உயிர் அளபெடை

136 உள்ளன. பத்துப்பாட்டில் உயிர் அளபெடை 394. ஒற்றளபெடை மூன்றே.

5) மகரக் குறுக்கத்தில் ஒலி நிலையில் வேறுபாடுண்டு. இயல்பு மகரம் எச்சமாகவும், முற்றாகவும் அமைகின்றது: மகரக்குறுக்கம் முற்றாகவே அமைகின்றது. இந்த வேறு பாட்டைக் கருதியாயினும் தனி நிலை தரலாம்.

6) ஆய்தம் ஒலி நிலையில் வேறுபடுகின்றது. இயல்பாய் தம் தனி மொழியிலும் ஆய்தக் குறுக்கம் புணர்ச்சி மொழியி லும் தோன்றுகின்றன.

ஆகவே முதல் எழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் என்ற மரபிலக்கணப் பகுப்பை மாத்திரையடிப்படையில் நோக்கும் போது உயிர் மெய் என்ற இரண்டினையும் முதல் எழுத்துக் களாகவும், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், மகரக் குறுக்கம் என்ற நான்கையும் சார்பெழுத்துக்களாகவும் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

# பெயர்ப் பாகுபாடும் அகநானூற்றுப் பெயர்களும் 7

*1 சொல்*

தமிழிலுள்ள நால்வகைச் சொற்களுள் பெயரும் ஒன்று. 'பெயர்' என்ற சொல் 'பெயர்தல்' என்ற வினையடியாகத் தோன்றிய சொல். எல்லா மொழிகளிலும் சொல் வகைகளுள் காலத்திற்குத் தகப் பெயருகின்ற சொற்களாகப் பெயர்ச் சொற்கள் மட்டுமே மிகுதியாக அமைகின்றன. தமிழிலும் ஏனைய வினை, இடை, உரிச்சொற்கள் காலத்தால் பெரும் மாற்றங்கள் அடைவதில்லை. பெயர் - பேர்ஆகின்றது 'குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின் தொடர் மொழியெல்லாம் நெட்டெழுத்தியல' (தொல். 50)[5] என்ற விதியின்படி இச்சொல்லைப் பெய்+அர் என்று பிரித்தும் பொருள் கூறலாம்.

*2. இலக்கணம்*

தொல்காப்பியம் பெயருக்கு இலக்கணம் கூறும்போது,

*பெயர்நிலைக் கிளவி காலந்தோன்றா*
*தொழில் நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே'*

—தொல். 554

எனக் காலந்தோன்றாமையை முதல் இலக்கணமாகக் கூறுகின்

---

1. இங்குக் குறிக்கப்படும் தொல்காப்பிய நூற்பா எண்கள் தொல்காப்பியம் மூலம்—கழக வெளியீடு ... இரண்டாம் பதிப்பு 1954.

றது. பின்வரும் மரபிலக்கணங்கள் அக்கருத்தை ஏற்றுக் கொண்டு விளக்கமும் தருகின்றன.

இடுகுறி காரணம் மரபொடு ஆக்கம்
தொடர்ந்து (அ) தொழில் அல காலந் தோன்றா
(ஆ) வேற்றுமைக் கிடனாய்த் (இ) திணைபாலிடத் தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே —நன். 275

பின்பு வந்த தொன்னூல் விளக்கம்.

பெயரே (அ) வேற்றுமை பெற்று (ஆ) இடம்பால் திணை
காட்டித் (இ) தொழிலல காலங்காட்டா
மரபு காரணம் ஆக்கம் குறி என்று
அவை நாற்றகுதியாகு மென்ப — தொ.வி 53

எனக்கூறி வேற்றுமை பெறுவதை முதன் நிலையில் வைத்துப் பேசுகின்றது. இக்கருத்துக்களை ஏற்றுக்கொண்டு விளக்க இயலாரும் விதி கூறியுள்ளனர்[2]. அவ்விலக்கணம் பொருந்து மெனக் கொள்ளலாம்.

3 வகை

தமிழ் இலக்கண அமைப்புக்கள் ஒழுக்க அடிப்படையில் வளர்ந்த மெய்ப்பொருள் நிலையில் உள்ளவை. தொல்காப்பியம் பெயர்களையும் அந் நிலையிலேயே வகைப்படுத்தியுள்ளது.

3.1 முதற்கண் 1) உயர்திணைப்பெயர், 2) அஃறிணைப் பெயர், 3) ஆயிரு திணைக்குரிய பெயர் என வகுத்துள்ளது. இது ஒருவகைப் பாகுபாடு.

3.2 பொருள் நிலையடிப் படையில் பலவகைகளாகப் பிரித்துள்ளது. 1) அளவுப் பெயர் (168, 169, 170 etc) 2)ஆகு பெயர் (598), 3) ஆடியல் பெயர் (650) 4) ஆண்மை திரிந்த பெயர் (498), 5) இடக்கர்ப் பெயர் (250), 6) இயற்பெயர்

2. Descriptive Grammar of Cilappatikaaram–Page 61

(521, 524 etc) 7) இளமைப்பெயர் (1500), 8) உடைப்பெயர் (650), 9) உணவுப்பெயர் (308,) 10) எண்ணியற்பெயர் (650), 11) எண்ணுப்பெயர் (419), 12) கிளைப்பெயர்(307, 308), 13) குடிப்பெயர் (65), 140) குழவிப்பெயர் (1518), 15) குழுவின் பெயர் (650), 16) சிறப்பு பெயர் (524), 17) சினைப்பெயர் (650), 18) சினை முதற்பெயர் (650), 19) சுட்டுப்பெயர் (520), 20) தடுமாறு தொழிற்பெயர் (579), 21) திசைப்பெயர் (201), 22) துறைக்கிழமைப்பெயர் (1573), 23) தெய்வஞ்சுட்டியபெயர் (487), 24) தொழிற் பெயர் (306, 309), 25) நாள்பெயர் (247, 331), 26) நிலப் பெயர் (650), 27) நிறைப்பெயர் (169, 170 etc) 28) படர்க் கைப் பெயர் (191, 320), 29; பண்புப்பெயர் (619, 625), 30) பிண்டப் பெயர் (574), 31) பிள்ளைப் பெயர் (1510), 32) மகப் பெயர் (218) 33), மரப்பெயர் (181,217), 34) முறைப்பெயர் (67, 347 etc), 35) முன்னிலைப் பெயர் (179, 187 etc). 36) விளி கொள் பெயர் (224 605 etc), 37) வினாவின் பெயர் (622, 633 etc), 38) வினைப்பெயர் (650). இது மற்றொருவகை. இத் தனை உட்பிரிவுகளோடு ஒரு வகைப் பாகுபாடு தேவைதானா? என வினவின் தேவை என்ற விடையே தரவேண்டியுள்ளது. பொருள் நிலையில் சொற்புணர்ச்சி அமைவதே அதற்குக் காரணம்.

பனை + குறை—பனையின்குறை—அளவுப்பெயர்

,, ,, —பனங்குறை—மரம்

சே + கோடு—சேவின்கோடு—விலக்கு

,, ,, —சேங் கோடு—மரம்

ஆண் + கை—ஆண்கை—பொதுப் பெயர்

,, ,, —ஆணங்கை—மரம்

எகின் + கால்—எகினக்கால்—அஃறிணைப் பெயர்

,, ,, —எகினங்கால்—மரம்

மா + கோடு—மான் கோடு—விலங்கு

,, ,, —மாங்கோடு—மரம்

புளி + கூழ்—புளிங் கூழ்—சுவை
,, + கோடு—புளியங்கோடு—மரம்

ஒரே இறுதியுடைய சொற்களும் பொருள் வேறுபாடு காரணமாக வேறுபட்ட புணர்ச்சி விதிகளைக் கொள்கின்றன. மரப்பெயருக்கு மாத்திரம் ஒரு தனிப் புணர்ச்சி விதி அமைவதும் சிந்திக்கத் தக்கது.

3.3 தொல்காப்பியம் புணர்ச்சிக்காக இறுதி எழுத்தைக் கூறிக் கூறும் மரபையும் காண்கிறோம். இகரயிறு பெயர்(154, 235, 610) இ, ஐ என்னும் ஈற்றுப் பெயர் (158), அகர இறு பெயர் (174) ஔகார இறுதிப் பெயர் (295) அளபெடைப் பெயர் (620, 626, 634). —இது ஒரு அமைப்பு.

3.4 இத்தனையும் போக அப்பெயரையே சுட்டிக் கூறும் நிலையும் உண்டு. பூ என் ஒரு பெயர் (268), ஊ என் ஒரு பெயர் (269), எல்லாம் எனும் பெயர் (322, 671) நும் என் ஒருபெயர் (325) என.

3.5 பெயர்களுள் சேவல் (1548) ஆணையும், பெட்டை (1552) பெண்ணையும் குறிக்கும் எனக் கூறும்போது அஃறிணையிலும் ஆண், பெண்ணை வேறுபடுத்தும் நிலை அமைகின்றது. களிறு, பிடி போன்று ஆயின் இங்குப் பலர் பாலுக்கு ஆண் பலர் பெண் பலர் என வினை முற்றில் வேறுபடுத்தும் பிரிவின்மையும் நினைக்கத் தக்கது.

இவற்றினின்றும் தொல்காப்பியம் பொது நிலையில் திணை அடிப்படையிலும் பொருளடிப்படையிலும், புணர்ச்சியடிப் படையிலும் பெயர்களை வகைப்படுத்தியுள்ளது என்பது வெளிப்படை.

3 6 பிற்காலஇலக்கணங்கள் இடுகுறி காரணம், மரபோடு ஆக்கம் என்று பெயர்களின் தோற்றத்தினைக் கொண்டு பகுத்தமையும் எண்ணத்தக்கது.

3.7 டாக்டர். வேலுப்பிள்ளை பெயர்களை ஐவகையாகப் பகுத்துள்ளமை[3] புறநிலையமைப்புக்கு மட்டுமே பொருந்துவதாகத் தோன்றுகிறது.

---

3, வரலாற்று இலக்கணம். டாக்டர் வேலுப்பிள்ளை பக்கம் (127—157)

3.8 விளக்க இயலார் வடிவமாற்ற அடிப்படையில் பெயர்களை வகைப் படுத்தியுள்ளமை[4] புறநிலை அடிப்படையில் அமைந்தாலும் சிறிது தெளிவைத் தருவதுபோல் தோன்றுகிறது.

4. அகநானூற்றில் ஏறத்தாழ 1173 பெயர்ச் சொற்கள்கள் காணப்படுகின்றன.

4.1 இடப்பெயர்கள்—என் | ம்: யான் | ம்; நம்; நீ | நின்; நும்; அவன் | ள் | ர்; அது | அஃது; அவை. இவன் | ள்; இது; இவை; தம்.

4.2 திசைப்பெயர்கள்—குட, குண, வட | க்கு

4.3 எண்ணுப்பெயர்கள்—ஓர், ஒரு, ஒன்று, ஓர், இரு இரண்டு, மூன்று, நால், நான்கு, அறு, ஆறு, ஒன்பது...

4.4 முறைப் பெயர்கள் — எந்தை | தந்தை | நுந்தை; கணவன்; கொழுநன் | ர், தங்கை, தாய், மகள் | ன்-போன்றன.

4.5 மரப்பெயர் – உழிஞ்சில், உன்னம், ஆம்பல், ஆசினி, கடம்பு, ஓமை, புன்னை, வேங்கை—இவை போல் 64

4.6 ஆண்பாற் பெயர்கள் — அகுதை, அந்துவன், ஆய். திதியன், நன்னன், இவை போல் 19

4·7 பெண்பாற் பெயர்கள் – ஆதிமந்தி, அன்னி, மிஞிலி போன்றவை.

4.8 சினைப் பெயர்கள் — முகம், மூக்கு, காது, வாய், தோள் இவை போல் 42.

4.9 உணவுப் பெயர்கள் - அடிசில், கிழங்கு, தினை, தேன், நீர், நுங்கு இவை போல் 32.

5.1 அம் சாரியை ஏற்பனவாக 39 வடிவங்கள் காணப்படுகின்றன. ஆர்வு—ஆர்வம், இன்பு—இன்பம், ஏம் - ஏமம், காம்—காமம், கோங்கு—கோங்கம், பழன் – பழனம், யாம்—யாமம், போன்றன.

---

4. Descriptive Grammar of Cilppatikaaram Page-66.

5.2 ன் | ம் வடிவங்கள் 14 காணப்படுகின்றன. அறம்—அறன், குணம்—குணன், மதம்—மதன், முகம்—முகன், போன்றன.

5.3 சுரு—சுறவு, பலா—பலவு போன்ற இணைக்குறில் நெடிலானவை சில.

5 4 அழுந்தூர்—அழுந்தை போன்ற மரூஉ வடிவங்கள் சில

5.5 அதிகன்—அதியன் போன்றவையும் உள.

6.0 அனைத்தையும் இணைத்துப் பார்க்கும் போது பெயர் வடிவங்களை 1) புறநிலை அடிப்படையிலும் 2) பொருள் நிலை அடிப்படையிலும் 3) வடிவ மாற்று நிலை அடிப்படையிலும் வகைப்படுத்தலாம் எனத் தோன்றுகிறது,

# அகநானூற்றில் பெயர் மாற்று வடிவங்கள் 8

ஒரே வேரிலிருந்து தோன்றிய, பொருள் வேற்றுமையற்ற அடிச்சொற்கள், வடிவ வேறுபாடு உடையனவாக அமையும் போது அவை மாற்று வடிவங்கள் (stem alternants) எனப்படுகின்றன. பெயரிலும் வினையிலும் இத்தகைய மாற்று வடிவங்கள் உள.

மாற்று வடிவங்கள் தோன்றியதற்கு அடிப்படைக் காரணங்கள் சில இருந்திருக்க வேண்டும். சொல்லாக்க நிலையில் இவை ஏற்பட வாய்ப்புண்டு.

பசலை 169-9, பசப்பு 102-19 பசலை.

புணர்ச்சி நிலையில் பெயருக்குப் பலவகை மாற்று வடிவங்கள் அமைகின்றன. வேற்றுமையுருபுகள் இணையும் போதும்,

காடு 21-27, காட்டு 11-2 காடு.

சாரியைகள் தொடரும் போதும்,

ஆ 309-5, ஆண் 159-7 பசு (தொல்-121)

வேறு சொற்களின் முன் வரும் போதும்,

புனிறு 273-4, புனிற்று 56-11 ஈன்றணிமை. அடிச்சொல் தன் வடிவில் மாறுபடும். ஒருமை—பன்மைப் பொருள்அடிப்படை பிற்காலத்து இழக்கப் பட்டதால் ஒரே பொருளுடைய வடிவங்கள் ஆனவையும் உள.

மரன் 176-13, மரம் 148-4—மரம்

பேச்சு மொழி வேறுபாட்டாலும் (dialect variation) கிளி 12-7 கிள்ளை 28-10—கிளி.

உச்சரிப்பு நயம் அல்லது எளிமை காரணமாகவும், குறும்பி 8-2, குரும்பி 72-5—புற்குஞ்சோறு

சரியாக ஒலிக்க இயலாமையானும்,

பவழம் 374-13, பவளம் 25-11 – செம்பவளம்

எழுந்த மாற்று வடிவங்கள் பல. இவை இலக்கியத்தில் அமைவதிலும் வழக்கிலேயே மிகுதியாக வர வாய்ப்புண்டு. பெயர்கள் மருவி வழங்கியதால் தோன்றிய மரூஉ வடிவமும் அருகி வந்தன.

அழுந்தூர் 246-14, அழுந்தை 196-11—ஓர் ஊர். இவை போலன்றிச் செய்யுள் விகாரமாய் வருவன சில

கன்று 131-8, கற்று 381-7 – கன்று

இம் மாறுபாடுகள் பல வகையாக அமைகின்றன. அவற்றைச் சேர்க்க (additions), மாற்றம் (changes) என இரு பெரும் பகுதியாகக் கொள்ளலாம் முதற்பகுதியில் அடியோடு, சாரியையும் பிற விகுதிகளும் இணைதலும், அடிச்சொல்லின் கண் உள்ள வல்லின இடையின எழுத்துக்கள் இரட்டித்தலும் (doubling) அடங்கும். இரண்டாம் பகுதியில் அ) குறில் நெடிலாக நீளல், ஆ) இன மாற்றம், இ) செய்யுள் விகாரம் முதலிய பிற அடங்கும்.

வினையில் மாற்று வடிவங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைவன ஒட்டுக்கள் (affixes) அவை கால இடைநிலைகளாகவோ எதிர் மறையாகவோ இருக்கும். வா எனும் அடி வ-வரு-வருகு-வரூஉ-வார்எனும்மாற்றுவடிவம்பெறலாம்

வா—ஏவல்—வா 240—15

வ இறப்பின் முன்—வந்தன 83 – 12

வரு—இறவாக்காலம்—வருகம் 106—9

வருகு—இறவாக் காலத்தின் முன் —வருகுவர் 294-14
வரூஉ – இறவாக்காலம்—வரூஉம் 56-10
வாார்– எதிர் மறை—வாரேன் 149-7

அடிச்சொற்களிலுள்ள வேறுபாடுகளைக் குறிக்க, 'free variations,' stem 'alternants, ' என்ற இரு கலைச் சொற்கள் பயன் படுகின்றன. ' stem alternants ' என்பது பெயர் மாற்று வடிவங்களையும் ஒருங்கு குறித்திருக்கலாம். மற்றையது பெயருக்கே உரியது போல் தோன்றுகிறது.

1. சேர்க்கை

1 சாரியை இணைதல்;

அம் எனும் சாரியை பல பெயரடிகளுடன் வந்து மாற்று வடிவங்களை அமைத்தது. உகரத்தின் முன் வரும் போது உகரம் வீழ்ந்த பின் 'அம்' இணைகின்றது. பிற இடங்களில் இயல்புப் புணர்ச்சியே.

ஆகார ஈற்றின் முன்

கடா 93-17, கடா அம் 298—9 யானை மதம்
மரா 127-13, மரா அம் 81—8 வெண்கடம்பு
யா 17—16, யா அம் 59-8 யாமரம்

இகர ஈற்றின் முன் யகர உடம்படு மெய்பெற்றது.
நிதி 60-14, நிதியம் 265-6 செல்வம்
மதி 306-10, மதியம் 299-11 சந்திரன்
உகர ஈறு வீழ்ந்து 'அம்' பெற்றது.
அமிழ்த்து 169-6: அமிழ்தம் 207-2 அமுதம்
ஆர்வு 276-12, ஆர்வம் 35-12 விருப்பம்
இலவு 309-7, இலவம் 185-12 தேற்றுமரம்
இன்பு 300-20, இன்பம் 69-5 மகிழ்வு
உருப்பு 31-1, உருப்பம் 181-8 வெப்பம்
உலகு 258-12, உலகம் 66-2 உலகம்

எஃகு 71-1, எஃகம் 77-18 வேல்
எருத்து 238-5, எருத்தம் 253-14 பிடரி
ஓவு 54-4, ஓவம் 5-20 ஓவியம்
கதவு 26-6, கதவம் 102-13 கதவு
குன்று 4-15, குன்றம் 248-10 சிறுமலை
கோங்கு 25-10, கோங்கம் 99-5 கோங்கு
சாந்து 224-9, சாந்தம் 354-10 சந்தனக்கலவை
தளவு 64-4, தளவம் 254-13 செம்முல்லை
துன்பு 257-18, துன்பம் 279-1 துன்பம்
நெஞ்சு 181-3, நெஞ்சம் 87-9 நெஞ்சம்
படிவு 123-2, படிவம் 287-2 விரதம்
பழு 12-8, பழம் 15-15 பழம்
பிடவு 34-1, பிடவம் 23-4 பிடா
புற்று 8-1, புற்றம் 72-3 புற்று
மருது 36-10, மருதம் 37-16 மருதமரம்
முத்து 13-1, முத்தம் 30-13 முத்து
முரசு 335-10, முரசம் 16-71 முரசு
விளக்கு 72-15, விளக்கம் 185-11 விளக்கு
ஐகார ஈற்று முன் வரல்.
சிமை 138-8, சிமையம் 119-20 மலைஉச்சி

ணகர ஈறு:

ஆவண் 227-21, ஆவணம் 122-3 கடைத் தெரு
வண் 20-15, வண்ணம் 69-3 அழகு
மகர ஈறு; ஏம் 34-2, ஏமம் 42-10 இன்பம்
காம் 353-5, காமம் 28-1 விருப்பம்
ரகர ஈறு; ஆர் 104-12, ஆரம் 93-4 ஆத்தி
துயர் 77-19, துயரம் 40-9 துன்பம்
வெதிர் 178-2, வெதிரம் 937-16 மூங்கில்

லகர ஈறு: ஆல் 251-8, ஆலம் 70-16 ஆலமரம்
இல் 370-5, இலம் 276-4 வீடு
கால் 170-8, காலம் 164-11 பொழுது
நீல் 40-2, நீலம் 400-5 நீலநிறம்
ளகரம்; உள் 9-12, உளம் 65-1 உள்ளம்
ணகரம்; கான் 11-8, கானம் 5-15 காடு
வான் 133-11, வானம் 11-1 வானம்

2. அடிச்சொல்லுடன்:

விகுதி முதலியன சேர்த்தல்.

அடி + அ
சில் 105-10, சில 253-8 சில
பல் 6-20, பல 28-5 பல
அடி + அர். இங்கு அடியின் குற்றுகர ஈறு விழுந்தது.
கொம்பு 83-5, கொம்பர் 355-2 மரக்கிளை
சிறகு 324-10, சிறகர் 208-11 சிறகு
அடி + அல்
ததர் 245-17. ததரல் 257-16 சுள்ளி
அடிஅன் உடம்படு மெய்யாக யகரம் வந்தது.
பரி 9-16, பரியன் 190-16 புரவி
அடி + இ எல் 187-13, எல்லி 50-10 இரவு
களர் 74-7, களரி 89-9 உவர் நிலம்
அடி + இல், இங்கு அடியின் குற்றுகரம் வீழ்ந்தது
வட்டு 5-10, வட்டில் 108-17 வட்டு
அடி + உ அடியின் மெய் அருகு இரட்டித்தது.
வெரிந் 167-12. வெரிநு 65-14 முதுகு
உரும் 58-1, உருமு 318;2 இடி
மின் 43-2, மின்னு 124-9 மின்னல்

அடி+ஐ, இங்கும் அருகி இரட்டித்தது.
உவல் 67-14, உவலை 159-10 தழை
கொல் 133 15, கொல்லை 89-17 தரிசு நிலம்
உயிர் போலவே மெய்யும், உயிர் மெய்யும் இணைந்தன.
அடி+(ப்)பு
மொய்ம் 152-9, மொய்ம்பு 93-18 வலி
இயல் 132-7, இயல்பு 65-3 தன்மை
வள் 4-9, வள்பு 104-4 கடிவாளம்
மை 71-5, மைப்பு 136-1 குற்றம்
வரை 12-13, வரைப்பு 372-3 மலை
உவர் 387-4, உவர்ப்பு 89-8 உவர்மண்
அடி+ம்; நாம 18-7, நாமம் 72-14 அச்சம்
நிற 139-13, நிறம் 156-17 நிறம்
யாம 208-1, யாமம் 142-20 நள்ளிரவு
பூ 130-8. பூம் 232-12 மலர்
அடி+மை
தகை 34-9, தகைமை 32-14 தன்மை
முது 86-9, முதுமை 6-15 முதுமை
அடி+வு
பிண 112-5. பிணவு 147-5 பெண்புலி
உரு 175-16, உருவு 218-3 நிறம்
தெரு 16-6, தெருவு 264-8 வீதி
பிதிர் 72-4, பிதிர்வு 202-6 பொறி
அடி+ன்
ஆ 309-5, ஆன் 159-7 பசு (தொல்-121)

3. இரட்டித்தல் :
டகரம் இரட்டித்தல்:
காடு 21-21, காட்டு 11-2 காடு

சாகாடு 116-3, சாகாட்டு 140-12 வண்டி
சூடு 84-12, சூட்டு 236-5 நெற்கட்டு
தோடு 130-6. தோட்டு 161-9 மலரிதழ்
பகடு 107-15, பகட்டு 140-14 எருது
பாடு 40-2 பாட்டு 318-5 ஒலி

*றகரம் இரட்டித்தல்:*

ஆறு 59-18, ஆற்று 71;9 வழி
எயிறு 5-14 எயிற்று 230-4 பற்கள்
ஏறு 119-6, ஏற்று 323-11 இடி
கடறு 225-9, கடற்று 325-10 காடு
கயிறு 250-7, கயிற்று 128-11 கயிறு
களிறு 102-9, களிற்று 176-4 ஆண்யானை
சேறு 121-6, சேற்று 290-2 சேறு
சோறு 60-2, சோற்று 169-7 சோறு
ஞாயிறு 120-5, ஞாயிற்று 184-15 சூரியன்
புனிறு 273-4, புனிற்று 56-1 ஈன்றணிமை
யாறு 178-7, யாற்று 97-18 ஆறு
வயிறு 106-13, வயிற்று 86-11 வயிறு
வேறு 189-4, வேற்று 351-1 வேறு

வகர ளகரம் ஒவ்வோரிடமும் இரட்டித்தது.

செவி 285-12, செவ்வி 355-8 காலம்
உளம் 65-1, உள்ளம் 90-7 மனம்

## *11. மாற்றம்*

1 அடியின் எழுத்துக்களில் நீட்சி அமைவது ஒன்று. இது இருவகையாக அமையுமாறுண்டு. குற்றுயிர் நெட்டுயிர் ஆவது ஒன்று. மற்றொன்று குற்றுயிரை அடுத்து வந்த வகர உகரம் வீழ்ந்து, குறில் நீண்டு மாத்திரை குறையாது அமைதல். இவை மொழியின் மூன்றிடத்தும் அமையலாம்.

அ > ஆ

அர 274-1, அரா 257-20 பாம்பு

கலவம் 194-12, கலாவம் 152-14 தோகை

கூதளம் 47-17 கூதாளம் 178-9 கூதாளி

சகடு 301-7, சாகாடு 116-3 வண்டி.

உ > ஊ

மு 181--16, மூ 282-8 மூன்று

முது 63-14, மூது 15-7 பழைமை

துரு 274-4, துரூஉ 35-9 செம்மறியாடு

எ > ஏ

பெடை 117-7, பேடை 33-6 பெண் பறவை

அவு > ஆ

அரவு 202-10, அரா 257-20 பாம்பு

இறவு 220-17, இரு 170-12 இருல் மீன்

சுறவு 187-21, சுரு 350-10 சுருமீன்

நிலவு 122-10, நிலா 200-1 நிலவு

புலவு 35-10, புலா 70-2 புலால்

புறவு 254-5. புரு 167-14 புரு

விழவு 206-11, விழா 185-11 விழா

அடிச்சொல்லின் முற்பகுதியில் நீட்சியமைதற்கு அகநானூறு ஒரு சான்றே தந்தது.

பொழுது 300-16. போழ்து 175-18

2 மெய்யெழுத்துக்கள் மாறியமைவது இனமாற்றம் எனக்குறிக்கப்படுகின்றது. மெல்லெழுத்துக்களில் னகர மகரங்கள் அடிச்சொல்லின் ஈற்றில் இட இணைவாக நின்றன. முன்பு னகரம் ஒருமையையும் பொருள் மகரம்பன்மையையும் நிலையில் குறித்திருக்கலாம்.

அறன் 60-15, அறம் 27-28 நன்னெறி

இடன் 145-17, இடம் 24-7 இடம்

இனன் 100-14, இனம் 120-3 கூட்டம்
கயன் 291-4, கயம் 6-9 குளம்
கலன் 76-4, கலம் 69·17 அணி
களன் 98-14, களம் 45-2 ஆடுகளம்
குணன் 83-14, குணம் 379-22 பண்பு
சுரன் 68-21, சுரம் 175-6 பாலைவழி
திறன் 91-6, திறம் 274-7 பக்கம்
தேன் 170-2, தேம் 153-16 வண்டு
நயன் 71–3, நயம் 126-14 கொள்கை
நலன் 10-13, நலம் 4-17 அழகு
நிணன் 375-6, நிணம் 9-9 கொழுப்பு
நிலன் 43-5, நிலம் 64-8 நிலம்
பயன் 12-8, பயம் 13-11 பயன்
புலன் 304-16 புலம் 241-23 நிலம்
பொலன் 254-3, பொலம் 16-5 பொன்
மணன் 66-26, மணம் 86-17 திருமணம்
மதன் 32-6, மதம் 307-8 வலிமை
மரன் 176-13 மரம் 146-4 மரம்
மறன் 277-15, மறம் 102-9 வீரம்
முகன் 86-28, முகம் 130-14 முகம்
வலன் 215-6, வலம் 97-2 வெற்றி
வறன் 186-1, வறம் 42-5 வறுமை.

இவ்வாறு மெல்லினங்களே மாறி அமையாது, வல்லினமும் மெல்லினமும் தம்முள் மாறி வருவது உண்டு. சில புணர்ச்சி காரணமாகவும் பிற செய்யுள் விகாரமாகவும் அமைவன.

ட—ண

நட்பு 12-4. நண்பு 328-7 தோழமை

த—ந

வேத்து 27-15, வேந்து 104-1 அரசன்

ப—ம

கருப்பு 286-1, கரும்பு 126-4 கரும்பு

செப்பு 9-4, செம்பு 375-13 செம்பு

பாப்பு 348-7, பாம்பு 160-14 பாம்பு

வேப்பு 176-8, வேம்பு 138-4 வேப்பு

ற—ன

கற்று 381-7, கன்று 131-8 கன்று

வல்லின மெய், இடையினமாக மாறி மாற்று வடிவங்கள் சில அமைந்தன.

க—ய

அதிகன் 142-13, அதியன் 325-8 குறுநில மன்னன்

ச—ய

அசர 49-12 அயா 329-7 தளர்ச்சி

ற—ர

குறும்பி 8-2, குரும்பி 72-5 புற்றுஞ்சோறு

இடையினம் தம்முள் அருகி மாறி அமைந்தன.

ழ—ர

குழல் 73-2, குரல் 8-16 கூந்தல்

ழ—ள

பவழம் 374-13, பவளம் 25-11 செம்பவளம்

மெய், இன்னோர் மெய்யினிடத்து வருவதுபோல், ஓர் உயிருக்குப் பதில் இன்னோர் உயிர் அல்லது உயிரைத் தொடர்ந்த மெய் வருவதுண்டு.

உ—இ

கொடுஞ்சி 194-7, கொடிஞ்சி 320.11 தேர்மொட்டு

பருதி 37-15, பரிதி 360.2 ஞாயிறு

ஐ—அ

இமையம் 399-2, இமயம் 127-4 இமயமலை

ஐ-அம்

காலை 5-24, காலம் 164-11 பொழுது

ஐ—அல்
நெருநை 116-1, நெருநல் 239-14 நேற்று
நிரை 66-7, நிரல் 400-8 வரிசை
ஐ—இ
வள்ளை 6-17, வள்ளி 52-1 கொடி
ஐ—உ
ஆண்டை 317-17, ஆண்டு 201-14 அவ்விடம்
பதுக்கை 35-7, பதுக்கு 289-2 கற்குவியல்
ஐ—ஊர் இது மரூஉ
அழுந்தை 196-11, அழுந்தூர் 246-14 ஓர் ஊர்ப்பெயர்
இன்னும் சில
அகம் 100-3, அகலம் 26-14 மார்பு
ஈர்ம் 133-16, ஈரம் 277-12 ஈரம்
ஞமலி 122-9, ஞாளி 22-8 நாய்
முழுது 145-1, முழுவது 136-20 அனைத்தும்
முறுவல் 39-3, மூரல் 39-15 நகை
வடந்தை 378-13, வாடை 78-10 வாடைக்காற்று
விதை 194-5, வித்து 211-6 வித்து
வைகு 87-13, வைகறை 157-7 விடியற்காலம்
அர 274-1. அரவு 108-12, அரா 257-20 பாம்பு
இல்லம் 4-1, இலவம் 11-3, இலவு 17-18 தேற்றுமரம்
இறவு 152-8, இரு 179-12, இருல் 60-1 இருல்மீன்
எல் 110-11, எல்லு 264-5, எல்லை 20-610 பகல்
சிறகர் 208-11, சிறகு 324-10, சிறை 132-10 சிறகு
பொலம் 36-16, பொலன் 354-3, பொன் 54-18 பொன்
மதம் 36-7, மதர் 39-11, மதவு 23-7, செருக்கு
முன் 70-14. முன்றில் 87-2, முற்றம் 127-61 முற்றம்
வறம் 313-12, வறன் 186-1, வறிது 125-9 வறுமை
முது 86-9, முதுமை 6-15, முதை 262-1, முதையல் 5-8, மூது 15-7 பழமை.

## யாப்பு-எழுத்து 9

தமிழில் இலக்கண நூல்கள் மிகுதி. வரையறையோடு மொழி இருந்தால்தான் நீண்ட நாள் நிலைபெறும் என நம் பினுர் போலும். எப்பொருளையும் நுணுகி நோக்கிய சிறப்பை யும் இவ் இலக்கண நூல்களின் வாயிலாக அறிகின்ருேம்.

தமிழ் இலக்கண நூல்களில் மிகுதியானவை யாப்பிலக் கணம் பற்றிப் பேசுவனவே[1]. இவற்றில் யாப்பிலக்கணத்தை மூன்று நிலைகளில் கூறியுள்ளார்கள் (1) செய்யுளியல் அமைப்பு — இது செய்யப்படுவது அனைத்தையும் செய்யுளாகக் கண் டமை. இதில் கவிதையும் உரைநடையும் அமையும். தொல் காப்பியச் செய்யுளியல் போன்றவை. (2) யாப்பருங்கலம், காரிகை போன்ற அமைப்பு -அவை பா வகை இனம், இவற்

1. எழுத்து:- தொல்காப்பியம், வீரசோழியம், நேமி நாதம், நன்னூல் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம். சாமிநாதம்—8

சொல்:- தொல், வீ. சோ, நேமி, நன். இ. வி. பிரயோக விவேகம் இலக்கணக் கொத்து — 9

பொருள்:- தொல், வீ. சோ, இ. வி, தொ. வி, மு. வீ. இறையனுர் அகப்பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, தமிழ்நெறி விளக்கம், நம்பி அகப்பொருள் விளக்கம், களவியல் காரிகை, மாறனகப் பொருள் பன்னிரு படலம் — 12

அணி:- தொல். வீ சோ, இ. வி, தொ. வி, மு. வீ, தண்டியலங்காரம் மாறனலங்காரம் — 7

யாப்பு:- (1) கிடைப்பன: தொல். வீ. சோ. இ. வி, தொ. இ, மு. வீ யாப்பருங்கலக் காரிகை, பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், வரையறுத்தப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பாப்பா வினம், சிதம்பரச் செய்யுட் கோவை, பிரபந்த தீபிகை—15

றின் அமைப்பு இவை பற்றிப் பேசுபவை. (3) பாட்டியல் அமைப்பு — இவை பிற்காலத்தில் சிற்றிலக்கிய வகைகளை விளக்கும் முறையில் அமைந்தவை. இம்மூன்றும் செய்யுள் இலக்கணம் பற்றிப் பேசுபவை. இம்மூன்றிலும் கூறப்படும் எழுத்தைப் பற்றிய எண்ணத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

எழுத்து, ஒலி எழுத்து—வரி எழுத்து என இரு வகைப் படும். எழுப்பப்படுதல் ஒலியெழுத்து (phoneme) எழுதப் படுதல் வரியெழுத்து (Grapheme) பிற்கால இலக்கணிகள் இதைப் புரிந்து கொள்ளாது, எழுதப்படுதலின் எழுத்தே என இலக்கணமும் கூறி விட்டார்கள், அச்சு தோன்றும் காலம் வரையும் வரியெழுத்து மாற்றமடைந்து வந்திருப்பதைக் காண்கிறோம். ஒலி ஒழுத்து ஓரளவு முன்புள்ள நிலையிலேயே தான் அமைந்துள்ளது.

எழுத்தைப் பற்றிய எண்ணம் இயல் தமிழுக்கு ஒரு வகையாகவும் செய்யுள் அல்லது யாப்புக்கு இன்னொரு வகையாகவும் பாட்டியல் காலக் கருத்துக்கள் வேறொரு வகையாகவும் அமைந்துள்ளன. இசைத்தமிழ் எழுத்து நிலைவேறு[2].

---

2) மறைந்தவை† அகத்தியர் பாட்டியல், அவிநயம், அவிநயப் புறநடை, காக்கைப் பாடினியம், குறுவேட்டுவச் செய்யுள், கையனுர் யாப்பியல், சங்கயாப்பு, சிறுகாக்கைப் பாடினியம், செய்யுளியல், செய்யுள் வகைமை, தக்காணியம், தாத்தாத்திரேயப் பாட்டியல், நக்கீரர் அடிநூல், நக்கீரர் நாலடி நானூறு. நந்தத்தம், நல்லாறன் மொழிவரி, பண்டாரப் பாட்டியல், பரிமாணனுர், பல்காயம், பல் காப்பியம், பல்காப்பியப் புறனடை, பாடலம், பாட்டியல், மரபு, பிரபந்ததீபம், பிரபந்தத்திரட்டு. பூத புராணம், மாபுராணம், வாருணப் பாட்டியல், யாப்பியல், முள்ளியார். கவித்தொகை. மயேச்சுரர், இலக்கணநூல், பெரிய மூப்பழம். பெரிய பம்மம், புணர்ப்பாவை, போக்கியம், கிரணியம், வதுவிச்சை — 37

† இச்செய்திக்குத் துணை புரிந்தவை, மறைந்து போன தமிழ் நூற்கள் —மயிலை சீனி வேங்கட சாமி; தமிழ் இலக்கண வரலாறு—புலவர் சோம இளவரசு.

2. …………… எழுத்தெழுத்தாக
வழுவின்று இசைக்கும் குடிலோன் —சிலம்பு 3:68-69

இவ்வாக்கியத்து ஏழு துளைகளில் இசைபிறக்குமாறு:- அஃ எழுத்தாற் பிறக்கும் எழுத்து சரிகமபதநி என்பன இவ் ஏழு எழுத்தினையும் மாத்

முதல் எழுத்து சார்பெழுத்து, இவற்றுள் காலத்தால் ஏற்பட்ட மாற்றங்கள்—இவை பற்றிய எண்ணங்களை எழுத்திலக்கணம் பேசுகின்ற நூற்கள் கூறுகின்றன[3].

செய்யுள் இலக்கணம் கூறுகின்ற நூற்களுள் அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களைப் பற்றிக் கூறும் தொல்,

*மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்*
*மேற்கிளந் தன்ன என்மனார் புலவர்* —தொல். செ 5

என்று மட்டும் கூறினும் உரையாசிரியர்கள், இளம் பூரணர் — 9 வகை எனவும் நச்சினார்க்கினியர் — 12 என்றும் பேராசிரியர் — 14 ஆகவும் கூறுகின்றனர். பின் வந்த இலக்கண நூல்கள் யா. கலம்-15 ஆகவும், காரிகை — 13 எனவும் பேசுகின்றன[4]. இங்கு எழுத்திலக்கணம் கூறுகின்ற முறையிலேயே யாப்பிலக்கணத்திற்குக் கூறின் பொருந்தும் என அவர்கள் கருதவில்லை போலும். முதல் எழுத்திற்கும் சார்பு எழுத்திற்கும் வேறுபாடு உண்டு. இங்குக் கூறும் உயிருள் குறில் நெடில் அடங்கும். மெய்யுள் வல்லினம்—மெல்லினம்—இடையினம் அடங்கும் எனினும் தனித்தனியே கூறுவதற்குச் சில காரணங்கள் அமைதல் வேண்டும். எதுகை, மோனை போன்ற தொடையின் வகைகளுக்கும் வண்ணங்களுக்கும் (வண்ணப் பகுப்புக்கும்) எழுத்து வகைகள் அடிப்படையானவை அதற்குக் காரணம் ஆகலாம்.

இந்நிலையில், எழுத்திலக்கண எழுத்திற்கும் யாப்பிலக்கண எழுத்திற்கும் சில வேறுபாடுகள் அமைந்துள்ளன.

---

திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்-பக் 101 (அடியார்க்கு நல்லார் உரை)

குன்றுக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும்
நின்றூர்ந்த மந்நகரந்தவ்வொடு — நன்றாக
நீளத்தாலேழு நிதானத் தானின்றியங்க
ஆளத்தி யாமென்றறி — பக் 105

(அடியார்க்கு நல்லார் உரை)

3. இலக்கணத்தொகை—எழுத்து—பக்கம்-38
4 அட்டவணை பார்க்க

எ — எ இல்கு உ — 36; யா. எல் கு. உ — 42
,, உ — அ — 21; ,, உ. அ — 28
,, ஒ — அ — 42; ,' ஒ — அ — 22

இவ்வாறு வருகின்றன.

செய்யுளில் எழுத்தெண்ணி அடி கூறும் நிலே தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

4 முதல் 6 எழுத்து வரை — குறளடி
7 முதல் 9 எழுத்து வரை — சிந்தடி
10 முதல் 14 எழுத்து வரை — நேரடி
15 முதல் 17 எழுத்து வரை — நெடிலடி
18 முதக் 20 எழுத்து வரை — கழிநெடிலடி என.

பிற்காலத்தில் இவ்வெண்ணம் மாற்றம் அடைந்து குறள் இருசீரடி, சிந்து முச்சீரடி போன்று அடி வகுக்கப்பட்டது. எழுத்தின் அடிப்படையில் வகுக்கும் (கட்டளே) அடிவகை, கட்டளேக்கலிப்பா கட்டளேக் கலித்துறை போன்றவற்றில் மட்டும் நிலே பெற்றது. அதோடு சந்தம், தாண்டகம் எனவும் எழுத்தெண்ணியமைக்கப் பட்டமையை யாப்பருங்கல விருத்தியும், வீ. சோ. மும் கூறும்.[5] இவை வடமொழி மரபாக இருக்கலாம்.

---

5. வீரசோழியம—131

ஒன்ருதி யென்பரொரு சாரவரொரு நான்குமுன்னும் என்ரு லினிது சந் தத்தி னெழுத்தை யிருபதின் மேல் நன்ரு யவாறுயர் வாமென் றுரைப்பர் நற்கண்டமேற் பின்ருத கட்டளை நான்கு முன்ஞகிப் பெருகிடுமே

யாப்பருங்கலவிருத்தி—பக்கம் 367

இனி சந்தமும் தாண்டகமும் ஆமாறு: நாலெழுத்து முதலா இருபத்தாறு எழுத்தின் காறும் உயர்ந்த 23 அடியானும் வந்து தம்முள் ஒத்தும் குருவும் லகுவும் ஒத்தும் வந்தன அளவியற் சந்தம். எழுத்து ஒவ்வாதும் எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழிச் சந்தம்.

இருபத்தேழு எழுத்து முதலாக எழுத்தடியினவாய் எழுத்தும் குருலகவும் ஒத்து வருவன அளவியற்ருண்டகம். எழுந்து ஒவ்வாதும் எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழித் தாண்டகம்,

எழுத்தடிப்படையில் அடியைப் பார்த்தமை போன்று சீரைப் பார்த்தமையும் தொல்காப்பியத்தில் உண்டு. பொதுவாகச் சீருக்கு ஐந்து எழுத்து வரையறை எனவும், வஞ்சிக்கு பெருமை ஆறும் ஆகலாம் எனவும் கூறும்.

எதுகை, மோனை, இயைபு, அளபெடை போன்ற தொடைகளுக்கு எழுத்தின் அடிப்படை மிகவும் இன்றியமையாத ஒன்று ஆகின்றது. அதோடு பிற்காலத்தில் எழுந்த அந்தாதித் தொடைக்கும் எழுத்து ஓர் அடிப்படையாம் (எழுத்தந்தாதி). தொல் கூறும் வனப்பு வகைகளில் ஒன்ருன 'இயைபு' எழுத்தடிப்படையில் அமைவதும் நினைத்தற்பாலது.

இடைக்காலத்தில் (10-ஆம் நூற்றுண்டுக்குப் பின்) பாட்டியல் நூற்கள் தோன்றத் தொடங்கின. அவை எழுத்தை வருணக் கோலங்களில் காணத்தலைப்பட்டன. இந்து சமயச் செல்வாக்கினுல் எழுத்துக்களைத் தோற்றுவித்தவர் இவர் என எழுத்துக்களைப் பங்கு வைத்து, உயிர் எழுத்துக்களை ஒரு கடவுளுக்கும். மெய்எழுத்துக்களை இரண்டிரண்டாக ஒன்பது கடவுளுக்கும் கொடுத்தன. ஆய்தம் இறைவர்களால் படைக்கப்படவில்லை போலும்.

எழுத்துக்களையும் அந்தணர் — அரசர் — வணிகர் — வேளாளர் (சூத்திரர், பின்னவர்) என்ற நிலையில் கண்டன. தமிழில் சிறப்பெழுத்தாகிய 'ழ'கரத்தைச் சூத்திர எழுத்து எனப் பேசின. பின்பு, மக்கள் கதி போன்ற எழுத்துக்களையும் வானவர்—மக்கள்—விலங்கு—நரகர் என நாற்கதிகளாகப் பிரித்துப் கண்டன. நன்மை, தீமை தரும் எனும் நிலையில் அமுதவெழுத்து, நஞ்செழுத்து என வகை செய்து பார்த்தன. அவற்றை ஆண்பால்—பெண்பால் - அலிப்பால் என முப்பாலாகவும் நோக்கின. (ஆய்தம், அலி அல்லது பேடு என்பதில் அடக்கப்படுகின்றது) எழுத்துக்கள் செய்யுளில் இருக்க வேண்டிய இடத்தைத் தானம் எனப் பேசின. பின்பு கன்னல், புள் என்பவற்றையும் நாட்களையும் எழுத்துக்களோடு இணைத்து நோக்கின. இவையனைத்தையும் செய்யுளில் முதன் மொழிப் பொருத்தமாக அமைத்தன. செய்யுள் முதன் மொழிப் பொருத்தங்கள் பத்தில் மிகுதியும்

எழுத்தடிப்படையில் அமைதல் நினைத்தற்பாலது[6] மங்கலச் சொல்லைத் தொடர்ந்து வரும் எழுத்துக்கள் இவையிவை எனக் கண்ட நிலையும் (வரையறுத்த பாட்டியல்) அருகி அமைந்தது. இவ்வாறெல்லாம் பார்ப்பதற்குச் சமயமும் சாஸ்திரமும் காரணங்களாக அமைந்திருத்தல் வேண்டும்.

செய்யுளடியில் எழுத்து எண்ணுதலில், பிற யாப்பு நூற்களும் பாட்டியல்களும் வேறுபடுகின்றன. தொல் உயிரியக்கம் அற்ற எழுத்துக்கள் விடப்படல் எனக் கூறுகின்றது. பன்னிரு பாட்டியல் எழுத்து, ஆன்ற ஒற்றுடன் எண்ணி என மெய்யையும் இணைத்துக் கொள்கின்றது.

---

6. தொகுத்துரைத்த மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம் வகுத்த பாலுண்டி வருணம்—பகுத்த நாள்

தப்பாக் கதி கணமென்றீரைந்தின் தன்மையினைச் செப்புவதா முன்மொழியின் சீர். வெ. பா; மொழி-2

எழுத்து. தானம், பால், உண்டி, வருணன், நாள், கதி என்பன எழுத்தடிப்படையில் அமைந்தன. ப, பா, கன்னல், புள் என்பனவற்றையும் எழுத்திற்கு வகுக்கும்,

## அட்டவணை

| | யா.க | யா.கா | இளம் | பேரா | நச் |
|---|---|---|---|---|---|
| 1 | உயிர் | 3 ஆவி | | 3 | 1 |
| 2 | மெய் | 8 | | 4 | 9 |
| 3 | உயிர்மெய் | 12 | | 11 | 15 |
| 4 | குறில் | 11 | 1 | 1 | 2 |
| 5 | நெடில் | 2 | 2 | 2 | 3 |
| 6 | அளபெடை | 13 | 3 | 12 | 4 |
| 7 | வல்லினம் | 9 | 4 | 6 | 11 |
| 8 | மெல்லினம் | 10 | 5 | 5 | 10 |
| 9 | இடையினம் | 11 | 6 | 7 | 12 |
| 10 | கு. இ | 4 | 7 | 8 | 5 |
| 11 | கு. உ | 5 | 8 | 9 | 6 |
| 12 | ஆய்தம் | 7 | 9 | 10 | 13 |
| 13 | ஐகுறுக்கம் | 6 | | 13 | 7 |
| 14 | ஔகுறுக்கம் | | | 14 | 8 |
| 15 | ம குறுக்கம் | | | 16 | |
| | | | | 15 ஒற்றளபெடை | 14 |

# சொல்லிலக்கண வரலாற்றில்.... 10

0 தமிழ்ச் சொல்லிலக்கணம் கூறும் மரபிலக்கணங்கள்[1] மொழியில் ஏற்பட்டுள்ள எல்லா மாற்றங்களையும் கூறுகின்றன என்று கூற இயலாது. ஆயினும் சில மாற்றங்களை உணர்த்துகின்றன. அவை மொழி வரலாற்றை அறியத் துணை நிற்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## 1 இயல்புகள்

தொல்காப்பியமும் நேமிநாதமும் சொல்லிலக்கணத்தை ஒன்பது இயல்களில் பேசுகின்றன. வீர சோழியம் ஆறு படலங்களில் உரைக்கின்றது. நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் இவை ஐந்து இயல்களில் கூறுகின்றன. பிரயோக விவேகம் நான்கு படலங்களிலும், இலக்கணக் கொத்து, முத்து வீரியம் இவை மும்மூன்று இயல்களிலும் இயம்புகின்றன.

1.1 கிளவியாக்கத்தை மொழியாக்க மரபென நேமிநாதம் அமைத்துள்ளது. நன்னூல், இ. வி.,[2] தொ. வி. இவை கிளவியாக்கம், எச்சவியல் செய்திகளைப் பொது

1. தொல்காப்பியம்—சொல்லதிகாரம் — சேனாவரையருரை—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்-மே. 1959.

2. வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் இயற்றிய வுரையும்—புலவர் ணந்தர் கழகம்—வேப்பேரி, சென்னை, 1942,

வியலில் கூறுகின்றன. வீ. சோ., பிரயோ. வடமொழி மரபையொட்டி இலக்கணங் கூறுவதால் தனித் தியங்கு கின்றன.

1.2 வேற்றுமையை மூன்று இயல்களில் தொல். கூறுவது போன்றே நேமிநாதமும் கூறுகின்றது. வேற்றுமைப் படலம், காரகபடலம், வேற்றுமையியல் என வீ. சோ., பிராயா., இ. கொ. இவை வேற்றுமைக்கு முறையே தனி இயல்கள் வகுத்துள்ளன. நன்., இ. வி., தொ. வி., மு வீ. இவை வேற்றுமைக்குத் தனி இயல் வகுக்கவில்லை. பெயரியலி லேயே வேற்றுமைகளைப் பற்றிப் பேசுகின்றன, தொல். தொடரியல் அடிப்படையில் கிளவியாக்கத்திற்கு அடுத்தாற் போன்று வேற்றுமையியல்களை அமைத்துள்ளது. மற்ற நூல்கள் அவ்வெண்ணத்தில் நோக்காது, பெயருக்குப் பின் வேற்றுமை உருபுகள் வருவதால் பெயரியலிலேயே வேற்று மையைக் கூறியுள்ளன. ஆயின் தொல்காப்பிய இயல் அமைப்பே பொருந்துமெனத் தோன்றுகிறது.

1.3 தொல், நேமி, நன்., இ. வி., தொ. வி. இவை பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு சொற்களுக்கும் நான்கு இயல்கள் கூறுகின்றன.

1.4 வீ. சோ., பிரயோ. தாதுப்படலம், திங்குப் படலம், தத்திதப்படலம், தொகைப்படலம், சமாசப் படலம், போன்றவற்றைத் தருகின்றன. தாதுப்படலமும், திங்குப்படலமும் வினையடிகளையும் அதன் செயற்பாட்டையும் உரைக்கின்றன. தத்திதப்படலம் குறிப்பு வினைகளைப்பற்றிப் பேசுவதுபோல் தோன்றுகிறது. வீ. சோ. கிரியாபதப்பட லத்திலும் வினைவியல் எண்ணங்களைத் தருகின்றது. தொகைக்கு இரு இலக்கணங்களும் தனிப்படலங்களும் அமைந்துள்ளமை தொடரியல் நிலையில் தொகைகளைப் பார்க்கும் முறைமையைத் தெளிவுபடுத்துகின்றது.

1.5 இ. கொ. வேற்றுமையியல், வினைவியல், ஒழிபியல் என மூவியல்கள் வகுக்க மு. வீ. பெயரியல், வினையியல், ஒழி பியல் என மூவியல்களாகப் பகுத்துள்ளது.

### யாப்பு

2.1 தொல்., நன்., இ. வி., தொ. வி., மு. வீ. பொது நிலை இலக்கண யாப்பைப் பின்பற்றுகின்றன (ஆசிரியப்பா போன்று அமைந்தவை எனக் கூறலாம்) தொல்காப்பியத்தி லுள்ள ஓசை நயம் ஏனையவற்றில் இருப்பதாகத் தோன்ற வில்லை.

2.2 வீ. சோ., பிரயோ. கட்டளைக் கலித்துறையாப்பில் அமைந்துள்ளன.

2.3 நேமிநாதம் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

### பாயிரம், ஏனைய

3.1 தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் பனம் பாரனாரால் இயற்றப்பட்டுள்ளது. வீர சோழியத்திற்குப் பாயிரம் இயற்றிய ஆசிரியரே எழுதியுள்ளார்.

3.2 நேமி., நன்., இ. வி, இ. கொ., தொ. வி., மு.வீ. இவை கடவுள் வாழ்த்துக் கூறுகின்றன. இவை ஒவ்வொரு அதிகாரத்திற்கு முன்பும் கடவுள் வாழ்த்தும் அதிகாரத் தொடக்கமும் சேர்த்து உரைக்கின்றன. கடவுள் வாழ்த் தைப் பற்றிய செய்தி செய்யிளியலில் (1367) தொல்காப்பி யத்தில் கூறப்பட்டுள்ளமையும் நினைக்கத்தக்கது.

3.3 இலக்கணக் கொத்தில் குருவணக்கமும் தனியாகக் கூறப்பட்டுள்ளது.

### கிளவியாக்கம்

4.1 சொல்லுக்கு இலக்கணம் கூறும் நிலைகளில் ஒன்றோ டொன்று சிறிது மாறுபட்டாலும் அனைத்தும் திணை அடிப் படையில் சொல்லைப் பார்க்கின்றன என்பது வெளிப்படை. சொல்வகையாக, ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி எனப் புதியதைப் புகுத்துகின்றது நன்னூல். தனிமொழி, தொடர்மொழி என் நிறுத்துகின்றது இலக்கண விளக்கம்.

4.2 தொல் மக்கள் மட்டும் உயர்திணை எனக் குறிக்கின்றது. (1)[3]. நேமி நரகரையும் வானோரையும் உயர் திணையில் சேர்த்துக்கொள்கிறது. தேவர், நரகர் என முறை மாற்றுகின்றது நன்னூல். சமுதாயத்தில் சமய எண்ணம் நுழைந்து, இலக்கணத்திலும் புகுந்ததை இது சுட்டுகின்றது. நரகரையும் உயர்திணை எனக் கூறுவது எண்ணற்பாலது.

4.3 நன்னூல் கூறிய பதவியல் நூற்பாக்களைத் தொ. வி. சொல்லை விளக்க எடுத்துரைக்கின்றது.

4.4 பாலுள் அடங்காத பேடியையும் தெய்வத்தையும் உயர் திணையில் அமைக்கின்றது தொல். பேடியை அஃறிணையிலும் அமைக்கலாம் என்கிறது நன்.[4] (264).

4.5 தொல்காப்பியம் பால் மயக்கம் கூடா தெனப் பால்வழு அமைக்கின்றது (11). உரையாசிரியர்கள் அதை வைத்து ஏழு வழுக்கள் கூறுகின்றனர். அவற்றைப் பிற்கால இலக்கணங்கள் நூற்பாவாக்கி விட்டன. நேமி-5; நன்-375; இ. வி-295: தொ. வி-127

4.6 தொல். செப்பும் வினவும் வழாஅது பாதுகாத்தல் வேண்டுமெனக் கூற (13, 14, 15), பிற்கால இலக்கண நூல்கள் செப்பு எட்டு வகைப்படும்; வினா ஆறு வகைப்படும் என உரையாசிரியர்கள் கூற்றுக்களின் அடிப்படையில் வகுத்துக் கூறுகின்றன. நேமி-6:. நன்-385, 386; இ. வி 305, 308.

4.7 தகுதி, வழக்கு என இரண்டாகத் தொல். (17) வகுத்துக் கூறுவதைப் பின் நூல்கள் வழக்கை, இயல்பு, தகுதி எனப் பிரித்து இலக்கணமுடையது. இலக்கணப்போலி, மரூஉ என்ற மூன்றாக இயல்பையும், இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனத் தகுதியை மூன்றாகவும் வகுத்துக் கூறுகின்றன. நன்-267; இ.வி. 168; மு.வீ.செ-14, 15, 16.

---

3. நேமிநாத மூலமும் உரையும்—செந்தமிழ்ப் பிரசுரம்-6, இரண்டாம் பதிப்பு—1923.

4. நன்னூல் காண்டிகையுரை-வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் சே, கிருஷ்ணமாசாரியார், பதினெட்டாம் பதிப்பு.1958.

4.8 தொல்காப்பியப் பாயிரத்தில் வழக்கும் செய்யுளும் நோக்கி இலக்கணம் கூறியுள்ளதாகக் கூறினும்; முதலில் வழக்கு இது, செய்யுள் இது என வரையறுத்துக் கூற வில்லை. அதை நன் 268; இ,வி; 169; மு.வீ.பெ. 17; இவை பேசுகின் றன.

4.9 அடையாக வருகின்ற பண்புச் சொல் வழக்கில் வராது, செய்யுளில் வரும் எனத் தொல். கூற (18), பொது நிலையில் பொருள் முதல் தொழில் ஈறுகிய ஆறும் அடையாக வரும் போது வழக்கிலும், செய்யுளிலும் வரும் என நன் 401; இ.வி. 312, இவை உரைக்கின்றன.

4.10 செலவு, வரவு, தரவு, கொடை என்ற நான்கு சொற்களில் செலவு, கொடை படர்க்கையில் வரும் என்கின் றது தொல் 28, 29. நான்கு சொற்களும் படர்க்கையில் வரும் எனக் கூறுகின்றது நன் 381.

வேற்றுமையியல்:-

5.1 தொல். ஏழு + விளியோடு எட்டெனா இயல்புகின்றது. ஏனைய எட்டென்றே கூறுகின்றன. (விளியோடெட்டெனத் தொல். விளியைத் தனித்துக் கூறுவதால் விளி தொடரியல் இலக்கணமா? என்ற ஐயம் எழுகின்றது.)

5.2 உருபு, வேறுருபு, சொல்லுருபு என உருபுகளை மூவகைப்படுத்துகின்றது இ,கொ. 16. (உரைகளில் சொல்லுருபு உரைக்கப்படுகின்றது.)

5.3 எல்லா நூல்களும் இரண்டு முதல் ஏழு வரை வேற்றுமை களுக்கு உருபு உண்டெனப்பேசுகின்றன. வீ. சோ. எழுவாய்க்கும் உருபுகளை உரைக்கின்றது.

5.4 மூன்றும் வேற்றுமை உருபாக 'ஒடு' உரைக்கப்பட்டு, 'ஆனும்' உணர்த்தப்படுகிறது தொல்காப்பியத்தில். பின்பு ஆல், ஒடு இணைக்கப்படுகின்றன.

5.5 ஐந்தாம் வேற்றுமைக்கு 'இன்'னோடு இல்லும் சேர்க் கப்படுகின்றது பிற்காலத்தில். இது புணர்ச்சியில் விளைந்த புதுமையாக இருக்கலாம்.

5.6 ஆறும் வேற்றுமைக்கு 'அது' மட்டுமிருந்து, பின்பு 'ஆது'வும் சேர்ந்து, ஒருமைக்கு இவை இரண்டும், பன்மைக்கு 'அ'வும் என்ற நிலை ஏற்பட்டது.

5.7 ஏழாம் வேற்றுமையாகிய இடப்பொருளில் வரும் சொற்களாகப் பத்தொன்பதைக் கூறுகின்றதுதொல், இருபத்தெட்டாக வளர்ந்ததை நன்னூல் இயம்புகின்றது. (இலக்கிய வழக்கு அனைத்தையும் இவை அடக்கியதாகக் கூறுவதற்கில்லை.)

5.8 பொருள் நிலையில் இரண்டாம் வேற்றுமை உருபு 28 பொருள்களில் வரும் எனத் தொல். பேசுகின்றது. நன்., தொ வி. ஆறு பொருளுள் அடக்குகின்றன; எட்டாக மு.வீ. பேசுகின்றது. இ.வி., இ.கொ. மூன்றனுள் அடக்கி இருபத்தெட்டுப் பொருளையும் அடக்க முயல்கின்றன. பிற்காலத்தில் வர வரப் பொருள் நிலையைக் கூர்ந்து பார்க்கின்ற ஆற்றல் குறைந்து விட்டதால் இந்நிலை அமைந்ததோ என எண்ணத் தோன்றுகிறது.

5.9 மூன்றும் வேற்றுமை பத்துப் பொருளில் வருமெனத் தொல். கூற மூன்றுள் அடக்குகின்றன ஏனைய.

5;10 நான்காம் வேற்றுமையும் பத்துப் பொருளில் அமையும் எனத் தொல். இசைக்க, ஏழுள் அமைக்கின்றன நன்.; இ.வி., தொ.வி. எட்டென இயம்புகின்றது மு.வீ.

5.11 ஐந்தாம் வேற்றுமை 28 பொருளில் அமையும் எனத் தொல். இயம்ப, நான்கென நன்., தொ.வி. கூற, ஐந்தென இ.வி. பேச; எட்டென மு.வீ. உரைக்கின்றது.

5.12 ஆறும் வேற்றுமை பதினாறு பொருளில் வருமெனத் தொல். பேச, ஏனைய, ஐந்துள் அடக்குகின்றன. தற்கிழமை பிறிதின்கிழமை என்பனவும் தோன்றின.

### வேற்றுமை மயங்கியல்

6.1 வேற்றுமை மயக்கத்திற்குச் சில வரையறைகளைத் தருகின்றது தொல். வரையறையின்றி மயங்குமென இ:

கொ. பேசுகின்றது. காட்டாக எல்லா உருபொடும் செயப் படு பொருள் (ஐ) எழும் என்பதைச் சுட்டுகின்றது.

6.2 ஆகுபெயரை ஏழுவகையாகப் பிரிக்கின்றது தொல்-114; நன் 12 ஆகக் கூற, 16 என உரை விரிக்கின்றது.

*விளிமரபு*

7.0 விளிக்கு விளக்கம் தொல். கூறவில்லை. 'படர்க்கை யோரைத் தன் முகமாகத் தான் அழைப்பதுவே' எனப் பின் நூல்கள் பேசுகின்றன.

7,1 விளிஈற்றுப் பெயர்களில் 'ஊ' கார ஈற்றுப் பெயர் களை நன்னூல் இணைக்கின்றது.

7.2 புள்ளி யிறுதிகளில் 'ய' கரத்தையும் சேர்க்கிறது நன்னூல்.

7.3 'ர' கர'ஈறுஈருகும்' எனத் தொல்,138. கூற, இர் ஆகும் என நன், 309, கூறி, அயல்யாக்கெட்டு அதனயல் நீடல் எனவும் (நம்பியார்-நம்பீர்) ஈற்றில் ஈர் உறல் எனவும் (எமர்-எமரீர்) விளக்க, ஈற்றின் ஓவுறல் எனவும் (பெண்டீரோ) இ.வி 211. சேர்க்கின்றது.

7.4 'ள' கர ஈற்றின் ஈறழியும் (எல்லாள்-எல்லா) அயலியல் அகரம் ஏயாதலும் (அடிகள்-அடிகேள்) நன்னூல் சேர்க்கின்றது.

*பெயரியல்*

8.0 தொல்காப்பியம் பெயர்களைப் பற்றி மட்டுமே பெயரியலில் பேசுகின்றது. நன்னூல் ஆகுபெயர், வேற்றுமைகளையும் இவ்வியலில் கூறுகின்றது.

8.1 சொற்கள் தெரிபுவேறு நிலையல், குறிப்பில் தோன்றல் என இருவகைப்படும் எனத்தொல். (156) கூறுகிறது. எவை குறிப்பு என நன்னூல் விவரிக்கின்றது,

8.2 தொல். பெயர் வினைச் சொற்களை ஒரு நூற்பாவிலும் இடை உரிச்சொற்களை மற்றொரு நூற்பாவிலும் கூறி வேறு படுத்திக் காட்டுகின்றது. பின் நூல்கள் நால்வகைச் சொற் களையும் ஒரே நூற்பாவில் கூறுகின்றன.

8.3 பெயரின் வகைகளைக் கூறும்போது தொல். உயர் திணை, அஃறிணை என்று இருதிணை வகுக்கின்றது. இப் பகுப்பை ஏற்றாலும் நன்னூல் (275) இடுகுறி, காரணம்,மரபு, ஆக்கம் என்ற நிலைகளிலும் வகுக்கின்றது.

8.4 பலர் பாலுக்குக் 'கள்' விகுதியையும் நேமி. (36), நன்னூல் (278) சேர்க்கின்றன.

8.5 அஃறிணைப் பெயர்களைக் கூறும்போது 'ஒன்று' என்ற எண்ணுப் பெயரையும் நன். இணைத்துக் கொள்கின்றது.

8.6 அஃறிணைப் பன்மையில 'சில்ல' வடிவத்தையும் நன். (280) சேர்க்கின்றது.

8.7 'எல்லாம்' என்னுஞ்சொல் உயர்திணையில் தன்மைப் பன்மைக்கல்லது முன்னிலை படர்க்கைப் பன்மையில் வராது என்றுரைக்கின்றது தொல் (187). தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்றிடங்களும் வருமென்கின்றது நன் னூல் (285).

*வினையியல்*

9.1 வினைக்கு விதி கூறும்போது, தொல்காப்பியம் 'வேற் றுமை கொள்ளாது காலமொடு தோன்றும்' என எதிர்மறை நிலையிலும் உடன்பாட்டிலும் கூறுகின்றது. இலக்கண விளக் கம் (227) உரையாசிரியர் கருத்தை ஏற்று 'பொருட்புடை பெயர்ச்சி புலப்படுவதுவே' என்பதை இணைத்துக் கொள்கின் றது. நன்னூல் (320) செய்பவன் கருவி, நிலம் செய்பொருள் இவைகளைச் சேர்த்துக் கூறுகிறது. இ.கொ. தனிவினை, தொடர்வினை எனப்பிரித்து (65), நான்கு சொற்கள் அடியா னும் வினைவருமெனக் கூறி (68), தத்துவ அடிப்படையிலும் வினைக்கு விளக்கம் தருகின்றது (80, 81).

9.2 தொல்காப்பியம் கால இடை நிலைகளுக்கு நூற்பா கூறவில்லை. நன். (142); இ.வி; (47) தொ.வி. (108) இவை கூறுகின்றன. நன்னூல் கூறும் இறந்த கால இடைநிலை களோடு 'க' வைச் சேர்க்கிறது. இ.வி. (க-நன்னூல் காலத் திற்கு முன்பே பயிற்சியில் உள்ளது தான். புக்கனன் 15.218. சிலம்பு) (இன்—இயாகவும்,'ன்' ஆகவும் நின்று இறந்தகாலம் காட்டும் நிலையும் உண்டு. பிற்காலத்தில் 'த்'-'ச்' ஆன நிலை யும் பார்க்கிறோம்-வைத்தான்-வைச்சான்).

9.3 வீ.சோ. தன்மை முன்னிலை முற்றுக்களே 36 என உரைக்கின்றது. முற்றுவினைச் சொற்கள் 27 என இயம்பு கின்றது நன். (324).

9.4 தொல். (202), தன்மைச் சொல் எனப் பேசுவதை நேமி (39) உளப்பாட்டுத் தன்மை, தனித்தன்மை என வகுக் கின்றது. நன்னூல் (332) முன்னிலையாரை உளப்படுத்துகின்ற தன்மை விகுதிகள், படர்க்கையாரை உளப்படுத்துகின்ற விகுதிகள், இருபாலாரையும் உளப்படுத்துகின்ற விகுதிகள் என விரிக்கின்றது.

9.5 தன்மைப் பன்மைக்கு 'ஓம்' என்ற விகுதியையும் சேர்க்கிறது நன். (322). (ஆ-ஓவாகும் செய்யுளுள்ளே என் பதில் அடக்குவதாக இருந்தால் இங்கு .ஓம்' என்ற தனிவிகுதி கூறத் தேவையில்லை.)

9.6 தன்மை ஒருமைக்கு ஏழு விகுதிகளைக் கூறுகிறது தொல் (203). 'அன்' என்பதனையும் இயைக்கின்றன நன். (331); இ.வி. (237).

9.7 வினைமுற்று விகுதிகளை மட்டும் தொல். ,(205) கூற, வீரசோழியம் (73) கால இடைநிலையையும் சேர்த்து விகுதி யாகக் கூறுகிறது. நிகழ் காலம், எதிர்காலம், முன்னிலை, தன்மை எல்லா வினைமுற்றுக்களுக்குமே இடைநிலையையும் சேர்த்தே விகுதியாகக் கூறுகிறது. (இவை முன்பு விகுதியே கால இடை நிலையாகவும் விகுதியாகவும் அமைந்த நிலையை வைத்துக் கூறுவதுபோல் தோன்றுகிறது. செய்கு-செய்வேன்)

9.8 குறிப்பு வினை முற்றுக்களில் 'வேறு' என்பதை நன்னூல் சேர்க்கின்றது. விரவுவினையில் தொல். (222) கூறுகின்றது.)

9 9 வியங்கோள், முன்னிலை தன்மை இரண்டிலும் வராது எனத் தொல். (226) உரைக்கின்றது. எல்லா இடங்களிலும் வருமென நன்னூல் (338) கூறுகின்றது.

9.10 தொல். வியங்கோள் விகுதி கூறவில்லை. நன்னூல் (338) மூன்று விகுதிகளைக் கூறுகின்றது. இ·வி. (239) மேலும் ஐந்து விகுதிகளைக் கூட்டிக் கொள்கிறது.

9.11 தொல்காப்பியம் 9+6+1=16 வினையெச்சங்களைக் கூறுகிறது. நேமி. செயியர் என்பதை நீக்கி விட்டது. நன். செயியர் என்பதோடு, பின்புள்ள ஆறையும் நீக்கி விட்டு, வான், பான், பாக்கு இவற்றைச் சேர்க்கிறது. உரையாசிரியர்கள் கூறும் விகுதிகளோடு சேர்த்து 3) வினையெச்சங்கள் காணப்படுகின்றன. (இ.தொ.சொ. பக்கம் 254-255).

9.12 பிறவினை பற்றிய எண்ணம் தொல்காப்பியத்துள் காணப்பட்டாலும் பின்னூல்களுள் இலக்கணக் கொத்து பிறவினை பற்றியும் அதன் வகைகளைப் பற்றியும் பேசுகிறது (71).

9.13 எதிர்மறை பற்றிய செய்தியையும் இ.கொ. விளக்கமாக உரைக்கின்றது. தென்னூல் விளக்கம் எதிர்மறைக்கு விகுதிகளைக் கூறுகின்றது (112). எதிர்மறை ஏவலுக்கும் நூற்பா அமைக்கின்றது (114).

இடையியல்

10.1 இடைச்சொற்கள் ஏழு வகைப் படுமெனத் தொல் (250), கூற, எட்டுவகையென நன்னூல் (420) நவில, ஆறென நிறுத்துகின்றது மூ.வீ.ஒ 1.

10.2 இடைச்சொற்கள் இன்னின்ன பொருளில் வருமென நன். (421) விளக்குகின்றது.

10.3 'மன்' மூன்று பொருளில் வருமெனத் தொல். (252) பேச, ஆறு பொருளில் அமையும் என நன் (432). செப்புகின்றது.

10.4 'கொன்' என்ற சொல்லைப் பற்றி நன்னூல் தவிர ஏனைய நூல்கள் சுட்டுகின்றன.

10.5 'ஓ' ஆறு பொருளில் அமையுமெனத் தொல். (256) கூற, எட்டுப்பொருளில் வருமென நன்னூல் (423) உரைக்கின்றது.

10.6 'ஏ' ஐந்து பொருள்களில் இயலுமெனத் தொல் (257) இசைக்க ஆறெனெ இயம்புகின்றது நன். (422)

10.7 'ஏ' இறுதியில் ஓரளபாகுமெனத் தொல். (286) மட்டுமே கூறுகின்றது.

10.8 'மற்று' இரண்டில் வருமெனத் தொல். (262)ஏற்க, முப்பொருளில் வரும் என நன். (433] குறிக்கின்றது.

10.9 'ஆர்' இயற்பெயரோடு இயையுமெனத்தொல் (270) கூற, மு.வீ. (ஒ-16) பின்பற்றுகின்றது. ஏனைய இது பற்றிக் குறிப்பிடவில்லை.

10.10 'குரை' என்ற சொல்லை, தொல். (272), மு.வீ (ஒ-18) இரண்டுமே சுட்டுகின்றன.

10.11 முன்னிலை அசைச்சொற்களாக ஆறைக்கொள்ளுகின்றது தொல். (274). பத்தைப் பகருகின்றது நன். (440 இ.வி. நன்னூலைப் பின்பற்றுகின்றது.

10.12 அசைநிலைச் சொற்களாக ஆறைக்கொள்ளுகின்றது தொல். (279). இருபதை உரைக்கின்றது நன்—(441) இ.வி. (277). நன்னூல் கூறும் கின்று, நின்று இரண்டை நீக்கி என், ஆல் என்பதை இணைக்கின்றது.

10 13 'ஔ' என்னும் வடிவைத்தொல் (281) மட்டுமே சுட்டுகின்றது.

10.14 'ஒடு' 'தெய்ய' என்ற சொற்களைப் பற்றி நன்னூல் (436) குறிப்பிட, இ.வி. பின்பற்றுகின்றது.

10.15 'எற்று' என்ற சொல்லைத் தொல். (263) பேச, இ.வி. மு வீ. பின்பற்றுகின்றன.

10.16 'மன்ற' 'தஞ்ச' என்னும் சொற்களுக்கும் மேற் கூறிய நிலைதான். தொல். (265, 266); இ.வீ. (270); மு.வீ. ஒ, (12, 13)

10.17 'எல்' என்னுஞ்சொல் பற்றித் தொல். (269); மு.வீ. (ஒ, 15) இரண்டும் பேசுகின்றன.

10.18 'ஆங்க' என்ற சொல்லையும் தொல். (277); மு.வீ. (ஒ 21) இரண்டுமே குறிக்கின்றன. நன்னூல் ஆங்கு எனக் சுட்டுகின்றது.

10.19 'ஆக' 'ஆகல்' 'என்பது' இவற்றையும் தொல் (280) மு.வீ. (ஒ 25) இரண்டுமே பேசுகின்றன.

உயிரியல்

11.1 தொல்காப்பியம் (297) இசை, குறிப்பு, பண்பு இவற்றின் அடிப்படையில் உரிச்சொல் தோன்றுமெனக்கூற, நன். (422) பண்பைப் பகரும் பெயர் எனக் கூறுகின்றது. அதோடு செய்யுட்குரிய உரிச்சொல் எனப் பிரிக்கின்றது. இ.வி. (280) தொல்காப்பிய எண்ணத்தைத் தெளிவுப்படுத்தி பெயர், வினை இவைகளுக்கு அடியாகி அமைவதெனக் கூறு கிறது. தொ.வி. (138) பல்குணச்சொல், பெயர், வினை இவை களைச் சார்ந்து வருமெனப் பேசுகின்றது.

11.2 மிகுதிப் பொருளை உணர்த்தத் தொல் (299) மூன்று சொற்களைத்தர, நன். (456) ஆறு சொற்களைத் தரு கின்றது.

11.3 'கடி' என்ற சொல்லுக்கு ஐயம், முன் தேற்று என்ற இரண்டு பொருளையும் நன். (457) தரவில்லை. புதியன தோன்றலாக விரைவும், ஆர்த்தலும் சேர்க்கப்படுகின்றன.

11.4 பண்பு பகர் பெயர்களாக உரிச்சொல்லை எண்ணும் நன்னூல் உயிர், உயிரல்லாதன என்ற இரண்டையும் விளக்கித் தொல். மரபியலில் கூறும் ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் ஈருக உள்ள கருத்துக்களை இங்குத் தருகின்றது. உயர்குணம், உயிரல் பொருட்குணம், இருபொருள் தொழிற்குணம் என இவைகளை விளக்குகின்றது.

11.5 உரிச்சொற்களாகத்தொல். 125 சொற்களையும், நேமி. 27 சொற்களையும், நன், 30 சொற்களையும், இ.வி. 77 சொற்களையும் கூறுகின்றன.

*எச்சவியல்*

12.1 செய்யுள் ஈட்டச்சொற்கள் நான்கையும் இங்குத் தொல். (397) கூறுகின்றது. நன். (270) இயற் சொற்களோடேயே இணைத்துச் சொல்லுகிறது.

12.2 திசைச்சொற்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிருநிலத்தினும் தம்குறிப்பின! எனத்தொல். (400) உரைக்க 'ஒன்பதிற்றிரண்டினில் தமிழ் மொழி நிலத்தையும், சேர்க்கின்றது நன்னூல்.

12.3 பொருள்கோள் நான்கெனத்தொல். (404) கூற, ஒன்பதென நேமி. (67) நவில, எட்டென நன். (411), இயம்ப, இ.வி. (361) நன்னூலைப் பின்பற்றுகின்றது.

12.4 தொகைக்கு இலக்கணங்கூறி விளக்குகின்றது நன் (361) தொல். நேரடியாகத் தொகைகளையே கூறுகின்றது (412). வினையெச்சத்திற்கும் இது போன்றே நன். (342).

12.5 தொல் (416); பண்புத் தொகையினை விளக்கும் போது, நான்கைச் சுட்டி அன்னபிறவும் எனப் பேசுகின்றது. நன் (365); பொதுவில் பண்பை விளக்கும் மொழி தொக்கனவும் எனப் பகர்ந்து, இரு பெயரொட்டையும் இயைக்கின்றது.

12.6 தொல் (417; உம்மைத் தொகைக்கு இயற் பெயர், பல்பெயர், பின்பு அளவின் பெயர், ஏனையவற்றைக் கூற, நன். (368); நான்கு அளவுப் பெயரைக் கூறி ஏனைய வற்றை அதனுள் அடக்குகின்றது.

12.7 அன்மொழித்தொகை, பண்பு, உம்மை, வேற்றுமை இம்மூன்று தொகைகளினின்றும் பிறக்குமெனப் பேசுகின்றது தொல். (418). நன். (369); ஐந்தொகையினின்றும் எழும் என்கின்றது.

12.8 எச்சங்கள் பத்தெனப் பகருகின்றது. தொல் (430) சொல்லெச்சம் ஒன்பது. குறிப்பெச்சம் ஒன்று ஆகப் பத் தெனக் கூறுகின்றது நன். (360).

12.9 ஒருமை சுட்டிய கிளவி பன்மைக்காகும் எனத் தொல்(461) உரைக்க, பன்மையில் ஒருமையும் அமையும் என்கின்றது நன். (380).

12.10 தொல். 141) எழுத்ததிகாரத்தில் கூறும் செய் தியை நன். (391) சொல்லில் கூறுகின்றது.

12.11 தொல். எழுத்ததிகாரம் குற்றியலுகரப் புணரி யலில் கூறும் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி விதிகளை தொ. வி (95, 102, 126) சொல்லில் உரைக்கின்றது.

11.12 பிரயோக விவேகமும் (4.5) சில எழுத்திலக் கணங்களைத் தன் சொல்லிலக்கணத்தில் கூறுகின்றது. தான் எழுத்திலக்கணம் தனியாகக் கூறாமையே காரணமாக அமையலாம்.

*முடிவுரை*

13. “தமிழ்ச் சொல்லிற்கு (சொற்களுக்கு, இலக்கணத் திற்கு) எல்லாம் வட நூலே தாயாகி நிகழ்கின்றமையால், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்” வீரசோ-60 உரை. இதுபோன்ற எண்ணம் உரையாசிரியர்களுக்கு இருந் தது. ‘ஒரு சொல்லாய வழித் தமிழ்ச் சொல் வடபாடைக்கட்

செல்லாமையானும் வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும் வடசொல்லாய் ஈண்டுவழங்கப்பட்டன எனல் வேண்டும். தொல்-சொல்-41-சேனுவரையர் உரை. இதுபோன்ற எண்ணம் வளர்ந்து, 'தனித் தமிழுண்டோ, அன்றியும் ஐந்தெழுத்தால் ஒரு பாடையென்றறையவே நாணுவர் அறிவுடையோரே' எனவும் 'வடமொழி தமிழ் மொழி எனும் இரு மொழியினும் இலக்கணம் ஒன்றே' எனவும் இலக்கணக் கொத்து ஆசிரியரை எழுதத் தூண்டியது இன்று (Some Dravidian words in Sanskrit collected papers on Dravidian Linguistics-By Burrow-Annamalai University 1961). போன்ற நூல்கள் அவ்வெண்ணத்தை மாற்று கின்றன. தமிழுக்குத் தனி மரபுண்டு என்பதை இம்மரபிலக் கணங்கள் உணர்த்துகின்றன. வீரசோழியம், பிரயோக விவேகம் இவை வடமொழி மரபை ஒட்டி இலக்கணங் கூறுவ தால் தமிழ் மரபோடு ஒட்டாது தனித்தே நிற்கின்றன. இவற்றை எல்லாம் அறிய இலக்கணத் தொகை பயன்படு கின்றது.

* தொல் - தொல்காப்பியம், வீரசோ-வீரசோழியம், நேமி-நேமிநாதம், நன்-நன்னூல், பிரயோ-பிரயோக விவேகம், இ. வி.-இலக்கணவிளக்கம், இ. கொ.-இலக்கணக் கொத்து, தொ. வி.-தொன்னூல்விளக்கம், மு. வீ.-முத்து வீரியம்.

** ( )களுக்குள் கொடுக்கப்பட்டுள்ள எண் அந்தந்த நூலிலுள்ள எண்களைக் குறிக்கின்றது.

## இணைப்பு

| தொல்காப்பியம் | வீரசோழியம் | நேமிநாதம் | நன்னூல் |
|---|---|---|---|
| தொல்காப்பியர் | புத்த மித்திரர் | குணவீர பண்டிதர் | பவணந்தி முனிவர் |
| கி. மு. முதல் நூற்றாண்டு | 11-ம் நூற்றாண்டு | 12-ம் நூற்றாண்டு | 13-ம் நூற்றாண்டு |
| கிளவியாக்கம் 61 | | மொழியாக்க மரபு 15 | |
| வேற்றுமையியல் 22 | 1 வேற்றுமைப் படலம் 9 | வேற்றுமை மரபு 5 | |
| வேற்றுமை மயங்கியல் 34 | 2 உபகாரப் படலம் 6 | உருபு மயங்கியல் 3 | |
| விளிமரபு 37 | | விளிமரபு 6 | |
| பெயரியல் 43 | 5 தாதுப்படலம் 11 | பெயர் மரபு 9 | 2 பெயரியல் 62 |
| வினையியல் 51 | 6 கிரியாபதப் படலம் 15 | வினைமரபு 12 | 4 வினையியல் 32 |
| இடையியல் 48 | 4 தத்திதப் படலம் 8 | இடைச்சொல் மரபு 5 | 5 இடையியல் 22 |
| உரியியல் 100 | | உரிச்சொல் மரபு 5 | 3 உரியியல் 21 |
| எச்சவியல் 67 | 3 தொகைப் படலம் 8 | எச்சமரபு 11 | பொதுவியல் 68 |
| இயல்கள் 9 | 6 | 9 | 5 |
| நூற்பாக்கள் 463 | 57 | 71 | 205 |

## இணைப்பு

| பிரயோக விவேகம் | இலக்கண விளக்கம் | இலக்கணக் கொத்து | தொன்னூல் விளக்கம் | முத்துவீரியம் |
|---|---|---|---|---|
| சுப்பிரமணிய தீட்சிதர் | வைத்தியநாத தேசிகர் | சுவாமிநாத தேசிகர் | வீரமாமுனிவர் | முத்துவீர உபாத்தியாயர் |
| 17-ம் நூற்றாண்டு | 17-ம் நூற்றாண்டு | 17-ம் நூற்றாண்டு | 18-ம் நூற்றாண்டு | 19-ம் நூற்றாண்டு |
| காரக படலம் 17 | | 1 வேற்றுமையியல் 52 | | |
| | | | | |
| | | | | |
| | 1 பெயரியல் 68 | | 2 பெயரியல் 50 | 1 பெயரியல் 1+135 |
| 4 திங்குப் படலம் 17 | 2 வினையியல் 24 | 2 வினையியல் 22 | 3 வினைச்சொல்லியல் 27 | 2 வினையியல் 48 |
| 3 தத்திதப் படலம் 6 | 3 இடையியல் 29 | | 4 இடைச்சொல்லியல் 8 | |
| | 4 உரியியல் 15 | | 5 உரிச்சொல்லியல் 5 | |
| 2 சமாச படலம் 11 | 5 பொதுவியல் 78 | 3 ஒழியியல் 45 | 1 சொற்பொதுவியல் 12 | 3 ஒருபியல் 125 |
| 4 | 5 | 3 | 5 | 2 |
| 51 | 214 | 119 | 102 | 1+398 |

## பயன்படுத்திய பதிப்புக்கள்

1. தொல்காப்பியம் — சொல்லதிகாரம்- சேனாவரை. யருரை—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்-மே 1959.

2. வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் இயற்றிய வுரையும் பவானந்தர் கழகம்-வேப்பேரி: சென்னை 1942.

3, நேமிநாத மூலமும் உரையும் செந்தமிழ்ப் பிரசுரம்-6, இரண்டாம் பதிப்பு-1923.

4. நன்னூல் காண்டிகையுரை-வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார். பதினெட்டாம் பதிப்பு-1958.

5 பிரயோக விவேகம் மூலமும் உரையும்-ஆறுமுக நாவலர் 3-ம் பதிப்பு 1952

6. இலக்கணவிளக்கம்-சி வை. தா. பதிப்பு- 1889.

7. இலக்கணக்கொத்து மூலமும் உரையும்—ஆறுமுக நாவலர்—5-ம் பதிப்பு 1952.

8. தொன்னூல் விளக்கம், வீரமாமுனிவர். அர்ச் சூசையப்பர் அச்சுக்கூடம், சென்னை. இரண்டாம் பதிப்பு 1891.

9.முத்துவீரியம் 1889 முத்துவீர உபாத்தியாயர்
Albinion Press, Madras.

# தமிழ்மொழி-வரலாற்று
# அகர வரிசையில் 'ஐ' 11

0 'ஐ' எழுத்தாகவும், சொல்லாகவும் பயன்படுகிறது:

ஒலியெழுத்து

1 'ஐ' ஈரளபிசைக்கும் நெட்டெழுத்து (தொல். 4) இரண்டு மாத்திரைகளையுடை ஒன்பதாம் உயிர் எழுத்து.

2 பிறக்கும் நிலை—இ, ஈ, எ, ஏ, ஐ என இசைக்கும்

..............................

*அவை தாம்*
*அண்பல் முதல் நா விளிம் புறல் உடைய*

—தொ. 86

3 தொல்காப்பியம் இரண்டு உயிர்களின் கூட்டாக 'ஐ' காரத்தைக் கருதுகிறது. 'அகர இகர ஐகாரமாகும்' (தொல் 54). அதோடு 'ய'கரப் புள்ளியும்அமையலாம்.

*அகரத் திம்பர் யகரப் புள்ளியும்*
*ஐ என் நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும்*

—தொல்.56 (நன்.12)

4 ஐ காரத்திற்கு இன எழுத்தாகக், குறிலான 'இ' யைக் கூறுகின்றது.

*ஐ, ஔ என்னும் ஆயீரெழுத்திற்கு*
*இகர உகரம் இசை நிறைவாகும்*
—தொல். 42 (நன் 71)

5 யாப்பில் மோனையாக அ, ஆ, ஔ, ஐ இவை அமையும் என வீரசோழியம் உரைக்கின்றது. (முன்னிரண் டாவி யும் ஈறும் ஐயும் மோனை. வீர. சோ. 110-1.)

6 போலியிலும் 'ஐ' காரத்திற்கு 'அ'கரம் பயன்படு கின்றது. ஐந்து—அஞ்சு, அமையம்— அமயம் (நன். 123).

7 ஒரு மாத்திரையாகவும் ஒலிக்கும் . 'ஓரளபாகும் இடனுமாறுண்டே தேருங்காலை மொழி வயினான (தொல். 57).

வீரசோழியம் ஒன்றரை மாத்திரை என்கின்றது. 'ஒன்றரை ஐ,ஔ' (வீரசோ 5-1; இதனையேயாகும் ஐகாரக் குறுக்கத்திற் கும் கொள்ளலாம்.

8 எழுத்துச் சாரியையாகக் காரமும் கானும் அமையும். 'ஐகார ஔகார கானொடுந் தோன்றும்' (தொல். 137)

9 உயிர் மெய்யாக அமையும்போது க்+ஐ— 'கை' ஆகவும் 'ன்+ஐ—னை ஆகவும்' ஐக்குப் பதில் வடிவங்கள் அமைகின்றன.

10 மொழி முதல், இடை, கடை மூவிடங்களிலும் வரும்.

11 சொல்—பெயர்ச்சொல் ஐ—(1) தலைவன் 'என்' 'ஐ' முன்னிலில்லன்மின் தெவ்விர் 771 குறள், (2) அரசன், (3) கணவன் (4) ஆசான், (5) தந்தை என் ஐ வாழிய பலவே 136 4 நற், (6) உடன் பிறந்தான்-இவன் தன்னை-279-3 புறம், வியப்பு—ஐஅறிவகற்றும் 71-7 அகம், (8) அழகு— ஐ தேய்கு 38-15 அகம், (9) மென்மை (10) நுண்மை (11) கோழை— ஐயினான் மிடறடைப் புண்டு 812-7—தேவா, (12) கபவியாதி — ஐமுதற் பிணியினால் அழுங்கி— பாரத-குல (13) சவ்வர

பாஷாணம் (14) இளி என்னும் ஐந்தாம் இசையின் எழுத்து (15)ஐந்து —ஐ வகை மரபு 1021 தொல். (16)ஐயம் (சந்தேகம்) தெளிந்தான் கண் ஐயுறவும் 510 குறள்.

## 12 இடைச் சொல்

12.1 இரண்டாம் வேற்றுமை உருபு—தொல் காப்பியம் 28 பொருளில் வருமெனப் பேசுகின்றது. (தொ. சொ. 71,72)

(1) காப்பு சேனையைக் காத்து-6:3324,1 கம்பன் (2) ஒப்பு—வலியொத்தியே வாலியொனை—56-12 புறம் (3) ஊர்தி —தேரை ஊரும். (4) இழை—எயிலை இழைக்கும் (5) ஒப்பு —கிளியை ஒப்பும் (6) புகழ் பெரியோரை வியத்தலும் இலமே—192—12 புறம் (7) பெறல்—அரும் பெறற் பாவையை அடைக்கலம் பெறல் 15-1 சிலம்பு (8) இழவு—அன்னோனை இழந்த இவ்வுலகம் 217-12 புறம் (9) வெகுளி—புகழொடு உயிரைச் சுடு வெந்தீயோர் நின்போற்றீயார் உளரோ 2:343-4 கம்பன் (10) செறல்— செற்றாரைச் செறும் (11) உவத்தல்—வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் 1;778-1 கம்பன் (12) கற்பு—கற்புறுத்திய கற்புடையாள் தனை வற்புறுத்தி 2:313-3 கம்பன் (13) அறுத்தல்—வில்லை அனங்கன் இறுத்தான் 1:775-4 கம்பன் (14) குறைத்தல்—மரத்தை அறுக்கும் (15) தொகுத்தல்—நெல்லைத் தொகுக்கும் (16) பிரித்தல்—உயர் பிறப்பாளனைக் கையகத் தொழித்து 14-58 சிலம்பு (17) நிறுத்தல்—பொன்னை நிறுக்கும் (18)அளவு—அரிசியை அளக்கும் (19)எண்—வீற்றிருந்தோரை எண்ணுங் காலை 27-4 புறம் (20) ஆக்கல்—அறத்தை ஆக்கும் (21) சார்தல்—கிரியை எய்தினர் 4:837-4 கம்பன் (22) செலவு—பாடுவன் மன்னற் பகைவரைக் கடப்பே 53-15 புறம் (23) கன்றல்—சூதினைக் கன்றும் (24) நோக்கல்-புதல்வனை நோக்கி 66-2 அகம் (25) அஞ்சல்—அற்காக்கைக் கூகையைக் கண்டஞ்சின 1;771-4 கம்பன் (26) சிதைப்பு—சினங்கெழு வேந்தரை —சிதையத் தாக்கி 72-7 புறம். ஏனைய இலக்கணிகள் கூறுவன இவற்றுள் அடங்கும். (பார்க்க: இலக்கணத்தொகை—சொல் பக்கம் 86-92)

**12.2** *விகுதிகள்*

*முன்னிலை விகுதி — அவற்றுள்*

*முன்னிலைக் கிளவி*

இ ஐ ஆய என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும்
(தொல். 703)

உண்டனை 17-33 சிலம்பு.

12.3 பண்புப் பெயர் விகுதி—தொல்லை

12.4 தொழிற்பெயர் விகுதி—நடை, தொடை கொலை

12.5 அசைநிலை—இரப்பாரை இல்லாயின் 1058 குறள்

12.6 சாரியை—நற்றோள் மணந்த ஞான்றை—36-4 குறுந் பண்டு—பண்டை

13.0 உரிச்சொல்—ஐ வியப்பாகும் 868 தொல்

13.1 வியப்புக் குறிப்பு—ஐ எனும் ஆவியர் ஆடையர் 24-2-12 பரிபாடல்

13.2 வருத்தக் குறிப்பு—ஐயென—1025-3 சிந்தாமணி

13.3 சம்மதக்குறிப்பு—ஐயென மன்னவன் ஏவ 907-3-சிந்தாமணி

13.4 அதட்டற் குறிப்பு

13.5 விரட்டற் குறிப்பு

ஐகாரம், அமையம்—அமயம் என ஒலிக்கும் போது குறுக்கமாகவும், ஐந்து—அஞ்சு என எழுதும்போது போலியாகவும் கொள்ளுதல் பொருந்தும்.

*துணைபுரிந்த நூற்கள்*

1. Tamil Lexicon Vol. I Page 575

2. இலக்கணத்தொகை—எழுத்து ச.வே. சுப்பிரமணியன் 1967 பக்-42

3. இலக்கணத்தொகை—சொல், ச.வே. சுப்பிரமணியன் 1970

4. ஒலிக்குறிப்பு அகராதி—மு. சதாசிவம், பாரிநிலையம் 1966

5. கலைக்களஞ்சியம் தொகுதி இரண்டு பக்கம்-617

6. தமிழ்த்துறையின் சொல்லடைவுகள்

7. திருக்குறள் சொல்லடைவு—சாமிவேலாயுதம்பிள்ளை

8. தொல்காப்பியம்—உரைக்கோவை

9. தொல்காப்பியம்—மூலம் கழக வெளியீடு 1967

கட்டுரைகள்

1. A note cn 'ai' and 'au' in Tamil
D.. K. Meenakshi. லண்டன் தமிழ்ச்சங்க மலர் 1972-73 பக்கம் 161

2. The Phonolgical Interpreation of Dipthongs in old Tamil. Dr. S.V. Shanmugam Indian Linguisties.

3. ஐகாரம் வேற்றுமை—டாக்டர் ச. அகஸ்தியலிங்கம் நான்காம் கருத்தரங்கு மலர் 1972 பக்கம் 279

4. தமிழில் ஐகார ஔகாரங்கள்—டாக்டர் பொற்கோ இலக்கண உலகில் புதிய பார்வை பக்கம் 34-36

# தமிழில் உயிரொலி மாற்றங்கள் 12

மொழியமைப்பில் காலந்தோறும் பல்வகை மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொது நிலையில் ஒலி மாற்றங்கள், சொல் மாற்றங்கள், தொடர்நிலை மாற்றங்கள் எனப் பகுக்கலாம். இவற்றுள் உயிர் ஒலி மாற்றங்களைப் பற்றி மட்டும் சிந்திப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

உயிரொலி மாற்றங்கள் (1) செய்யுளின் ஓசை நயத்திற்காக அமையலாம்—குறில் நெடிலாவதை இப்பகுப்பில் அடக்கலாம். (2) முயற்சிக் குறைவின் காரணமாக ஏற்படலாம்—உ, ஒ ஆதல். இதனையே ஔவை—அவ்வை ஆனதற்கும் ஐயர்—அய்யர் ஆனதற்கும் குறிக்கலாம். (3) பிறமொழியாளர்கள் தமிழ் ஒலிகளைச் சரியாக உச்சரிக்க இயலாமை காரணமாக நிகழலாம்—உகரம் இகர மாதலைக் கொள்ளலாம். (4) பேச்சு வழக்கு, எழுத்து வழக்கில் நுழையும்போது நேர்ந்திருக்கலாம், மதுரை > மதிரை, கடா > கிடா போன்றவற்றைக் கூறலாம்.

இவ்வாறு தமிழ் மொழியில் அமைந்த சில உயிரொலி மாற்றங்களை இங்கே காண்போம்.

சுட்டிடைப் பெயர்களும், விகுதிகளும், உருபுகளும் குறில் நெடிலாயின.

அங்கு > ஆங்கு          அள் > ஆள்

இங்கு > ஈங்கு          அன் > ஆன்

இது > ஈது          அர் > ஆர்

ஒடு > ஓடு

அது > ஆது

இலக்கிய அடிப்படையில் நோக்கும்போது, முற்காலத்தில் (சங்க காலம்)[1] குறில் வடிவங்கள் மிகுதியாகவும் நெடில் வடிவங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன. பிற்காலத்தில் வர வர நெடிலொற்று விகுதிகள் மிகுதியாகவும் குறிலொற்று விகுதிகள் குறைவாகவும் அமைந்தன.

இவை போகவும் குறில் நெடிலானவை உள.

பெடை > பேடை

அனுமன் > அனுமான்[2]          முது > மூது

கலவம் > கலாவம்[3]          அம்ம > அம்மா

கூதளம் > கூதாளம்          அட > அடா

சகடு > சாகாடு          கவுந்து > காவுந்து[4]

அம்மனை > அம்மானை

உயிரின் ஒலியில் இதழ்கள் முழு நிலையில் குவிந்து தோற்றுவிக்கப்படும் ஒலி 'உ' என்பது (Rounded high back vowel). அது முயற்சி குறைந்து இதழைக் குறைவாகக்குவிக்கும்போது தோன்றுகின்ற ஒகரமாகத் (mid back vowel) திரிவதைப் பார்க்கின்றோம்.

---

1. Finite verb in AkanaanuuRu—S.V Subramanian Journal of the Dept. of Tamil III 1972.

2. Index of KamparaamanyaNam

3 Grammar of AkanaannuRu — Published by the Uuiversity of Kerala 1972.

4. Descriptive Grammar of Cilappatikaaram — Dr. S. V. Subramanian.

| | |
|---|---|
| உடம்பு >ஒடம்பு[5] | சுவர் >சொவர் |
| உலக்கை >ஒலக்கை | துரத்தி >தொரத்தி |
| உலகம் >ஒலகம் | புடவை >பொடவை |
| உறவு >ஒறவு | புறப்படு >பொறப்படு |
| உனக்கு >ஒனக்கு | முகம் >மொகம் |
| குடல் >கொடல் | முதல் >மொதல் |
| குரங்கு >கொரங்கு | முதலாளி >மொதலாளி |
| குரல் >கொரல் | முளைக்குது >மொளைக்குது |

பிற மொழியாளர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில், உதாரணமாக—நாயக்கர் காலத்தில் தமிழ்ச் சொற்களைத் தெளிவாக ஒலிக்கத் தெரியாது உரைத்தனர். அதோடு அடுத்து வந்த உயிரொலியின் தாக்கமும் அதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

| | |
|---|---|
| அமுது >அமிது[6] | கழுஞ்சு >கழுஞ்சி |
| அருளின் >அருளின | கொடுஞ்சி >கொடிஞ்சி |
| சதுரத்து >சதிரத்து | பருதி >பரிதி |
| சுலபம் >சிலபம் | எங்கு >எங்கி |
| செலுத்தி >செலித்தி | அடிச்சு >அடிச்சி |
| | படிச்சு >படிச்சி |

பேச்சு வழக்கு இலக்கியத்தில் நுழையும் போதும் இம் மாற்றங்களைப் பார்க்கிறோம். இகர உயிரே மிகுதியாக இத்தகைய மாற்றம் பெறுகின்றது. அகர, உகர, எகர, ஒகரங்களாக மாறும் நிலையை இலக்கியம் காட்டுகின்றன.

---

5. யாருக்காக அழுதான் - இலக்கண விளக்கம் உ. இலிண்டா கிறிஸ்டி (Un Published M.A. Thesis-University of Kerala)

6. History of Tamil Language — T.P.M.

அ

| | |
|---|---|
| அதியமான்>அதயமான் | ஆம்பிளை>ஆம்பளை |
| எதிர் >எதர் | சன்னிதி >சன்னதி[7] |
| ஞாயிறு >நாயிறு | வேனில் >வேனல் |

ஆ

| | |
|---|---|
| அடிமை >அடுமை | மகிழ >மகுழ |
| நிக்கிறது >நிக்குது | மனிதன் >மனுசன் |
| பங்கினள்>பங்குனள் | விழிரும் >வுழிரும் |

இ

| | |
|---|---|
| சிவப்பு >செவப்பு | விலை >வெலை |
| நினைப்பு >நெனைப்பு | விளையாடு>வெளையாடு |

ஈ

| | |
|---|---|
| பிணம் >பொணம் | பிறந்து >பொறந்து |
| பிளந்து >பொளந்து | பிறத்தல் >பொறத்தல் |

ஐகாரம் அகரமாகவும், எகரமாகவும் அமைதலும்உண்டு இரண்டு உயிரொலிக் கூட்டங்களில் ஒரு உயிரொலி மட்டும் அமைதல் ஒரு வகை. இல்லையெனில், ஈரொலியுமின்றி வேறோர் உயிரொலி அமைகின்றது.

| (அ—1) | | (அ—2) | |
|---|---|---|---|
| இமயம் | >எமயம் | வள்ளை | >வள்ளி |
| ஐந்து | >அஞ்சு | அநாதை | >அநாதி |
| | | இன்னைக்கு | >இன்னிக்கு |
| | | எத்தனை | >எத்தனி |

7. Noun Morphology of Marumakkal vazi maanmiyam—Kuttalam Pillai (unPublished M. A. Thesis) University of Kerala.

| | | | |
|---|---|---|---|
| | | ஆ | |
| எல்லை | >எல்லெ | வைக்க | >வெக்க |
| சினை | >சினெ | வைத்த | >வைச்ச |
| தலை | >தலெ | | |

உயிரொலியில் மாற்றங்கள் ஏற்படுவது பற்றி இலக்கண நூற்களும் பேசுகின்றன.[8]

*(இக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள சான்றுகள் அனைத்தும் சங்க இலக்கியம் முதல் 'யாருக்காக அழுதான்' வரையுள்ள இலக்கியங்களிலிருந்து தரப்பட்டுள்ளன.)*

8. நன்னூல்—123, 163, 164, 172, 173, 203, 253 முதலியன.

தொல்காப்பியம்—208, 237, 258, 277, 311, 410, 606, 607, 608, 611, 680, 696, 697, 771.

# தமிழ் மெய்யொலி மாற்றங்கள் 13

தொல்காப்பியக் கால முதலே மெய்யொலியில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதைப்போலி (தொல்-82, நன்-122) என மரபிலக்கணங்கள் கூறுகின்றன. Free variation என மொழியியல் கூறும்.

இம் மாற்றங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள. (அ) சரியாக ஒலிகளை உச்சரிக்கும் தன்மை குறைந்து சரியாக உச்சரிக்க இயலாமை, கருப்பு—கறுப்பு, குறும்பி—குரும்பி, பவழம் - பவளம் போன்றவை. இன்று கன்னியாகுமரி மாவட்டத்தினரைத் தவிரத் தமிழகத்தில் ற, ர ஒலிகளை வேறுபடுத்தி ஒலிப்பவர்கள் குறைவு. இதனால் இம்மெய் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

(ஆ) (1) பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக்க விரும்பியதால் ஏற்பட்டவை. தசரதன்—தயரதன் வசந்தமாலை—வயந்தமாலை, வயசு—வயது, கவசம்—கவயம், கலசம்—கலயம், அசா—அயா போன்றவை.

(இ) (1) தமிழ் மொழியிலேயே காலத்தால் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்பட்டவை. யாண்டு ஆண்டு, யாடு—ஆடு, யானை—ஆனை போன்றவை. இதனால் மொழிக்கு முதலில் அமைந்துள்ள உயிர்மெய்யில் மெய்யின் வீழ்ச்சி, முந்திய திராவிட மொழியில் மொழிக்கு முதலில் உயிரெழுத்துக்களே அமைந்து இடைக்காலத்தில் உடம்படுமெய்யாகிய 'ய்'கரம் இணைந்து பின்பும் மறுபடியும் வீழ்ந்ததாகக்

கொள்ளலாம். அதே போன்று சபை—அவை, சமணர்—அமணர், சந்தி—அந்தி, சமர் - அமர், சூசி—ஊசி, சேமம்—ஏமம் போன்றவற்றிலும் திராவிட மொழியிலிருந்து வடமொழிக்குச் சென்று மறுபடியும் பழைய வடிவத்தையே நாம் பயன்படுத்துவதாகக் கொள்ளலாம். திறை—இறை, காசு—ஆசு போன்றவையும் நினைக்கத் தக்கவை.

(2) பிற்காலத்தில் கடையிலுள்ள மெய்கள் வீழ்ந்தன. பார்—பாத்து, சேர்—சேத்து, வேர் - வேத்து, கோர்—கோத்து தண்ணீர்—தண்ணி, மேல்—மே, அவள்—அவ, இவள்—இவ, உங்கள்—உங்க.

3. இடைவீழ்ச்சி—மருமகன்—மருகன்

(ஈ) கவிஞர்களுக்கென அமைந்த சலுகையால் எதுகை, மோனை போன்றவற்றால் ஏற்பட்ட விகாரங்களால் ஏற்பட்ட மாற்று வடிவங்கள். (1) கரும்பு - கருப்பு, வேம்பு—வேப்பு, பாம்பு—பாப்பு, செம்பு—செப்பு, வேந்து வேத்து, அன்பு—அற்பு, நண்பு—நட்பு, கன்று—கற்று, வென்றி—வெற்றி, குரங்கு—குரக்கு, (2) எண்—எள், வேண்—வேள். இவற்றுள் எது முந்திய வடிவமெனக் காண்பது இன்றியமையாத ஒன்று. தறை—தரை.

(உ) ஒரு காலத்துப் பொருள் வேறுபாடு அமைந்து பிற்காலத்து, அவ்வேறுபாடு இழக்கப்பட்டு ஒத்த வடிவமானவை: ஓதை—ஓசை (2) ஒருமை, பன்மை வேறுபாட்டோடிருந்து பின்பு வேறுபாடற்றுப் போலியானவை, அறம்—அறன், இடம்—இடன், சினம்—சினன், கயம்—கயன், கலம்—கலன், குலம்—குலன், குணம் குணன், சுரம்—சுரன், திறம்—திறன், தேம்—தேன், நயம்—நயன், நலம்—நலன், நிலம்—நிலன், பயம்—பயன், புலம்—புலன், பொலம்—பொலன், மனம்—மனன், மடம்—மடன், வரம்—மரன், மறம் மறன், முகம்—முகன், வலம்—வலன், வறம்—வறன்.

(ஊ) (1) முன் அண்ண ஒலி (Alvelon) நடு அண்ண ஒலி யாதலால் (Paletal), பேச்சுவழக்கால் இவை அமைந்திருக்க

லாம். வைத்து—வைச்சு, சிரித்த—சிரிச்ச, (Dental) தெரிந்து —தெரிஞ்ச, கைந் நின்ற – கைஞ்ஞின்ற, மெய்ந் நின்ற –மெய் ஞ்ஞின்ற, அத்தன்—அச்சன், செய்து—செஞ்சு, ஐந்து – அஞ்சு.

(2) ஞெகிழ்ந்தது நெகிழ்ந்தது, ஞண்டு – நண்டு, ஞாயிறு – நாயிறு.

(3) ஒன்று—ஒண்ணு.

(எ) (1) வளைநா ஒலியாக அமைந்த ஒலிகளில் சில; நிழல் —நிணல், தழல் – தணல்

(1) குழல்—குரல்.

(ஏ) சேரல், வியல்—வியன்

(ஐ) காமம்—காமர், திறம்—திறல்

(ஒ) புதர்—புதல், அயிரை – அயிலை

(ஓ) பெண்சாதி—பெஞ்சாதி; பெண்பிள்ளை— பொம்பிளை.

(ஔ) மகன்—மவன், மகள்—மவள், அதிகன்—அதியன்

(கொடுக்கப்பட்டுள்ள சான்றுகள் அனைத்தும் இலக்கியச் சான்றுகள்)

### பயன்பட்ட நூற்கள்


தொல்காப்பியம் மூலம்—கழக வெளியீடு 1954

2. நன்னூல் காண்டிகையுரை 1958

3. Dr. S. V. Subramanian, Grammar of Akanaa-nuuRu

4. —do—Descriptive Grammar of Cilappati kaaram

5. T. P. MeenachiSundaram, History of the Tamil Language.

6. இலிண்டாகிறிஸ்டி—யாருக்காக அழுதான் — இலக்கண விளக்கம்.

7. ச. வே. சுப்பிரமணியம். தமிழில் உயிரொலி மாற்றங்கள்.

# தொன்னூல் விளக்கம்—
# நுண் மதிப்பீடு 14

1 பதினெட்டாம் நூற்றுண்டில் தோன்றி, பத்தொன்ப தாம் நூற்றுண்டில் அச்சான, ஐந்திலக்கணமும் கூறுகின்ற தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று வீரமாமுனிவரால் இயற் றப்பட்ட தொன்னூல் விளக்கம்.

2. நூல், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து அதிகாரங்களில் 370 நூற்பாக்களையுடையது.

3. தான் இலக்கணத்தை வகுத்துக் கொண்ட அடிப் படைக்குத் தக இயல்களை வகுத்துள்ளார்.

3.1 எழுத்ததிகாரம் (நூற்பாக்கள் 2-40) எழுத்தியல், எழுத்தின் பகுப்பு, எழுத்தின் விகாரம் என முப்பிரிவுகளை யுடையது.

3.2 சொல்லதிகாரம் (41 முதல் 142 நூற்பாக்கள்) சொற் பொதுவியல், பெயர்—வேற்றுமையியல், பகுபதப் பெயரியல், சுட்டு வினு, வினைச் சொல்லியல்—முக்கால முற்று வினை, ஏவல், வியங்கோள், ஈரெச்சம், வினைக் குறிப்பு, இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல் என ஐந்து பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு, ஓரளவு வரையறுக்கப்பட்டுள்ளது.

---

1. இங்குப் பயன்படுத்தியுள்ள பதிப்பு—1891ல் அச்சிடப்பட்ட இரண்டாம் பதிப்பு, முதற் பதிப்பு 1938ல் அச்சானதாகத் தெரிகிறது. வீரமாமுனிவர் காலம் 1680—1747

3.3 பொருளதிகாரம் (143-200) பதிகம், காரணம், விரிவு, தொகையுந் துணிவும், உரிமை (கால உரிமை, இட உரிமை, பண்புரிமை, சாதித் தொழிலுரிமை, பற்று தலுரிமை, வடிவு முதலிய உரிமை, ஒழுக்க உரிமை, சொல் லுரிமை.) காலத்திற்குத் தக மரபைத் தழுவி பொருளதி காரம் அமைக்கப்பட்டுள்ளது.

3.4 யாப்பதிகாரம் (201—300) செய்யுளுறுப்பு,செய்யுளி யல், செய்யுள் மரபியல் எனப் பகுக்கப்பட்டுள்ளது.

3.5 அணியதிகாரம் (301-370) சொல்லணியியல்—மறு நிலையணி, சொன் மிக்கணி, சொல்லஞ்சணி, சொல்லொப் பணி, பொருளணியியல் எனவகைப் படுத்தப்பட்டுள்ளது.

4.0 எழுத்து.

4.1 எழுத்துக்களின் பிறப்பைப் பற்றிப் பேசும் போது தொ. வி, மிடறு, உரம், உச்சி, என்பவற்றை முதலிடமாக வும் இதழ், மூக்கு, அணம், பல், நா இவற்றைத் துணையிட மாகவும் கூறுகின்றது. முதலிடம், துணையிடம் என்பன இடம், உறுப்புக்கள் என்ற எண்ணத்தில் அமைந்திருக்கலாம்.

4.2 மொழியிடை எழுத்துக்கள் (மெய்ம் மயக்கம்) பற்றித் தொ. வி. குறிப்பிடவில்லை.

4.3 எழுத்தின் பெயர்கள் இடுகுறி, காரணம், பொது, சிறப்பென்ற வகைகளுள் அடங்குமென்று கூறி உரையில் உயிர், உயிர்மெய்யே உடம்பே என்பன இடுகுறிப் பொதுப் பெயர். அவற்றுள், அ, ஆ, க, ங என்பன இடுகுறிச் சிறப்புப் பெயர் என விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எழுத்தின் பெயர்களை விளக்குவது பொருந்துமென்று தோன்றவில்லை, பண்பாடு, தத்துவம், காரணம் இவற்றின் அடிப்படையில் தான் தமிழ் எழுத்துக்களுக்கு பெயர்கள் கொடுக்கப்பட் டுள்ளன.

4.4 எழுத்துக்களின் புதுமையைப் புகுத்தியவர் தொ.வி ஆசிரியர்:-

*நீட்டல் கழித்தல்*

குறில் மெய்க்கிரு புள்ளி ...தொ வி 12. இங்கு மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல். 'எகர ஒகரத் தியற்கையுமற்றே' என்பதினின்றும் உயிர் எழுத்துக் குறிலாகிய எ, ஒ மெய்க்கு 'க்' எனவும் வேறுபடுத்தினர். அதற்கும் பின்புதான் ஏ, ஓ, என்ற வடிவங்களும் தோன்றின போலும்.

4 5 குற்றியலுகரத்தைக் கூறும்போது ஏனைய இலக்கணிகள் கருத்தைக் கூறினாலும் வேறுமுறையில் கூறுகின்றார்.

தனிக் குறில் அல்லவற்று இறுதி வன்மை ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப......தொ. வி. 15.

4.6 மகரக் குறுக்கத்தையும், ல, ள திரிந்த ன, ண முன் குறுகும் என்று பிறர் கூற,

*மகரம் லளக் கீழ்*
*வம் மேற் குறுகும்* —தொ. வி. 17

என இவர் பேசுகின்றார்.

4.7 உடம்படு மெய் பற்றிப் பேசும்போது ஏனைய இலக்கணங்கள் இ, ஈ, ஐ வழி 'ய' வ்வும் எனப் பேச தொ. வி. இ, ஈ, எ, ஐ, வழி 'ய' வ்வும் எனச் சுட்டுகின்றது தொ. வி. 20.

4.8 புணர்ச்சியில் ஏற்படும் வேறுபாடுகளை, மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல் அல்லது தோன்றல், திரிதல், கெடுதல் என்று பிற இலக்கணிகள் கூற திரிபு, அழிவு, ஆக்கம், திரட்டு நூல் விகாரம் (தொ. வி. 21) என நான்காகப் பேசுகின்றது. 'திரட்டு' என்ற அமைப்புப் பல சந்திகளை உள்ளடக்குவதால் பொருந்துமெனத் தோன்றுகிறது.[2]

4.9 'ம'கர ஈற்றுக்கு முன் 'ந'கரம் வரின் 'ம்' கரம் வீழும் என்பதைத் தொ. வி. 23-லும் ண, ன, முன் 'ந'கரம் வரின் மாய்ந்து கெடும் என்பதைத் தொ. வி. 24-லும் ல, ள

2. இலக்கணத் தொகை—எழுத்து. ச. வே. சுப்பிரமணியன், பக்கம் 132—133.

ல, ள முன் 'ந' வரின் ல, ள திரிந்து 'ந' அழியும் என்பதையும் தொ. வி. 26-லும் குறிப்பிடுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (எ. டு) மனம் | — நலம் | > | மனநலம் |
| கவண் | — நெடிது | > | கவணெடிது |
| விரல் | — நீளம் | > | விரனீளம் |
| இருள் | — நீண்டது | > | இருணீண்டது |

இவ்வாறு தெளிவாக முந்திய இலக்கணிகள் காட்டியதாகத் தோன்றவில்லை[3]

5.0 சொல்

5.1 (அ) ஏனைய மரபிலக்கணங்கள் எழுத்ததி காரத்தில் கூறும் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சிகளைத் தொ. வி சொல்லதி காரத்தில் கூறுகின்றார்.[4]

(ஆ) சாரியைகளைப் பற்றியும் சொல்லதிகாரத்தில்தான் பேசுகிறார்.[5]

(இ) நன்னூல் கூறும் பதவியல் செய்திகளையும் தொ. வி சொல்லதிகாரத்தில் கூறியுள்ளார்.[6]

(ஈ) இன்னும், எழுத்ததிகாரத்தில் ஏனையோர் கூறிய பல செய்திகளைச் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளார். சுட்டு வினா போன்றவை.[7]

இவைகள் அனைத்தும் சொல்லிலக்கணத்தைச் சார்ந் தவை எனத் தொ. வி ஆசிரியர் நினைக்கிறார் என்பதே இதன் கருத்து. இதுவும் சிந்திப்பதற்குரியது.

5 2 சொற்பாகுபாட்டைப் பற்றிக் கூறும்போது மரபி லக்கணங்கள், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட

3. இலக்கணத் தொகை—எழுத்து—பக்மம் 239-27 !
4. தொ. வி 94, 95, 96, 97
5. தொ. வி 52
6. தொ. வி 46, 47, 48, 83
7. தொ. வி 99, 100, 101, 102

சொல், என செய்யுளீட்டச் சொற்களாக ஒருவகையைத் தருகின்றன. ஆயின் தொ. வி. திசைச் சொல் வடசொல்பற்றிக் குறிக்கவில்லை. இவை தேவையற்றவை எனக் கருதினர் போன்று தோன்றுகிறது.[8]

5.3 பெயர் வகைகளைக் கூறும்போது மரபுப் பெயர் காரணப்பெயர், ஆகுபெயர், இடுகுறிப்பெயர், என நான்கு வகைகளாக வகுக்கின்றார். இவ்வாறு நோக்குவது ஒருபுதிய கோணம். அதற்கு விளக்கமும் தருகின்றார்.[9]

5,4 தழுவு தொழிற் பெயர் எனக் கூறப்படுகின்ற ந, கு வருகின்ற வினையடிப் பெயர்களை வினைப் பெயர், அல் பெயர் என (நன்-141) நன்னூல் பேசுகின்றது. இதற்கு இடைநிலை வெளிப்படையாக எந்த நூலும் கூறவில்லை. அதனைத் தொ. வி. கூறுகின்றது. 'ந. கு' விடைப் பகுபதம் நண்ணனு நெறியே தொ. வி. 85. அறிஞர், அரிஞர், கிளைஞர் முதலியன.

5.5 தமிழில் சுட்டு முன்னொட்டுக்கள் அம் நினிதன். அம் மாடு, இம்மாடு என அமைந்ததே யொழிய எதிர்மறை முன்னொட்டுக்கள் பெயர்கள் முற்காலத்தில் இல்லை. பிற்காலத்தில் தோன்றின. அவற்றைத் தொ. வி. குறிப்பிடுகின்றது.

எதிர்மறை பகுபதத்தியைந்த மொழி முதல்
ஓற்றெனில் அவ்வும் உயிரெனில் அன்னும்

---

8. தொ. வி 42

9. பெயரே வேற்றுமை பெற்றிடம் பானினை
காட்டித் தொழிலல காலங் காட்டா
மரபு காரண மாக்கங் குறியென்
றவை நாற்றகுதி யாகுமென்ப — தொ. வி 53
காரண மில்லன மரபு பெயரே
காரணங் காட்டிக் காரணப் பயன் கொளல்
காரணப் பெயரே காரணங் காட்டா
ததன் பயன் கொள்வதாகு பெயரே
காரணங் காட்டினுங் காரணப் பயன் கொளா
விடுகுறிப் பெயரா மென்ப கற்றோரே — தொ. வி-54

*யிருமைக்காம் நிருவென வடநடையே* —தொ. வி. 87
அநீதி, அமலம், அனங்கன், அஞுசாரம், நிருமலம், நிராயுதம்.

5.6 ஒன்றன் படர்க்கை விகுதியாகத் து, டு, று, என்பன வற்றை மரபிலக்கணங்கள் கூற (இ. தொ. சொ. பக், 238) தொ. வி. 'உ' எனச் சுட்டுகின்றது.

'அன்' ஆன் அர், ஆர், உ, அ. படர்க்கை—தொ. வி. 105-5

5.7 எதிர்மறை பற்றி வெளிப்படையாக முதன்முதலிவ் இலக்கணக் கொத்துப் பேச, அதை விளக்குகின்றது, தொ. வி (இ. தொ. சொ. பக். 273-275)

*எதிர் மறைக் கிடைநிலே யன்றி என் ஏம் ஓம்*
*ஆய் ஈர் ஆன் ஆள் ஆர் ஆ ஆது, அ*
*ஐம்பான் மூவிடத்தாகு மென்ப* —தொ. வி. 112

5.8 ஏவல் பற்றித் தெளிவாக வரையறுத்து இந்நூலே முதல் முதலாகப் பேசுகின்றது. (இ. தொ. சொ. ப. 408)

*ஏவல் ஒருமைக்கு இயலும் ஆய்திமோ*
*ஏவற் பன்மைக்கு ஈர்தீர் மின்மினீர்*
*இருமைக்கு ஒரோவிடத்து ஆகும் குவ்வே* —தொ.வி. 113

5.9 எதிர்மறை ஏவல் பற்றியும் இந்நூல்தான் முதலில் குறிப்பிடுகின்றது.

*எதிர்மறை ஏவற்கு ஏலே அல்லே*
*அன்மோ அற்க வாகு மொருமை*
*ஆமின் அன்மின் அற்பீர் பன்மை* —தொ. வி. 114

5.10 வினையெச்சங்களை ஏனைய மரபிலக்கணங்கள் போன்று வாய்பாடாகக் கூறுது விகுதிகளைச் சுட்டியே உணர்த்துகின்றது. இது அவருடைய விளக்க மொழியியல் அறிவைச் சுட்டுகின்றது.

*வினையெச்சங் கொள் விகுதி இ. உ*
*உவ்வோடெனவும் ஊ பு ஆ விறப்பே*

*அ இரு கருத்தாவணை யினிகழ்வே*
*யொரு கருத்தாவு மோரிடத் திரண்டு*
*மியை அ வன்றி இல் இன் இயர்*
*வான் பான் பாக்கு வரும் பொழு தாம்பிற...*

—தொ. வி. 119

5.11 எதிர்மறை வினையெச்ச விகுதிகளையும் இந்நூல் குறிக்கின்றது.

*எதிர் மறை யெச்சத்தியலும் விகுதி*
*அமல் ஆது ஆமை அ வென நான்கே* — தொ. வி. 121

5.12 'என' வென்ற இடைச்சொல் ஏனைய மரபிலக் கணங்கள் ஆறு பொருளில் வருமெனக் கூற தொ. வி. ஏழு பொருள் வருமெனக் கூற உவமைப் பொருளாகவும் வரு மெனத் தொ. வி. சேர்த்துப் பேசுகின்றது (இ. தொ. சொ. பக். 300)

5.13 மரபிலக்கணங்கள் கூறுகின்ற இடைச் சொற்களில் கொன், மற்று, எற்று, மற்றையது. மன்ற, தஞ்சம், கொல் போன்ற சொற்கள் கூறப்பட இல்லை. வழக்கிழந்தமை பற்றி இவை விடப்பட்டிருக்கலாம்.

5.14 முன்னிலை அசைச் சொற்களாக ஏனைய மரபிலக் கணங்கள் கூறுதவையாக மான் ஆர், இரண்டையும் தரு கின்றார் மொழிமான் புலவர்.

6.1 (அ) நன்னூல் நூற்பாக்களாக எழுத்ததிகார நூற்பாக்கள் பத்தை அப்படியே எடுத்துக் கொள்கின்றார்.[10]

6.2 (அ) சொல்லதிகார நூற்பாக்கள் இருபத்து நான் கினையும் அப்படியே எடுத்துக்கொண்டுள்ளார்.[11]

7.1 எழுத்தும் சொல்லும் இணைந்து 141 நூற்பாக் களில் 34 நூற்பாக்கள் நன்னூல் நூற்பாக்கள் – 107 நூற் பாக்களே தொ. விளக்கத்திற்கு உரியவை.

| 10. நன்.எழு | தொ.வி.சொ | நன்.எழு | தொ.வி.சொ |
|---|---|---|---|
| 245-246 | 66 | 199 | 97 |
| 248 | 67 | 186 | 99 |
| 247 | 68 | 67 | 102 |
| 136 | 92 | 168 | 116 |
| 197 | 95 | | |

| 11. நன்.சொல் | தொ.வி.சொ | நன்.சொ | தொ.வி.சொ |
|---|---|---|---|
| 296 | 53 | 310 | 75 |
| 297 | 58 | 311 | 76 |
| 298 | 59 | 312 | 77 |
| 299 | 60 | 380 | 78 |
| 301 | 62 | 388 | 81 |
| 318 | 64 | 403 | 93 |
| 303 | 69 | 332 | 106 |
| 306 | 71 | 407 | 115 |
| 307 | 72 | 452, 453 | 139 |
| 308 | 73 | 454 | 140 |
| 309 | 74 | 455 | 141 |

7.2 அவற்றுள் தொகுத்துக் கூறுவதைத் தெளிவாகக் கூறுகின்ருர். (தொ. வி. 142)

7.3 மொழியியல் உணர்வு இருப்பதால் விகுதிகளை மட்டும் தனியே கூறுகின்ருர் (தொ. வி. 119).

7.4 எதிர்மறை ஏவல், தழுவு தொழிற்பெயர் இடைநிலை இவை போன்றவை வளர்க்கப்பட்டுத் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.

7.5 அவர் செய்துள்ள மாற்றம் வரிவடிவத்தில் செய்துள்ளது. அந்நூலைத் தெளிவாகப் பதிப்பித்து வெளியிட்டால் தமிழ் இலக்கணத்தில் இன்னும் சில புதிய எண்ணங்கள் தோன்ற வழி வகுக்கும்.

# தமிழிலும் மலையாளத்திலும் பா அமைப்பு ஓர் ஒப்பாய்வு 15

தமிழும் மலையாளமும் மொழிநிலையை நோக்கப் பிற திராவிட மொழிகளினும் நெருக்கமும் பொதுமையும் பெற்றுத் திகழ்கின்றன. செய்யுளமைப்பிலும் இப்பொதுமை எதிர் பார்க்கப்படுகின்றது.

சிறுசிறு அசைக் குழுக்களின் ஒழுங்கான தொடர்ச்சியால் ஆக்கப்பட்ட கவிதைப் புறவடிவமே இங்குச் செய்யுளமைப்பு எனக் குறிப்பிடுகின்றது.[1] அசைக் குழுக்கள் நெடிலும் குறிலும் ஆகவோ, அழுத்தமுடையனவும் அழுத்தமில்லாதனவுமகாவோ அமையலாம். வடமொழிச் செய்யுளமைப்பு நெடில் குறில் அசைக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலச் செய்யுளமைப்பு அழுத்தமுடைய, அழுத்தமில்லா அசைக் குழுக்களை அடிப்படையாக உடையது. திராவிடச் செய்யுளமைப்பு இதினின்று சிறிது மாறுபடுகின்றது.

தமிழில் செய்யுள், யாப்பு எனும் தலைப்புக்களின் கீழ் பா வடிவக் கல்வி அமைகின்றது. தொல்காப்பியம், இலக்கணத்தை எழுத்து,சொல், பொருள் என மூன்றுகவும், வீர

---

1. The regulated succession of certain groups of syllables, in which poetry. is usaally written is called metre Chamber's Twentieth Century Dictionary-Revised edition —1961.

சோழியம் போன்ற பிற்கால நூற்கள் எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என ஐந்தாகவும் பகுத்துத் தருகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுப்பான செய்யுளியலிலும், பிற ஐந்திலக்கண நூற்பகுதியான யாப்பதிகாரத்திலும், தனி யாப்பு நூற்களிலும் செய்யுளமைப்புப் பற்றிய செய்திகள் தொகுக்கப்படுகின்றன. இவையொழிய, இலக்கிய வகைகளும் அவற்றின் அமைப்பும் பற்றிக்கூறும் ஏறக்குறைய எட்டு பாட்டியல் நூற்களும் கிடைக்கின்றன. இந்நூற்கள் கி.மு. முதல் கி.பி. 20 ஆம் நூற்றுண்டுவரையுள்ள காலத்தினவாம். தொல்காப்பியம், யாப்பு என்பதைச் செய்யுளுறுப்பாகக் கொண்டதனுல் செய்யுள் வடிவம் பற்றிய பகுதி செய்யுளியல் எனப் பெயர் தாங்கி நிற்கின்றது; பிற்கால இலக்கணங்கள் யாப்பு என்ற பெயருடன் நிற்றல் இந்நிலை மாறியதனுற் போலும்.

மலையாளச் செய்யுளமைப்பை அறியச் சில இலக்கண நூற்கள் துணைபுரிகின்றன. 14-ம் நூற்றுண்டில் தோன்றிய 'லீலாதிலகம்' பாட்டு எதுகைமோனை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது. (1: 11; 4; 8C; 82; 6: 100-103)[2] கருணுகரதாசரின் விருத்த ரத்ஞகர' என்ற வடமொழி நூலின் உரை இம் மலையாளச் செய்யுளைச் சுட்டுகின்றது. மலையாளச் செய்யுள் பற்றிய விரிவான விளக்கம் தரும் முதல் நூல் கோவுண்ணி நெடுங்காடியின் 'கேரளகௌமுதி' (கி.பி. 1875). இந்நூலின் செய்யுள் பற்றிய இயல், "வ்ருத்தலேகா," 37 நூற்பாக்கள் உடையது. இவற்றில் 21 மலையாளத்துக்கே உரிய செய்யுள் பற்றியும் பிற 16 வடமொழிச் சார்புடை செய்யுள் பற்றியும் கூறுகின்றன. இவ்வடமொழிச் சார்பு செய்யுட்பகுதி விருத்த ரத்ஞகரத்தை அடிப்படையாகக் கொள்கின்றது. இதற்கு அடுத்து வந்தது ஏ.ஆர். ராஜராஜவர்மாவின் விருத்த மஞ்சரி (1904). இதன் ஒன்பது பகுதிகளில் முதல் ஏழும் வடமொழிச்

---

2. கேரள சாகித்ய சரிதம் (மலையாள நூல்)- உள்ளூர். எஸ். பரமேஸ்வர அய்யர். Travancore University series No. 30 First Impression 1953. Pages 30, 67.

சார்பான மாத்ராவர்ண விருத்தங்களை ஆய, எட்டாம் பகுதி மலையாளமொழி (பாஷா) விருத்தங்களை ஆய்கின்றது; ஒன்பதாம் பகுதி முடிவுரையாக அமைகின்றது. கொடுங்கல்லூர் கொச்சுண்ணித் தம்புரானின் 'காந்தவ்ருத்தம்' வடமொழி விருத்தங்களைப் பற்றிப் பேசுகின்ற மலையாள நூல். (அச்சு; கொல்லம் ஆண்டு 1104) தகழி இ. ஆர். பிள்ளையின் 'விருத்த சகாயி,' பாஷாபோஷினி சித்ரமாஸிகா என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது (தொகுதி 45 பகுதி1,2) கடத்தனுடு உதயவர்ம ராஜாவின் 'சத்வ்ருத்த மால' செய்யுளியல்பு கூறும் மற்றொரு நூல். இராமவர்ம அப்பன் தம்புரானின் 'திராவிடவ்ருத்தங்களும் அவயுடே தசா பரிமணுங்களும்' என்ற நூல் திராவிட விருத்தங்கள் வளர்ந்த படிநிலைகளைக் காட்ட முயல்கின்றது. மலையாள விருத்தங்கள் பற்றிய முழுநிலைக்கல்வி, என் வி. கிருஷ்ணவாரியாரின், A study of Malayalam Metres, எனும் பொருட்கட்டுரையில் (Thesis) அமைகின்றது. (1947.) தாளவடிப்படையில் விருத்தங்களை ஆய்கின்றது. குட்டிக்கிருஷ்ண மாராரின் 'விருத்த சில்பம்' கே. கே. வாத்யாரின் விருத்த விசாரமும்' பேராசிரியர் பி. குஞ்ஞிக்கிருஷ்ண மேனேனின் பாஷா விருத்த தீபிகையும் விருத்த மஞ்சரிக்குத் திறனுய்வாகவும் புது விருத்தங்கட்கு இலக்கணமும் பெயரும் கூறும் முகமாகவும் அமைகின்றன.

தொல்காப்பியம் 34 (26+8) செய்யுள் உறுப்புக்களைத் தருகின்றது. இவற்றில் முதல் 26-ம் எல்லாச் செய்யுட்கும் பொது எனவும், பிற எட்டும் முழுச்செய்யுளின் அமைப்பு நிலையைக் குறித்தன எனவும் கொள்வர்.

அவை, (1) மாத்திரை (2) எழுத்து (3) அசை (4) சீர் (5) அடி (6) யாப்பு (7) மரபு (8) தூக்கு (9) தொடை (10) நோக்கு (11) பா (12) அளவு (13) திணை (14) கை கோள் (15) கூற்று (16) கேட்போர் (17) களன் (18) காலம் (19) பயன் (20) மெய்ப்பாடு (21) எச்சம் (22) முன்னம் (23) பொருள் (24) துறை (25) மாட்டு (26) வண்ணம் (27) அம்மை

(28) அழகு (29) தொன்மை (30) தோல் (31) விருந்து (32) இயைபு (33) புலன் (34) இழைபு என்பன.

இம் முப்பத்துநான்குள் மிகச் சிலவே பிற்கால ஆசிரியர் பெரும்பாலோராலும் கொள்ளப்படுகிறது. தொல்காப்பியம், செய்யுளின் புறவடிவோடு, பொருண்மை, வெளியீடு, பயன் இலக்கியப் பகுப்பு ஆகிய பலவற்றையும் பற்றி நினைக்கப் பிற இலக்கணங்கள் புறவடிவுக்கே முதன்மை அளித்து ஒழிபியல், கருத்தாக மட்டும் பிறவற்றில் ஓரிரண்டைச் சுட்டிச் செல்கின்றன. காப்பியம் கூறும் எழுத்து, அசை, சீர், அடி தொடை என்பன இவற்றிலும் கருதப்படுகின்றன. தொல்காப்பியம் கூறிய தளைபற்றிய கருத்துக்களின் வளர்ச்சி நிலையில் 'தளை' என்ற 'புதிய' உறுப்பை இணைக்கின்றன. இவ்வாறும் பாடலின் புறவடிவைப் பற்றியன என்பது தெளிவு. இக்காரணம் பற்றித்தான் செய்யுள் என்பதற்குப் பதில் யாப்பு எனக் கையாண்டனரோ என்று தோன்றுகிறது. பொருள்கோள் (மாட்டு) வண்ணம். எண், வனப்பு என்பன அருகியேயாயினும் பிற்காலத்தும் கொள்ளப்படல், மரபுநிலை முழுமையும் இழக்கப்படாமைக்குச் சான்று பகர்கின்றன.

மலையாள யாப்பு நூற்கள் செய்யுள் அமைப்பைத் தெளிவாகத் தந்தன என்று கூறுவதற்கில்லை. தமிழ் நூற்களில் அமைவதுபோலச் செய்யுள் உறுப்புக்கள் அங்கு தொகுக்கப்பட்டில. ஆயின் மேற்கூறிய நூற்களை நோக்கும்போது சில உறுப்புக்கள் தெரிகின்றன.

அவை, (1) மாத்திரை (2) வர்ணம் அல்லது அக்ஷரம்-எழுத்து (3) லகு. குரு அசை (4) கணம் சீர் (5) பாதம்-அடி (6)ப்ராசம் தொடை (7) யதி விட்டிசை (8) தாளம் என்பன. இவற்றில் இறுதி யிரண்டொழியப் பிறவனைத்தும் தமிழிலும் செய்யுளுறுப்பாக அமைந்தமை நினைத்தற்குரித்து. அவ்விரண்டும் உறுப்புநிலையில் கொள்ளப்படாவிடினும் தமிழ்ச் செய்யுளிலும் உள்ளமை நாம் அறிந்ததே, மலையாள யாப்பிலக்கணங்களும் செய்யுளின் புற வடிவுக்கே முதன்மை கொடுத்தமை இவ்வுறுப்பு நிலையால் தெளிகின்றது.

இப்பொது வுறுப்புக்கள், இயல்பிலும் இயலுந் திறத்திலும் பெரும்பான்மை ஒப்புமையும் சிறுபான்மை வேற்றுமையும் பெற்றுத் திகழ்கின்றன.

## I. மாத்திரை—மாத்ர

தமிழ் யாப்பிலக்கணங்களில் தொல்காப்பியச் செய்யுளியல் மட்டுமே இவ்வுறுப்பைக் குறித்தது. அங்கும் அது விளக்கப்படவில்லை. எழுத்ததிகாரத்தில் அமைந்த விளக்கம் போதுமானதாக இருப்பதனுல் போலும்.

பாஷா விருத்தத்திலும் வடமொழிச் சார்பு விருத்தமான மாத்ரா விருத்தத்திலும் இம்மாத்திரை ஓர் இன்றிமையாத உறுப்பாம். குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரையும், நெட்டெழுத்துக்கள் இரு மாத்திரையும் புலுதம் போன்ற எழுத்துக்கள் பெரும்பான்மை மூன்று மாத்திரையும் பெறுகின்றன. மாத்திரையின் அளவு வேறுபட்டாலும் எண்ணிக்கை வேறுபட்டாலும் பல விருத்தவகைகள் அமைந்தமையை இலக்கணங்கள் காட்டுகின்றன.

### எழுத்து—வர்ணம்

தொல்காப்பியம் எழுத்துக்கெனத் தனியிலக்கணம் செய்யுளியலில் வகுக்கவில்லை. இதற்கும் காரணம் அது முன் எழுத்ததிகாரத்தில் விளக்கப்பட்டமையே. கலம், காரிகை ஆகிய பிற்கால இலக்கணங்கள் முறையே பதினைந்தும் பதின்மூன்றும் எழுத்து வகைகளைச் செய்யுட்குரியனவாகச் சுட்டுகின்றன. இவை யாப்பிலக்கணம் மட்டும் கூறுவதனுல் இந்நிலை அமைந்தது போலும். அல்லது, யாப்புக்கு எனத் தனியெழுத்துக்கள் சிறப்பு நிலையில் கருதப்பட்ட ஒரு காலநிலையின் பிரதிபலிப்பு ஆகலாம்

தமிழிலும் மலையாளத்திலும் செய்யுளில் எழுத்து எண்ணும் பொது இயல்பு அமைகின்றது. அந்நிலையிலும், இரு மொழிகளிலும் உயிரெழுத்துக்களே எண்ணப்படுகின்றன.

*உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ*
*உயிர்த்திற மியக்கம் இன்மையான* — தொல் செய் 43.
*ஸ்வரங்கள் தான் அக்ஷரங்கள்*
*வ்யஞ்ஞனம் வகயில்லிக...* — விருத்த மஞ்சரி 7
*(ஸ்வரங்கள்—உயிர்—வியஞ்ஞனம் - மெய்)*

மெய்யெழுத்துக்கள் எண்ணப்படாவிடினும், அசைப் பகுப்பின்போதும் வண்ணம் போன்ற பிற உறுப்புக்களிலும் அவை சில தகுதிகள் பெறுவது உண்டு. அடியில் உள்ள எழுத் தெண்ணிக்கையின் அடிப்படையில் தோன்றிய தமிழ்ச் செய்யுட்கள் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை என்பன. மலையாளத்தில் காணப்படுகின்ற வர்ணவிருத்தங்கள் அனைத்துமே இவ்வடிப்படையின.

ஒரு அடியில் அல்லது சீரில் இத்தனை எழுத்துக்கள் அமையலாம் என்ற வரையறை தொல்காப்பியத்தில் மட்டுமே உண்டு. நாற்சீரடி, எழுத்தெண்ணிக்கை வேறுபாட்டால் ஐம்பகுப்புப் பெறுகின்றது. நாற்சீரடியின்கண் நான்கு முதல் 20 எழுத்துவரை வருகின்றன. எனவே ஒரு சீரின்கண் ஒன்று முதல் ஐந்து எழுத்துவரை வரலாம் என ஆகின்றது. வஞ்சிச் சீர் சிறப்புநிலையில் சிறுமை மூன்றெழுத்தும் பெருமை ஆறெழுத்தும் பெறுகின்றது. இவ்வகை எழுத்தடிப்படைப் பகுப்பு பிற யாப்பிலக்கணங்களில் அமையவில்லை. ஆயின் இவ் எழுத் தெண்ணிக்கையின் செல்வாக்குக் கட்டளைச் செய்யுட்களில் தென்படுகின்றது.

வர்ண விருத்தம் இரு பகுப்புடையது. ஒன்று சந்தஸ்; அது, ஒரு அடியின்கண் ஒன்று முதல் 26 எழுத்துவரைப் பெறும் தன்மையினது. மற்றொன்று தண்டகம்; 27 முதல் பல எழுத்துப் பெறுகின்றது. தமிழ் யாப்பிலக்கண நூலான கலத்தின் விருத்தியுரையிலும் வீரசோழியத்தின் யாப்பதிகாரத்திலும் இச்செய்தி நினைக்கப்படுகின்றது. வீரபத்ர முதலியாரின் விருத்தப்பாவியல் சந்த விருத்தங்களை விரிவாக ஆய்கின்றது,

திருமழிசைப் பிரானின் திருச்சந்தவிருத்தம், பெயர்நிலே யிலும் பொருந்தியமைகின்றது. அப்பரும், திருமங்கை மன்ன னும் பாடிய திருக்குறுந்தாண்டகம் நெடுந்தாண்டகங்கள் ஏதேனும் நிலேயில் இத்தாண்டகச் செய்யுளோடு ஒப்புமை யுடையனவோ என்ற எண்ணம் எழுகின்றது. குறிப்பிட்ட எழுத்துவரையறை அனைத்து அடியிலும் தென்படாமையால் இது எந்த அளவு பொருத்தமுடையது என்பது தெரியவில்லே.

3 அசை—லகு, குரு.

எழுத்து தனித்தோ எழுத்துக்கள் இணைந்தோ அசையா கின்றன. தொல்காப்பியம், நேர் நிரை நேர்பு நிரைபு என நான்கு அசைகளேக் கருதுகின்றது; முன்னேய இரண்டிற்கும் இயலசை எனவும் பின்னேய இரண்டிற்கும் உரியசை எனவும் பெயர் சூட்டுகின்றது. பிற்கால இலக்கணங்கள் முதலிரு அசைக்கே முதன்மையளிக்கின்றன. ஒழிபியல் கருத்தான காசு, பிறப்பு உரியசையின் தாக்குதலேக் காட்டி, அது முற் றும் இழக்கப்படாமைக்குச் சான்று பகர்கின்றன.

ஒரு குறில் அல்லது நெடிலெழுத்துத் தொடர்ந்து ஒற்றுப் பெற்ருே பெருதோ வருவது நேரசை—அ, ஈ, கல், கால். குறி லிணையோ குறில் நெடிலிணையோ ஒற்றுப் பெற்ருே பெருதோ வருவது நிரையசை—அது, அவா, மணம், வரால். நேரசை நிரையசைகளேத் தொடர்ந்து உகரம் (முற்றியல் அல்லது குற்றியல்) வரும்போது முறையே நேர்பும் நிரைபும் அசை கள் தோன்றுகின்றன—காசு, காவு. அமுது, கனவு.

மலேயாள யாப்பிலக்கணத்தில் அசையைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல் இருப்பதாகத் தெரியவில்லே. வடமொழி யைப் பின்பற்றிப் போலும் லகு—குரு எனும் அசைப்பகுப்பு அங்கு அமைகின்றது. இப்பகுப்பு எழுத்தை அடிப்படையாகக் கொண்டது. உயிரோ உயிர்மெய்யோவாகிய குறிலெழுத்து லகுவாகவும், நெடிலெழுத்து குருவாகவும் உருப் பெறுகின் றன. சில சூழ்நிலேகளில் குற்றெழுத்து குருநிலேயடைகின்றது. குற்றெழுத்து விசர்கம் (.), அனுஸ்வரம் (0) கூட்டெழுத்து

அல்லது சில் (ர், ல், ள், ண், ன்)லின் முன் வரும்போது குரு வாக மாற்றமடைகின்றது. செய்யுளடியின் ஈற்றிலுள்ள லகு பெரும்பாலும் குருவாகக் கருதப்படுகின்றது. செய்யுளுள்ளும் ஓசை நிறைக்க வேண்டியவிடத்து லகு குருவாக நீளுகின்றது. இவை அம்மொழிக்குரிய, தனித்தன்மை.

லகு-குரு என்பன ஒரு உயிரெழுத்தை மையமாகக் கொண்டன. தமிழிசைகளில் இந்நிலை முழுமையாக அமைந்து காணப்படவில்லை. அசை (Syllable) யின் பொதுக்கொள் கைப்படி, 'நேர்' மட்டுமே ஓரசை; நிரையும் நேர்பும் ஈரசை; நிரைபோ மூவசை; இவையனைத்தையும் (ஓர்) அசையெனக் கொள்வது தமிழுக்கே உரிய தனித்தன்மை.

லகு குருவாக நீட்டிப்பதுபோன்றே குரு லகுவாகக் குறுகு வதும் அருகி அமைகின்றது. இதற்குத் தனிவிதிகள் அமைக் கப்பட்டதாகத் தெரியவில்லை. நம் செய்யுளிலுள்ள ஐகார ஔகாரக் குறுக்கங்களும், அவை குறிலாக அசைப்பகுப்பில் கொள்ளப்படலும் இங்கு ஒருங்குவைத்து எண்ணத் தக்கன. வடமொழி மரபைப் பின்பற்றிப்போலும் லகு-குரு பகுப்பு வீரசோழியத்தில் கொள்ளப்படுகின்றது.

### 4. சீர்—கணம்

அசை பற்றிய கருத்தில் ஒற்றுமை மிகுதியாக அமை யாதது போன்றே சீர்நிலையிலும் பொதுமை குறைந்தேஅமை கின்றது, தமிழ்ச் சீர் அசைகளாலாக்கப்படுகின்றது; பாஷா கணங்களோ இரு வேறு அடிப்படையின.

ஒன்று முதல் நான்கு அசைகளாலாக்கப் படுவது சீர். நாலசைச் சீர் தொல்காப்பியத்தில் கருதப்படவில்லை. அசை யின் எண்ணிக்கைப்படி சீர் பெயர் பெறுகின்றது. ஓரசைச்சீர் ஈரசைச்சீர்...அசைகளின் பல்வேறு வகைத் தொடர்ச்சியால் பல சீர் வகைகள் ஆக்கப்படுகின்றன. இவை பயிலும் பாவின் பெயராலும் வழங்கும் வாய்ப்பாட்டடிப்படையிலும் பெயர் பெறுகின்றமை யாம் அறிந்ததே,

அசைகளின் எண்ணிக்கையில் தொல்காப்பியமும் பிற் கால இலக்கணங்களும் மாறுபடுவதால் சீர் எண்ணிக்ணைிக் கையிலும் வேறுபாடு அமைகின்றது.

பாஷாவிருத்த கணங்களுள் ஒன்று மாத்திரை எண்ணிக் கையை அடிப்படையாகக் கொள்கின்றது—மாத்ர கண, மற்ருென்று எழுத்தெண்ணிக்கையடிப்படையில் ஆக்கப்படு கின்றது—வர்ண கண, தாளகண என்ற தொடரை. திரு. வாரியர் பயன் படுத்துகின்ருர் இதுவும் மாத்திரை எண்ணிக் கையை அடிப்படையாகக் கொண்டது போலும் (பக்கம் ii). அழுத்தங்களின் ஒழுங்கான தொடர்ச்சியாலுருவாகும் கணம் பற்றியும் அவர் நினைக்கின்ருர். (பக்கம் 30).

நான்கு மாத்திரைகளாலாயது ஒரு மாத்ர கணம். இது ஐவகையாக நிகழ்கின்றது. (1) — — (2) —U U (3) U—U (4) U U – (5) U U U (U.U—குறில் அல்லது ஒரு மாத்திரை; '—' நெடில் அல்லது 2 மாத்திரை). வடமொழிச் சார்புடைய விருத்தங்களிலுள்ள இவ்வரையறை பாஷா விருத்தத்தில் மீறப்படுகின்றது. விருத்தமஞ்சரி, இரண்டு மூன்று நான்கு அல்லது ஐந்து மாத்திரை ஒரு கணத்தில் வரலாம் எனக் கூறு கின்றது.

மூன்று எழுத்துக்கள் ஒரு வர்ண கணத்தை உருவாக்கு கின்றன. இருவகை எழுத்துக்கள் உள்ளமையால் எண்வகை கணங்கள் உருவாசின்றன, அவற்றிற்கு வடமொழி மரபைப் பின்பற்றி எழுத்தால் பெயரளிக்கின்றனர்.

(1) — — — 'ம' (2)U — — 'ய' (3) — U — 'ர'

(4) U U — 'ச' (5) — — U 'ட' (5) U – U 'ஜ'

(7) — U U 'ப' (8) U U U 'ந'

திரு- அப்பன் தம்புரான் தாளவடிப்படையில் ஐவகை கணப் பகுப்புத் தருகின்ருர்—த்ரிஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம்.

பாட்டியல் நூற்கள் கூறுகின்ற பத்துப்பொருத்தங்களுள் கணப் பொருத்தமும் ஒன்று. மூன்று அசையுடைய எட்டுச்

சீர்களே அங்குப் பொருத்தத்திற்குக் கருதப்படுகின்றன. சீரும் கணமும் ஒரு பொருட் சொல்லாகவே கையாளப்படு கின்றன. சிதம்பரப் பாட்டியல் இவற்றிற்கு எழுத்தால் பெயரளிப்பதும் மூன்று எழுத்து என்பது இங்கு மூன்று அசை என எண்ணிக்கையில் ஒத்திருப்பதும் இங்கு நினைவு கூரத் தக்கது.

5. அடி — பாதம்

பாதம் என்ற சொல் தமிழ் யாப்பிலக்கணங்களிலும் அடியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது இலக்கியத் திறனாய்வாளர் இவ்வடியையே செய்யுளின் அடிப்படையுறுப் பாகவும் முதன்மையுறுப்பாகவும் கொள்கின்றனர்.[3] தமிழில் நாற்சீரடியே மிகுதியாகப் பயில்கின்றது. ஒன்றுமுதல் பல சீர்கள் தொடரும்போது அடி உருவாகின்றது. அவை ஒரு சீரடி என எண்ணிக்கை யடிப்படையில் பெயர்பெறுகின்றன. இருசீர் முச்சீரடிகள் வஞ்சிப்பாவில் மிகுதியாகப் பயில்வதால் வஞ்சியடி எனக் குறிக்கப்படுகின்றன.

நாற்சீரடி எழுத்தடிப்படையில் பகுக்கப்படல் முன்பே சுட்டப்பட்டது. இவை உரையாசிரியரால் கட்டளையடி எனக் குறிக்கப் பெறுகின்றது. நாற்சீரின் மிக்க அடியிலும் எழுத் தெண்ணப் பட்டமையைக் கட்டளைச் செய்யுட்களில் காண் கின்றோம். பிற்காலத்தில் கட்டளைச் செய்யுட்களில் தவிரப் பிறவிடங்களில் சீர் வகையடியே கருதப்படுகின்றது.

பாதத்திற்குத் தனிவரையறை இருப்பதாகத் தெரிய வில்லை. சமவிருத்தத்தில், ஒன்று முதல் ஒண்பது வரை சீர்கள் உள்ளமை தெளிவாகின்றது. தண்டகச் செய்யுளில் பதினென்கும் அதற்கு மேலும் உண்டு. இலக்கியங்கள் நான்கு கணப்பயிற்சி மிகுதியையே காட்டுகின்றன.

---

3. The Primary basic element of all verse is the line Cassell's Encyclopaedia of Literature, Vol-1. Edited by S.H. Ste'inbug First Published.1953.

கணங்களில் மாத்ர வர்ண அடிப்படை யமைவது போன்றே இங்கும் உண்டு. இரண்டும் கலந்த 'மிஸ்ர'-நிலையும் உண்டு.

6. தொடை · பிராசம்

செய்யுளின் கண் எழுத்து ஒலியமைப்புகளில் ஒப்புமையும் சொல் பொருள் நிலையில் முரணும் வர ஒழுங்காக அமையும் அமைப்பே தொடை. தமிழில் முதற் தொடைகள் ஐந்து மோனை, எதுகை, முரண் இயையு, அளபெடை விகற்பத் தொடைகள் ஏழு —இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்க துவாய், கீழ்க்கதுவாய். முற்று, துணைத் தொடைகளாக செந்தொடை, நிரல், நிறை. இரட்டை, அந்தாதி என்பன பயில்கின்றன.

மலையாள யாப்பிலக்கணங்கள் இப்பிராசத்தை இன்றி யமையாக் கூறுகக் கருதியதாகக் கூறுவதற்கில்லை. லீலா திலகம் தமிழை யடியொற்றிப் போலும் இதுபற்றிப் பேசு கின்றது. 'எதுக' 'மோன' என்று இரண்டுமேஅங்குக்குறிக்கப் பெறுகின்றன; அவையும் விளக்கப்படவில்லை. பிற்காலத் தார் இவ்விரு பெயர்களையும் முழுமையும் நீக்கி அருகிப் பிராசம், த்வதீய பிராசம் முதலிய தொடர்களை மட்டும்பயன் படுத்துகின்றனர். இராமசரிதம் போன்ற இலக்கியங்களில் எதுகை மோனையோடு அந்தாதித் தொடையும் பயில்கின்றது. இவற்றிலும் எதுகையின் பயிற்சியே மிகுதி இம்மூன்றுமே தற்கால இலக்கியங்களினும் மிகுதியாக முற்கால இலக்கியங் களிலேயே கையாளப்பட்டன என்பது தெரிகின்றது.

7. யதி

யதி என்பது செய்யுளடிகளின் இடையிலும் ஈற்றி லுமமையும் ஓசை நிறுத்தம். இவ்யதி சொல்லுக்கு நடுவண் வந்து சொல்லைச் சிதைத்தால் அது யதிபங்கம் வழு எனப் படுகின்றது. கைகாலுக்கு முட்டுக்கள் அமைவதுபோல் செய்யுளடியில் இவ்யதி அமையுமாற்றை இலக்கணங்கள்

சுட்டுகின்றன, யதி வரும் இடத்தில் அடி 'ஒடிகின்றது'[3] எனவும் குறிக்கின்றன.

இத்தகைய ஓசை நிறுத்தங்கள்—விட்டிசை, தமிழ்ச் செய்யுளிலும் உண்டு. வெண்பா, கலிவெண்பாக்களில் தனிச் சொல்லுக்கு முன் வரும் இத்தகைய ஓசை நிறுத்தம் ஒரு கோடிட்டுக் காட்டப்படுகின்றது. நீண்ட அடிகளுடைய செய்யுட்களில், மோனை வரும் இடங்களில் அடிகள் ஒடித்து எழுதப்படும்போதும் இத்தகு விட்டிசைகளை உணர்கின்றோம். வகையுளியின் இயல்பும் இதன் செல்வாக்கைக் காட்டு கின்றது எனக் கொள்ளலாம்.

## 8 தாளம்

இதனை ஒரு தனியுறுப்பாகக் கொள்ளல் தேவைதானா என்பது கேள்வியே. தாளவடிப்படையில் கணம் வகுக்கப் பட்டமையும், பாஷாவிருத்தம் இசைக்கு முதன்மையளிக் கின்றது என்னும் விருத்தமஞ்சரிக் கருத்தும் இதனைத் தனி யுறுப்பாகக் கொள்ளத் தூண்டுகின்றது. மாத்திரையின் கீழ் அடக்கினாலும் தகும்.

தாளம் ஓசையை அடிப்படையாகக் கொண்டது, பாவுக்கு உரியதாகச் சில ஓசைகளை வகுக்கும்போது தாளம் அதன்கண் அடங்கிவிடுகின்றது. அகவல், செப்பல், துள் ளல், தூங்கல் எனும் பாவுக்குரிய ஓசைகள் செவிப்புலனால் உணரப்பட வேண்டியன. இன்று நாம் இவற்றைப் பாவில் பயிலும் தளைகள் வாயிலாகவே அறிகின்றோம் என்றால் அது மிகையாகாது. இந்நிலை, என்னைத் தளை தாளத்தோடு ஒப்புமைப்பட்ட ஒன்றே என நினைக்கத் தூண்டுகின்றது.[4]

---

4 எழுவகைத் தளைகள் இலக்கண ஆசிரியரால் கருதப்படுகின்றன. நல்லார் கொள்கைப்படி குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி விளரி, தாரம் என நரம்புகள் ஏழு இசையியலார் கூற்றுப்படி ச ரி-க-ம-ப-த-நி என இராகங்களும் ஏழு, எண்ணிக்கையொப்புமையும் அனைத்திலுமுள்ள ஓசையடிப்படைப் பொதுமையும், என்னை இவைபற்றி இன்னும் நினைக்கத் தூண்டுகின்றன.

பாவுக்குரிய சிறப்பு ஓசைகளைப் பிற்காலத் தலைமுறையினர் கேட்கத் தக்க வாய்ப்போ, ஒலிப் பதிவுக் கருவிகளோ இல்லாத முற்கால யாப்பிலக்கணர், அதனைத் 'தளை' என ஒன்றை வகுத்து அதன்மூலம் உணர்த்த முயன்றனர் போலும். தொல்காப்பியம் தளையைத் தனியுறுப்பாகக் கருதாமையும், சீர்கள் தொடரும்போதே ஓசை வெளிப்படுவதால் தளை தேவையில்லை எனக் கூறுகின்றமையும், இதனை இன்னும் வலியுறுத்துகின்றன.

உறுப்புக்களுள் அமையும் இத்துணைப் பொதுமை இருமொழியின் பாப்பகுப்பிலோ, பாவமைப்பிலோ காணப்படவில்லை. தமிழ் மொழியின் தாக்குதல் மிக்கிருந்த காலத்திய இலக்கியங்களில் ஒப்புமை உள்ளமை தெளிகின்றது.

பா, பாட்டு, பாடல் எனும் சொற்கள் தமிழில் செய்யுளைக் குறிக்கப் பயன்படுகின்றன (வெண்பா, நெடுவெண் பாட்டு, பரிபாடல்). இவற்றில் பா என்பதே மூலவடிவம் எனக் கொள்ளலாம். மலையாளத்தில் 'பாட்டு' என்ற சொல் இதே பொருண்மையில் கையாளப்படுகின்றது, லீலாதிலகம் பாட்டை, திராவிட மொழிக்கே உரிய எழுத்துக்களாகி எதுகமோன என்பன பொருந்திய அமைப்பு என விளக்குகின்றது, இராமகதப் பாட்டு, கிளிப்பாட்டு, துள்ளல் பாட்டு, வஞ்சிப்பாட்டு முதலிய தொடர்கள் மலையாள இலக்கியத்தில் இச்சொல்லின் செல்வாக்கையும் பயன்பாட்டையும் சுட்டுகின்றன. பிற்காலத்தில் விருத்தம் என்ற சொல் பாவைக் குறிக்கும் பொதுப் பெயராகக் கையாளப்படுகின்றது. சீல், ஸ்லோகம் என்ற சொற்களும் இப்பொருண்மையையே குறித்து வருகின்றன.

தமிழ்ச் செய்யுள் பா-பாவினம் எனப் பகுக்கப் பெறுகின்றது. ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவும், வெண்பா வகையான பரிபாட்டும், ஆசிரியம், வெள்ளையின் மயக்கத்தில் தோன்றிய மருட்பாவும் பாவின்

கண் அடங்கும். பாக்கள் நான்கிற்கும் அமையும் தாழிசை துறை விருத்தங்கள் பாவினமாம்.

இத்தமிழ்ப் பாக்களோ பாவகைகளோ மலையாளத்தில் காணப்படவில்லை. தமிழ் வஞ்சிப்பாவும் மலையாள வஞ்சிப் பாட்டும் பெயரொப்புமை மட்டுமே காட்டுகின்றன. சில ஆய்வாளர் இரண்டிற்கும் அடிப்படை ஓசை ஒன்றே எனக் கருதுகின்றனர். இது எந்த அளவு உண்மையென்பது விரிவான ஆய்வுக்குப் பின் மட்டுமே விளங்கும்.

பாவினங்களுள் தாழிசை துறை என்ற விரண்டும் தமிமொழியப் பிறமொழிகளில் இருப்பதாசத் தெரியவில்லை விருத்தமென்பது வடமொழியிலும் மலையாளத்திலும் காணப் படுகின்ற 'விருத்தத்'தோடு ஒப்புமையுடையது. விருத்தம் எனும் பெயரும் அச்செய்யுளும் வட மொழியிலிருந்து தமிழால் கடன் வாங்கப்பட்டது என்று பலர் கருது கின்றனர்.[5] இது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

பா—பாவினப் பகுப்புத் தமிழுக்கே உரியது. அகவல் முதலிய பாவகுப்பு வடமொழியில் இல்லை. தாழிசை துறை என்பனவும் காணப்படவில்லை. இவை யனைத்தும் தமிழுக்கே உரிய தனித் தன்மைகள். பின் ஏன் விருத்தம் என்பதை மட்டும் கடன் பெற்றதாகக் கொள்ளல் வேண்டும்?

விருத்தம் என்பது விருந்து என்ற சொல்லிலிருந்து ஆக்கப்பட்டிருக்கலாம். வருந்து—வருத்தம் பொருந்து—பொருத்தம் என்பனவும் குருந்தும் குருத்து என்பதும், 'ந்த்' 'த்த்' ஆக மாற்றமடைவதையும் 'அம்' பொருள் வேறு

---

5. The Word Virutham in Tamil Prosody is a corruption of the Sanskrit term vritha and this type of stanza having four equal lines is probably an imitation of sanskrit slookaas —A Study of Malayalam metres—N. V. Krishna Warriar, B. O. L, M. LITT., (Unpublished N. Litt. thesis) August, 1947 Page. 10.

பாடின்றி இணைவதையும் காட்டுகின்றன. விருந்து— விருத்தம் என்பதும் இத்தகையதே.

விருந்து என்ற சொல் புதுமை எனும் பொருளுடையது. புதிய ஏதேனும் ஒன்றைச் சுட்டி நிற்கின்றது., எனவே, ஒரு புதிய செய்யுள்வகை அவ்வாறு பெயர்சூட்டப் பெற்றது என்று கொள்ளலாம். பிற்காலத்தில் விருத்தம் என்ற சொல் விருத்தத்தை மட்டுமின்றிப் பிற பாவினங்களையும் குறிக்கும் பொதுச் சொல்லாகக் குறிக்கப்பட்டது என்று தோன்றுகின்றது. பல பட்டடைச் சொக்கநாதப் புலவர், 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்குயர் கம்பன்' எனக் குறிக்கின்றார். கம்பனில் விருத்தத்தோடு துறையும் கையாளப்படுகின்றது. நம்மாழ்வாரின் 'திருவிருத்தம்' கட்டளைக் கலித்துறையால் யாக்கப்பட்டது. புனிதர் ஜி. யு. போப் அவர்களின் 'A Poets Catachism' என்பதில் 'விருத்தம் என்பதன் கீழ் அளவொத்த நான்கடிகளையுடைய ஆசிரியவிருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை என்பனவனைத்தும் தரப்படுகின்றன.

விருந்து என்பதிலிருந்து விருத்தம் ஆக்கப்பட்டது என்பதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. தொல்காப்பியம் விருந்து என்பதை 34 செய்யுளுறுப்புள் ஒன்றாகக் கொண்டது.

'விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'— தொல், 1495

இந்நூற்பா விருந்தை யாப்பின் வெளியீடாகக் கருதுகின்றது. யாப்பு என்பது இலக்கிய வகையையோ வடிவையோ குறிக்கலாம்; எனவே தொல்காப்பியத்திலோ சங்கவிலக்கியத்திலோ காணப்படாத இலக்கிய வடிவு—செய்யுள் அமைப்பு, விருத்தம் எனக் குறிக்கப்படுகின்றது எனக்கொள்ளலாம்.[6]

6. டாக்டர் ஏ. சி. செட்டியாரவர்கள் கலித்தொகைப் பாக்களின் இடைநிலைப் பாட்டுக்களான தாழிசையே பிற்காலப் பாவினங்கட்கு வித்திட்டுக் களனாகவும் அமைந்தன எனக்கருதுகின்றமை இங்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. Advanced Studies in Tamil Prosody—Dr. A. C Chettiar, Annamalai University Publication—1943.

இது இப்போதைக்குக் கொள்கையளவினதே,யாயினும், இதனை முற்றிலும் புறக்கணிக்கவோ மறுக்கவோயியலாது. இது இன்னும் விரிவான ஆய்வுக்குரியது.

பாவினங்களும் பாஷா விருத்தங்களும் தம்முள் ஒப்புமை காட்டி நிற்கின்றன. இராமசரிதம், கண்ணச ராமாயணம் போன்ற மலையாள இலக்கியங்கள் தமிழ் விருத்தங்கட்கு இடமளிக்கின்றன. கலிவிருத்தம், கலித்துறை, அறுசீர் எழுசீர்—எண்சீர்—பதின்சீர் ஆசிரிய விருத்த வகைகள் என்பன இராமசரிதத்தில் காணப்படும் நாலடிப் பாவமைப்புக்கள். பிற்கால மலையாள இலக்கியங்களில் ஈரடிச் செய்யுளின் பயிற்சியே மிகுதி. பாஷா விருத்தங்கள் பெரும்பான்மையும் ஈரடியாலானவையே.

தமிழ்ப் பாவினங்கள் பெரும்பான்மையும் நாலடியால் அமைகின்றன; சில இரண்டடியால் ஆகின்றன. திரு. வாரியார், இராமசரிதத்தில் காணப்படும் பதினாறு விருத்த வகைகளைத் தமிழ் விருத்தத்தோடு பொருத்திக் காட்டுகின்றார் (பக்கம் 65-74). எதுகை, மோனை, அந்தாதி என்பன அந்த அளவு முதன்மை பெற்றில (பக்கம் 92).) இந்நூலின் செய்யுட்களும், வடமொழி விருத்தங்களும் தமிழ்ப் பாவினங்கள்போல அமைகின்ற நாலடிச் செய்யுட்களே. ‘கண்ணசன் தேர்ந்து கொண்ட யாப்பு வடிவம் அவர் நடைக்கு மெருகூட்டியது. அவர் பெரும்பான்மையாகக் கையாண்ட வடிவம் அவரே தோற்றுவித்தது;[7] இன்று அது அவர் பெயராலேயே வழங்கப்படுகின்றது. கண்ணச விருத்தம் என. நிரணம் விருத்தம் என்ற பெயரும் இதையே

---

7. திரு. வாரியார் வேறுவிதமாக நினைக்கிறார். கண்ணச விருத்தம் கண்ணசனால் உருவாக்கப் பட்டதன்று என்று கருதுகின்றார். இராமசரிதத்தின் 51, 91-ம் செய்யுட்களில் அருகி வந்த அமைப்பே கண்ணச ராமாயணத்தில் பெருகிப் பயின்றது என முடிக்கின்றார்.

குறிக்கின்றது'[8]. இவ்விருத்தத்திற்குத் திறனாய்வாளர் தரும் விளக்கம், இதனை எண்சீர் ஆசிரிய விருத்தத்தோடு ஒத்து வைத்து எண்ணத் தூண்டுகிறது.

இனி, தமிழிலும் மலையாளத்திலுமுள்ள விருத்தங்களையும், அவற்றின் தன்மைகளையும் அடிப்படையாக்கிப் பொதுமையமைப்புக்களையும் ஒப்புமை நிலைகளையும் காண்போம்.

இரு மொழிச் செய்யுட்களும் நான்கடியும் ஈரடியும் பெறுகின்றன. ஆசிரிய விருத்தம், ஆசிரியத்துறை; கலிவிருத்தம், கலித்துறை; வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வஞ்சித்தாழிசை என்பனவனைத்தும் நான்கடி செய்யுளே. மலையாளத்திலுள்ள வட மொழிச் சார்பு விருத்தங்களனைத்தும் நாலடிச் செய்யுளாக அமையுமாற்றை விருத்த மஞ்சரி சுட்டுகின்றது.

தாழிசை, கண்ணி எனவும் குறிபெறுகின்ற தன்மையுடைய குறள் வெண் செந்துறை, குறட்டாழிசை, கலித்தாழிசை எனும் பாவினங்களும், குறள் வெண்பாவும், சிந்து, கும்மி முதலிய பிற்கால வளர்ச்சி வடிவங்களும் பெரும்பான்மை ஈரடியால் இயல்கின்றவையே. (கலித்தாழிசை, சிந்து என்பன நான்கடியாலும் நடைபெறுகின்றன). பாஷா விருத்தம் பொதுவாக அடிவரையறை பெறாவிடினும் பெரும்பான்மை ஈரடிச் செய்யுளே.

இவ்விரண்டு மொழியத், தமிழில் மூவடிச் செய்யுளும் உண்டு. சிந்தியல் வெண்பா, வெண்டாழிசை, ஆசிரியத்

---

8. The metre of his (Kannasa's) choice has its part in shaping his style. This particular metre which he uses perdominantly in the poem is practically his own finding and now widely known as Kannasa vritha or niranam vritha- Language of Middle Malayalam-Puthusseri Ramachandran Dravidran Linguistic Association of India. Trivandrum. 1973. Page 74.

தாழிசை என்பன இத்தகையன. எழுத்தச்சன் மூவடிச் செய்யுட்களையும் கையாண்டமையைத் திரு. வாரியர் குறிக்கின்றார்.

தமிழில் பெரும்பான்மைச் செய்யுட்கும்—பா பாவகை பாவினம்—அடிவரையறை கருதப்படுகின்றது. வரையறை இல்லாதன தனித்துச் சுட்டப்படுகின்றன. மலையாள விருத்தங்கட்குப் பொது நிலையில் இவ் வரையறை, இல்லாவிடினும் சிறப்பு நிலையில் இருமொழிச் செய்யுட்குமிடையே அடியெண்ணிக்கையில் பொதுமை அமைகின்றமை இங்கு நினைக்கப்படுகின்றது.

மலையாளத்திலுள்ள வடமொழிச் சார்பு விருத்தங்களான சந்தமும் தண்டகமும் தமிழ் இலக்கண இலக்கியங்களில் கருதப்பட்டமை முன்பே எடுத்து மொழியப் பெற்றது.[9]

தமிழ்—மலையாளச் செய்யுட்கிடையேயுள்ள பொதுமை பல இலக்கண வல்லுநராலும் இலக்கியப் புலவராலும் திறனாய்வாளராலும் நினைக்கப்படுகின்றது. கேரள கௌமுதி, விருத்த மஞ்சரி, திராவிட விருத்தங்களும் அவயுடே தசா பரிணாமங்களும், A Study of Malayalam Metres, விருத்த விசாரம் - போன்ற பல நூற்களும் இத்துறையில் தொண்டு புரிகின்றன. 'முக்கியமான மலையாள விருத்தங்கள் பலவும், இடைக்காலத் தமிழ்க் காப்பியத்தில் பயில்கின்ற யாப்பமைப்போடு மிக நெருங்கிய தொடர்புடையன. பெரும்பான்மையான மலையாளச் செய்யுட்களும் இடைக்காலத் தமிழ் செய்யுள் வடிவங்களிலிருந்து நேரடியாகத் தோன்றியனவே' என முடிந்த முடிபாகக் கொள்கிறார் திரு. வாரியர்.[10] திரு. உள்

---

9. யாப்பருங்கல விருத்தி—மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை பதிப்பு சென்னையரசு வெளியீடு—1960. பக்கம் 467.

வீரசோழியம்—கழக வெளியீடு—1970. நூற்பா 29

10. The important metres (of Malayalam) have decided affinities with the metres of the Tamil Classics of

ஞூரவர்கள், இந்துவதன, குசுமமஞ்சரி, மல்லிக, தோடக எனும் விருத்த வகைகள் திராவிட மொழியில் தோன்றிப் பின் வடமொழியால் கடன்வாங்கிக் கையாளப் பெற்றது எனக் கொள்கின்றார்.[11] பேராசிரியர். பி. குஞ்ஞிக் கிருஷ்ண மேனோன் தமது பாஷாவிருத்த தீபிகையில், மலையாள விருத்தங்கட்குத் தமிழோடு எந்த நிலையிலும் ஒரு நேரடித் தொடர்பும் இல்லை என நிறுவத் துடிக்கின்றார்; தன் நிலையில் ஓரளவு வெற்றியும் பெறுகின்றார். இது முரண் கருத்தேயாயினும் இங்குக் குறித்தல் தேவையே.

விருத்த மஞ்சரி, A Study of Malayalam Metres என்ற இரு நூற்களையும் அடிப்படையாக்கி, சீரும் கணமும் ஒன்று எனக்கொண்டு கீழ்வரும் பொதுமைக் கல்வி ஆக்கப்படுகின்றது.

1 கலிவிருத்தம் நாற்சீரடி நான்காலாயது, தாழிசை இரு நாற்சீரடிகளாலாக்கப்படலாம். இந் நிலையில், நான்கு கணங்களோரடியிலுள்ள பாஷா, வடமொழிச் சார்பு விருத்தங்கள் ஒப்புமையுடையனவாகக் கொள்ளப்படுகின்றன. அவை (1) காகளி (2) களகாஞ்சி (3) மணிகாஞ்சி (4) மிஸ்ர காகளி (5) ஊன காகளி (6) த்றுத காகளி (7) ஸ்தல காகளி (8) பர்யஸ்த காஞ்சி (9) கீதாக்ர (10) மஞ்சரி (11) சர்ப்பினி (12) ஸ்ரக்விணி (13) ஸ்வாகத (14) சுமங்கல (15) உபசர்ப்பிணி (16) கல்யாணி (17) புஜங்கப்ரயாதம் (18) தோடகம் என்பன. இவை தம்முள் ஒரே கணவெண்ணிக்கை பெறினும் எழுத்தெண்ணிக்கையிலும் மாத்திரைப் பேறிலும் வேறுபட்டுத் தனித்தனி விருத்த வகையாக உருப்பெறுகின்றன.

---

the medieval period. Most Malayalam metres are direct descendants of Tamil metres of the middle ages-A study of Malayalam metres. Page 142.

11. A study of Malayalam metres –Page 55.

2. கலித்துறை அல்லது ஐஞ்சீரடி இரண்டாலாய தாழிசை (1) சம்புடிதம் (2) அதிசம்மத (3) ஸ்திமித (4) மதனார்த்த (5) இந்துவதன (6) வசந்ததிலகம் (7) அதிக காகளி என்பனவற்றோடு அமைப்பு ஒப்புமையுடையன.

3. அறுசீராசிரிய விருத்தத்தையும், அறுசீரடித் தாழிசையையும் கீழ்வரும் விருத்த வகையோடு ஒருங்குவைத்து எண்ணலாம். (1) கேக (2) அன்னனட (3) ஹம்சப்புலுதம் (4) அஜகரகமனம் (5) அதிஸ்திமித (6) சங்கரசரிதம் (7) பஞ்சசாமரம் (8) மல்லிக.

4. எழுசீராசிரிய விருத்தம் எழுசீரடித் தாழிசை என்பன குசுமமஞ்சரியோடு ஒப்புமைகாட்டி அமைகின்றன.

5. எண்சீர் ஆசிரிய விருத்தமும் தாழிசையும் (1) தரங்கிணி (2) நிரண விருத்தம் (3) வடக்கன்பாட்டு விருத்தம் என்பனவும் வடிவ ஒப்புமைகாட்டுகின்றன.

6. வஞ்சி விருத்தமும் அர்த கேகவும் ஒரே தன்மையின.

7. 14 சீர் ஆசிரிய விருத்தத்தோடு குறத்தி தொடர்பு பெற்று வருகின்றமையை வாரியர் நவில்கின்றார்.

8. நம் ஆசிரியத்துறை, பல்லவினி, சமாசமம் எனும் விருத்தங்களோடு ஒத்துச்செல்கின்றது.

திராவிட மொழிகளில் தமிழும் மலையாளமும் செய்யுளமைப்பில் பொதுமைகாட்டி நிற்கின்றமையும், இருமொழியும் தமக்கே உரிய தனித்தன்மையை இழக்காது இயல்கின்றமையும் இதனால் விளங்குகின்றன.

## சில சான்றுகள்

1. *கலி விருத்தம்*

'முன்பு பெறப்பெற்ற பேறே முடிவில்லை
பின்பு பெறும்பேறு முண்டோ பெறுகுவனேல்
என்பு பெறாத இழிபிறவி எய்தினும்நின்
அன்பு பெறுகை யரும்பே றெனக்கென்றான்'
—கம்பன் 6 : 299

'அணைந்த கரவாள் திருவுடம்பி லமிழுமுன்
குணம்கிளர் நிசாசரி குதித்து பிடிபடான்
மணந்தரும் மலர்க்குழல் மடந்தய ரெல்லாரும்
வணங்க மதமீடி நடகொண்டவன் மறைந்தான்'
—இராம சரிதம் 26

2. *கலித்துறை*

'ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணாய்
ஆவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் னுருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் போகின்றாய்;
— கம்பன் 2:225

(கட்டளைக் கலித்துறை)

'அறையார் புனலு மாமலரு மாடர வார்சடைமேல்
குறையார் மதியுஞ்சூடிமாதோர் கூறுடை யானிடமாம்
முறையார் முடிசேர் தென்னர்சேரர் சோழர்க
ளாம்வணங்கும்
திரையார் ஒளிசேர் செம்மையோங்கும் தென்திருப்
பூவணமே'
—சம்பந்தந் தேவாரம் 64 : 1

'மன்னவ னேமனம் மைதிலி தன்னில லிந்தோனீ
என்னொடு முன்ன மியங்கும் தொந்து மிளக்குந்து
என்னது காரண மிந்திர சித்தினு மாதாவே
நென்னெய றிந்தரு ளாதொழி யின்னதி னிக்காலம்'

—இராமசரிதம் 1148

3. அறுசீர் ஆசிரியவிருத்தம்

'வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுங் கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு
மிடநாடி யிழைத்த வாறோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி உடல்புகு ந்து
தடவியதோ ஒருவன் வாளி'

—கம்பன் 6 : 3906

'மன்னனே விரிஞ்சன் தந்தான்
வரங்கள்நீ யிரந்த வல்லால்
முன்னமொண் தேரும் வில்லும்
முரண்கிளர் கவசத் தோடே
பின்னெனின் உடவாள் தந்தான்
பிறையணி சடையோ னென்று
லிந்நெந்து குறவு வெல்வா
னிராமனெ யிகலி லையா'

—இராமசரிதம் 398

4 எழுசீர் ஆசிரியவிருத்தம்

'எண்ட ருங்கடை சென்ற யாம
மியம்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன்
மயுங்கி விம்மிய வாறெலாங்

கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை
யான காமர் துணைக்கரங்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றி
விளிப்ப போன்றன கோழியே'

— கம்பன் 2:234

'விச்சயாய் முடியு மிச்செ யின்றதொழில்
வீறு மிக்கவி வீரர்காண்
விச்ச கல்லு மலயும் மராமரவும்
வாறு மாறு சமயுமுனே
வச்சிரம் வணங்க மொச்சபோல் முழங்கி
வந்த குன்றுமது சொண்டறுத்
தச்ச கத்திடை நிரத்தி ஞனரி
குலத்தெ வீழ்த்திய நிசாசரன்'

—இராமசரிதம் 425

5 எண்சீர் ஆசிரிய விருத்தம்

'நாழி நவைதீ ருலகமெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனூர் தாமே
ஊழி பலபலவு நின்றளந்தா லொன்று
முலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனுள்
தாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா
யவுணர்கடா நின்னடிமை யல்லாமை யுண்டோ'

— கம்பன் 3:102

'தன்னில் தன்னில்சில பிணங்கள் தலவேரூய்
சட்டற்ற தாண்டவங்க ளுள்கலர்ந்நி தொக்கே
சின்னிக் களத்திரு ளடக்க முலகத்தும்
செல்வுங்கொள் வுய்யவனும் வானிடை யுதித்தான்

மின்னல் புணர்க்கெதிர் பொடுக்கனெ யொரிக்கால்
வேந்தன் நறுஞ்சில விளங்குமது காணும்
உன்னிது கொள்ளருது மன்னவனெ யொன்னூர்க்
களித்தூர்ந்ந போர்க்கால முலந்தளவி லெங்கு'
—இராமசரிதம் 843

'இடியா கின்ள மிழாவொலி யாழுடன்
ஏவர்க் கும்பரி தாபம் களவான்
சுடரே றும்மின் னல்ப்புணர் ஆகிய
தூய விளக்கு கொளுத்தி விசேஷால்
வடிவே லும்வரி வண்டுகள் பாட
மயூர அடிகள் மகிழ்வெய்தும் வண்ணம்
நடனு கியகார் காலம் வந்நொரு
நாடகம் ஆடும் பொலிவிது பாராய்'
— கண்ணசன் - கிஷ்கிந்தா 146

6 பதின்சீர் ஆசிரிய விருத்தம்

'திங்கள் நுதற்றிரு மாதொடு நின்றே மன்றுடும்
செங்கண் விடைக்கொடி யோனருள் கன்றே
யொன்றேயாய்

எங்களு ளத்தமு தூறுக ரும்பே அன்பாளர்க்
கின்பம ளிக்குமெய்ஞ் ஞானம ருந்தே யெந்தாயின்
கொங்கலர் மைக்குழல் வாழ்பொறி வண்டே வண்டூதும்
கொந்தள கக்குற மான்வளர் குன்றே என்றேதும்
கங்கைம கட்கொரு கான்முளை செங்கோ செங்கீரை
கந்தபு ரிக்கரு ணைநிதி செங்கோ செங்கீரை'
— முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 21

'வரமய னேடுகொண்ட திளப்புக்
கொண்டுல கேழிரண்டும்
மதிகெடு மாறுலெக்கு மரக்கர்
நாயகனெயு மம்பின்

நிரநிர வேயரிஞ்ஞு ரிஞ்ஞொன்றே
யொன்றுகொ டேழெயேழால்
நிலமிசை யிரண்டே யிரண்டுகொண்
டொருமூன்றே மூன்றால்
வருமவ பத்துபத்துகொ டஞ்செ
யஞ்சுகொ டாறெயாறால்
மனுகுல வீரனூழியி வீழ்த்தினின்
றிகல்செய் வதுங்கண்
டிருள்முகில் பாரில் மாரிகள்
வாரிவாரி சொரிந்தபோலே
யிடயிட யணிசா சரமெய்யில்
வெண்கணயால் பொழிந்தான்'

— இராமசரிதம் 928

7 வஞ்சி விருத்தம் —(முச்சீர்த்) தாழிசை —அர்த கேக

'தூண்ட நின்ற தொன்மைதான்
வேண்ட நின்ற வேதநூல்
பூண்ட நின்பொ லங்கொள்தாள்
தீண்ட வின்று தேறினேன்'

— கம்பன் 3:70

'விற்சாரு மேரு பொருப்பின்
பொற்சாரல் சாரப் புகவே'

— தக்கயாகப் பரணி 306

'திரயில் சாடி நீந்தும்
நெற்றின் மேல்குறிச் சாந்தும்'

— விருத்த மஞ்சரி-பக்கம் 77

8 (நாற்சீர்த்) தாழிசை

'கோவலர் தீங்குழல் இனைய வரோஎன்
பூவெழி லுண்கண் புலம்புகொண் டினையும்'

— கலித்தொகை 130

'ஏறிய தாமிவை போகில மெனவே
கூறிய கற்கிக ளேசத கோடியே'

தக்கயாகப் பரணி - 63

'நின்னுல சாத்யமா யில்லொரு கர்மவும்
நிர்ணய மெங்கிலு மொந்நிது கேள்கநீ'

—அத்யாத்ம ராமாயணம் – அயோத்யா 557

9. (அறுசீர்த்) தாழிசை-கேக

'சாதிக ளொன்றே டொன்று தலைதடு மாறி யாரும்
ஓதிய நெறியி நில்லா தொழுக்கமு மறந்து போயே'

—கலிங்கத்துப் பரணி 259

'காரணீ புராணீ வாணீ அம்பிகே உம்பர் தாயே
காருணீ கருண குந்நே காத்தருள் மூல தாயே'

—கூடியாட்டம்

10. (எழுசீர்த்) தாழிசை-குசுமமஞ்சரி

'இலங்கை எறிந்த கருணா கரன்தன்
இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்கம் எறிந்த கருணா கரன்தன்
களப்போர் பாடத் திறமினோ'

—கலிங்கத்துப் பரணி 64

'கண்ட நாள மழகில் திரிச்சனு
பதம்ரதம் பிறகில் நோக்கியும்
குண்ட ணுய்சர பயனே கண்டமது
பூர்வ காயகத மாக்கியும்

—விருத்த மஞ்சரி பக்கம் 39

11. ஆசிரியத்துறை, குறட்டாழிசை-சமாசமம்

'எற்றென்றுங் காணேம் புலத்த லவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்

கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையார்
உற்ருடி ஞேந்தோழி நெஞ்சன்றே'

—சிலம்பு 24;4

'வேலினேர்தரு கண்ணிஞளுமை பங்கனங்கணன்
மிழலைமாநகர்
ஆலனீழலின் மேவிஞனடிக் கன்பர் துன்பிலரே'

— சம்பந்தர் தேவாரம் 369;1

'சுரபு ரியொடு சமமா கும்நிஜ
புரியில் புக்குடன் ரகுநாதன்'

- விருத்த மஞ்சரி பக்கம் 76

# 'அரி'-சொல்லும் பொருளும் 16

சொல்லின் பொருளை, அதன் வரலாற்றை அறியத் துணையாக அமைவன அகர வரிசைகள்-அகராதிகள். சொல் அல்லது மொழியின் வரலாறு மட்டுமன்றி, அம்மொழி பயிலும் மக்களின் வாழ்க்கைப் பின்புலமும் பண்பாட்டு அடித்தளமும், வளர்ச்சிப் படிநிலைகளும் வேறுபாடும் உணருவதற்கு அகர வரிசைகள் உறுதுணையாகும்.

எளிய-சாதாரண அகர வரிசைகளை விட (Ordinary Dictionaries) ஒரு 'வரலாற்று அகர வரிசை' (Dictionary of Historical Princriples) இப் பணியை முழுமையாக நிறைவேற்ற இயலும்.

நெடுங்கணக்கின் எழுத்து முறையைப் பின்பற்றி அகரம் முதலாக்கப்பட்ட அனைத்து நூற்களையும் 'அகர வரிசை' என்ற பொதுப் பெயரால் சுட்டுகின்றோம். இவற்றை இரு பெரும் பிரிவுகளில் அடக்கலாம்-ஒன்று, சொல் பற்றியன (Linguistic Dictionaries); மற்றொன்று பொருள் பற்றியன (Encyc!opaedic Dictio aries) மற்றொன்று பொருள் பற்றியன (General or descriptive); சிறப்பானவை அல்லது வரையறையுடையவை (Restricted) என இரு நிலைகள் உள. பொதுவானவைற்றில், வரலாற்று அகர வரிசையும், மூலச்சொல்லாய்வு அகர வரிகையும் (Etymologicāl Dictionary) காலவரையறையின்றி யனைத்துக் காலத்தையும் உள்ளடக்குவன (Diachronic) கலைச்சொல் தொகுப்புக்கள் (Gloss), சொல்

லடைவுகள் (Index) பொருள் அடைவுகள் (Concordance), குறிப்பிட்ட ஏதேனும் பொருண்மை அல்லது செய்தி பற்றிய தொகுப்புக்கள்-சான்ருக, இடம்/நிலம் பற்றியன (Gazetteer) சான்ரேர் குறித்தன (Dictionary or Biographies), போன்ற பல-காலவரையறையுட்படும் (Synchronic) சிறப்பகராதிகள்.

தமிழ் அகராதிக் கலையின் தோற்றம் தொல்காப்பிய உரியியலில் கால் கொண்டுள்ளது. பிற்கால இலக்கணங்களின் உரியியற் பகுதிகளும் இத்தொண்டினைத் தொடர்ந்து செய்தன. இடைக் காலத்தில் உரிச்சொல், நிகண்டு எனும் பெயருடைய நூற்கள் 'சொல் பொருள்' துறையை வளர்த்தன. அகரவரிசை முறையில் அமைக்கும் இயல்பு இரேவண சித்தரின் அகராதி நிகண்டு மூலம் 1594-ல் அறிமுகமாயிற்று. மேனுட்டார் தொடர்புக்குப் பின், சொல்லின் இறுதியெழுத்துவரை அகர முறை பின் பற்றப்பட்டு இன்றைய அமைப்பு உருவாயிற்று. இற்றைக்குத் தமிழில் 380க்கும் மேற்பட்ட அகராதிகள் உள. காலம் (Time) மொழி (Monolingual, bi...etc) நோக்கம் (Scope and Purpose) அளவு (Pocket, abridged, unabridged etc,) உள்ளடக்கம் என்பவை காரணமாக இவற்றில் ஏறத் தாழ முப்பது வகைகளும் பல துணைவகைகளும் உள்ளன.

காலத்திற்கேற்ப மொழி மாறுவதால், மக்கள் அறிவியல் ஆக்கம் காரணமாக மொழி வளருவதால், அகராதிகளும் பலவாகப் பெருகியுள்ளன. எனினும் தமிழுக்கு ஒரு வரலாற்று அகர வரிசை இன்னும் உருவாகாமை பெருங் குறையே.

மொழியைச் செந்நிலைப் படுத்துவது (Standardisation) அகராதிக் கலைஞனின் (முதல்) நோக்கமன்ருயிலும் மொழியின் நிலையை உணர்த்துவது அகராதியின், கடமையாதலால்

---

* "Types of Dictionaries in Tamil"-Dr. S. V. Subramanian, Seminar on Lexicography, Tvm. 1977, Sept).

மொழியில் ஒவ்வொரு சொல்லும் பெறும் பங்கு, முதன்மை, பயிற்சி, பொருண்மை. அதன் மூலம், ஆக்கம், வளர்ச்சி, வேறுபாடு-ஆகியவற்றை உணர்த்தும் முழுநிலை அகரவரிசை இன்றியமையாதது என்பது தெளிவு.

தொல்காப்பியம் முதல் இன்றைய உரை வழக்கு வரை வழங்கிவரும் சில சொற்களில் 'அரி' என்பதும் ஒன்று. மிகுதி யான பொருள் பெருக்குடைய ஒரு சொல்லாகவும் இது அமைகின்றது. பெயர், வினை, உரி நிலைகளில் வெளிப்படும் இயல்பினது. நாம் முன் நினைந்த வண்ணம் மொழி வளர்ச்சி யில் பிறமொழித் தாக்கம், மக்கள் வாழ்வின் சமயத் தோய்வு, பண்பாட்டு வளர்ச்சி என்பனவற்றை இதன் பொருள்களால் உணர முடிகின்றது.

தொல்காப்பியம். இலக்கியங்கள், நிகண்டுகள், தற்கால அகராதிகள் என்பனவற்றிலிருந்து இச்சொல்லுக்கு 130 பொருண்மைகள் கிடைக்கின்றன. இவற்றுள் ஏறத்தாழ ஐம்பது விழுக்காட்டிற்கே (50%) இலக்கியச் சான்றுகள் உள. (கந்த புராணம் வரையுள்ள இலக்கியங்களே பார்க்கப்பட் டுள்ளன).

'அரியே ஐம்மை' என்பது தொல்காப்பியம் (839). மென்மை என்ற ஒரு பொருண்மையே இவண் அமைகின்றது. 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா' என்றதால் (783) அரிய பொருள் மட்டுமே குறிக்கப்பட்டது என நினைக்கலாம். இப்பொருண்மை இடைக்காலம் வரை இலக்கியங்களில் தொடர்ந்து ஆளப்பட்டது.

1. மென்மை [(தொல் (1) சங். (8) காப். (3)[

அரிமடப் பிணையோ டல்கு நிழ லசைஇ-குறுந். 338. 2.

சங்க இலக்கியம் பல பொருளில் இச்சொல்லைக் கையாளு கின்றது. அவற்றுள் செவ்வரி, பரல், சிங்கம் போன்ற பொருண்மைகள் பயின்றும், பிற் காலத்தும் வழங்கியும் வருகின்றன. தொல்காப்பியம் உரிச்சொல் நிலையில்

நுண் பொருள் தர, சங்க இலக்கியம் அத்துடன் பெயர், வினைச் சொல் நிலைகளையும் நுண்பொருள், பருப்பொருள் நிலைகளையும் தருகின்றது. பொருண்மைகளிடையே அமையும் தொடர்பு, ஒன்றிலிருந்து மற்றொன்று கிளைத்திருக்கின்றமையை உணர்த்துகின்றது எனலாம்.

2. சிங்கம் [ (சங். (5). காப். (169). பக்தி(31). பிற(21) ]

அரிமா னிடித்தன்ன அஞ்சிலை வல் வில்-கலி. 15.1.

3. செவ்வரி [ சங் (33). காப் (107). பக்தி (12). பிற (31) ]

அல்கு படருழந்த அரிமதர் மழைக்கண்-நற். 8.1,

4. பரல் [ சங்(19). காப்(34) ]

தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்-
மதுரை. 444.

5. வண்டு. [ சங்.(6) காப் (12). பக்தி(3). பிற(3) ]

அரியினம் கடுக்கும் சுரிவணர் ஐம்பால்-அகம் 223.12

6. அரிசி: [ சங்.(2). காப்(4). பிற(5). ]

கழை வளர் நெல்லினரி யுலை யூழ்த்து-மலை. 180.

7. கதிர் அறுக்கும் பருவம்; [ (சங்.(1). காப்(1). ]

அரிபுகு பொழுதி னிரியல் போகி-பெரும். 202.

8. நெற்கதிர்க் குவை [சங் (1). ]

அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்-
பெரும். 473 (கழகம்)

9. நெற்கதிர்: [ (சங். (1). ]

நெல்லின் சேயரி புனிற்று-அகம். 156.3.

10. ஞாயிறு (கதிரவன்): [ சங். (1). காப். (3). ]

அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்-
பெரும். 473 (நச்சர்)

11. கள்: [ சங். (3). ]

நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலித் துகுப்பவுங் கொள்பவன்-புறம். 232.3

12. நீர் : [சங். (1) ]

கயல் புரை யுண்கண் அரிப்ப வரி வார-கலி. 145. 5.

13. பொன் : [சங். (1)

அரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலே-
பெரும். 490.

14. அழகு : [சங் (11). காப் (12). பிற (2). ]

அஞ்சிறை வண்டி னரியின மொய்ப்ப-ஐங். 489. 1

15. ஒருவகை ஓசை : [சங். (13). காப் (5).]

அரிக் குரற் றடாரியின் யாமை மிளிர-புறம். 144. 5.
(45. பகை: [சங் (1). காப் (7) . பக் (1). பிற (2)]
ஏற்றின் அரி அரிபு அறுப்பன-கலி. 103. 24)

16. நிறம் : [சங். (3)]

முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு-மலே. 465.

17. நுண்ணிய : [சங் (1)[

அரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்—புறம். 90. 8

18. இடைவிட்ட : [சங் (1)]

கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனேப்ப—புறம். 144. 5.

19. அரிந்த (அறுத்தல்) : (Cutting) [சங் (4). காப் (21).
பக்தி (4) பிற (1) ]
அரிகால் போழ்ந்த தெரிபகட்டுழவ-அகம், 41. 6.

20. அரித்த (வடிகட்டுதல்) (Filtering) : [சங் (4).
காப் (2). பக்தி (4)]
கோளிவண் வேண்டேம் புரவே நாரரி
நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தி-புறம். 297. 5.

21. அரித்த (Washing Away) : [சங் (4).]
அரிநிறக் கலுழி யார மாந்தி—அகம். 157. 3

22. அறுக்கும் (கொய்தல்) (Harvesting) ; [சங். (3)]
நெய்தலங்கழனி நெல்லரி தொழுவர்-புறம். 209. 2.
சங்கம் மருவிய காலத்திலக்கியமான கைந்நிலை எனும் கீழ்க்கணக்கு நூல், 'புள்ளிபட்ட' என்னும் புதிய பொருளைத் தருகின்றது. இடைவிட்ட என்ற முன் பொருள் (18) இதனோடு தொடர்புடையதாகத் தெரிகின்றது.

23. புள்ளிபட்ட : [பதினெண் (1)]
அர்க்கார்ந்த வோமை யரிபடு நீழற்-கைந் 19
அலங்கல் உலவை அரிநிழல் அசைஇ-அகம் 199
காப்பிய காலத்தில் மேலும் பல பொருண்மைகளில் அரி பயின்றுள்ளது. அப்பொருண்மைகளை நோக்கும்போது பிறமொழித் தாக்கமும் பண்பாட்டுக் கலப்பும் உணர முடிகின்றது. கவிஞன் கலையாற்றல் காரணமாகவும் புதுப் பொருண்மை புகுந்திருக்கலாமோ என்பது எண்ணற்குரித்து.

24. திருமால் : [காப் (49). பக்தி (99). பிற (13)]
அரி அரன் பூமேலோன் அகமலர் மேல் மன்னும்-
சிலம்பு. 12. 8.

25. சூடு : [காப். (1) ]

அரிந்து கால் குவித்தோர் அரிகடா வுறுத்த-
சிலம்பு. 10, 131.

26. அழிதல் : [காப். (1) ]

அரியிற் போந்தை யருந்தமி ழாற்றல்-சிலம்பு. 27. 189.

27. மான் : [காப். (4)]

அரிச்சா லேகமு மார வள்ளியும்-பெருங். 1. 40. 9.

28. தவளை : [காப். (2). பக்தி. (2). ]

அரிப்பொற் கிண்கிணி யார்ப்ப வியலி-பெருங். 1:40. 18.

70. திரட்டும் : தோழியர் குடைந்த நுரை கை அரிக்கும், ஓர் நுடங்கிடை காண்மின்—பெருங். 1. 40. 150-151

29 தகடு : [காப். (1) ]

அரிபொற் கிண்கிணி யணிகிளர் சிலம்பொடு சில்ம்பும்-
சீவக. 12. 8.

30. ஒருவகைப் பறை . [காப் (2). பக்தி (1). ]

அரிப்பறை யனுங்க வார்க்கு மேகலைக் குரலோ டண்டி-
சீவக. 9. 88

31. இந்திரன் : [காப். (8). பக்தி. (1). ]

அரிப்பெரும் பெயரவன் முதலி னோரணி-கம்பன்-4. 459.

32. இராமன் : [காப். (1)]

... .. ... அரியை யீன்ற
ஒப்பெழுத வொண்ணுதை கற்புடையாள்-கம்பன் 6. 4146.

33. நெருப்பு : [காப். (3). பிற (1).]

வகுந்துவின் வசுவரி வதிந்த திவ்வனம்-கம்பன் 1: 379.

34, அக்கினி தேவன் : [காப். (1).]

தேன்முக மலருந் தாரானரி சொலச் சீற்றந்தீர்ந்தான்--கம்பன் 6. 4217.

35. குதிரை : [காப். (2) பிற (1). ]

நன்றுகொ ளரிமக நடத்த வெண்ணியோ-கம்பன் 1. 260

36. சிவப்பு நிறம் : [காப். (2).]

அரிமலர்ப் பங்கயத் தன்னமெங்கணும்-கம்பன் 4-8

37. மணி (Beads) (அரிமாலை) : [காப். (1)]

பொன்னரி மாலை பூவின் பொழிமதுப் பிணையன்
முத்தின்—சூளா. 2122.

38. சோலை : [காப். (1). ]

காமரு பூங்குழைக் காம வல்லிகட்
தாமரி யணையதத் தானை வண்ணமே—சூளா. 955

39. காற்று : [காப். (3). பக்தி (1). ]

அரிமக னடலரி நாதஞ் செய்யவே-வில்லி 1. 6. 23.

40. பாம்பு : [காப். (2). ]

ஆயுப்புற மிட்டுவிடப் பொருவோ னரிவெங்
கணையிங்கு மலைந்திடுவோன்-வில்லி 8. 17. 216.

41. மரகதக் கல் : [காப். (1). ]

அரிமணிச் சிலையின் சலாகையால் வட்டமாகவே
யமைத்த சாலகந் தோறு-வில்லி 1, 6. 23,

42. துளை :[ காப் (1). ]

அழுந்திய பகழியோடு மரிபடு கவசத்தோடும்-
வில்லி 4. 4. 103.
காப்பிய காலம், பக்திக் காலம் எனக் கடிவைரையறை செய்வது இயலாதாயினும், பக்தி இலக்கியப் பொருண் மைகள் தனியே கருதத் தகும் பாங்குடையன. பல காப்பியங்கள் ஆழ்வார்-நாயன்மாருக்குப் பிற்பட்டவை யாகையால் இரு நிலைக்கும் பொதுப் பொருண்மை இங்கேயே தரப்படுகின்றன.

43. நெல்லரி.

அரியேர் கழனிப் பழனஞ் சூழ்ந்தங் கழகாய—
ஞான. 2·63. 4.

44. ஒழுங்கு பொருந்திய

மைச்சணி வரியரி நயனி தொன் மலைமகள் பயனுறு-
ஞான 3. 87. 4.

46. குரங்கு : [காப். (47). பக்தி. (3). ]

அரிகுலம் பணிகொண் டலைகட லடைத்தான்—
திருமங்கை 5. 7. 7.

47. நரசிங்கம் : [காப் (6). பக்தி. (54). ]

அன்றரியாய் மடியிடை வைத்து மார்வமுன்
கீண்ட மாயனுர் மன்னிய கோயில் -திருமங்கை 5. 4. 8

48. கறுப்பு நிறம்

அரிவிரவு முகில் கணத்தா னகில் புகையால் வரை
யோடும்-திருமங்கை 8. 3, 2

49. தழுதழுத்த

அனந்த லன்றிலின் அரிகுரல் பாவியே ஞவியை
யடுகின்றதே-திருமங்கை. 8. 5. 9.

50. முதலை

ஆனை காய்ந்து அரிமாச் செகுத்து-திருமங்கை 11. 2. 2

69. சோறு : (நாலாயிர திவ்யப் பிரபந்தம்)

இந்நூ ற்ருண்டுகளை ஒட்டியும் அடுத்தும் எழுந்த இலக்கியங்கள் இச்சொல்லை இன்னும் பல பொருண்மைகளில் கையாளுகின்றன. கவிஞனின் ஆற்றலுடன் கற்போனின் கற்பனை வன்மையும் பொருள் பெருகத் துணைநிற்கின்றனவோ எனும் எண்ணம் இவற்றை நோக்க எழுகின்றது.

51. பன்றி

அரிதரு குட்டி யாய பன்னிரண் டினை-கல்லா. 38. 10

52. கண்.

அரிமுதி ரமரர்க் கரச ளுகியும்-கல்லா. 10, 8.

53. மரவயிரம்

அரிக்கிணை முழக்கி-கல்லா. 53

54. மலை

தோய்ந்த அரிகெழு மாகதக் கல் எனக் கிடப்ப
—கல்லா. 19. 3,

55. சிங்க முகன் என்னும் அசுரன்.

திறலரிக் கிளவல்—கந்த பு. கிரவுஞ்ச. 1.

56. அங்கி தீரனுடைய ஒன்பது புத்திரர்களில் ஒருவர்.

கிம்புருட னரி கேது மாலன்-கந்தபு. அண்ட 28.

57. யமன்.

ஆருயிர் கொண்டிடு மரித னூர்தியும்-கந்தபு. தான. 40

58. கண்ணன்.

அரி தூர் து சென்றனன்-குலோத்துங்க சோழன் கோவை. 490.

59. சிவன்.

பூரண ஞரணன் பொன்னுல காளி புராரி கொடி-திருவேங்கடத்தந்தாதி-69.

60. கொழிக்கும்.

மருந்தா தரிக்கு மருவி யருவட வேங்கடத்துள்-திருவேங். 43.

61. கெடுக்கும்.

திருந்தா தரிக்குமை வர்க்கிரையாக்கினை-திருவேங். 43.

62. வாயுதேவன்.

இரண்டரி கலிருண்மை யோரும்-பாரத. இராச. 17.

63. ஒளி.

அரிமணிச் சிலையின் சலாகையால்-பாரத. இந்திரப். 23.

64. திருவோண நட்சத்திரம்.

அரிமகங் குன்றிருபான் - (விதாந. குணகுண. 27).

65. கிளி.

மாப்புங் கரியுங் குயிலும் பயில்பொழில்-பழமலை அந்தாதி. 77.

66, செம்மறி யாட்டுக் கடா.

அரியினெடு தரக்குற வாடுமே-மச்சபு. நைமி. 30.

67. மயில்,

*அரியினொடு மரியுற வாடுமால்-மச்சபு. நைமி 30.*

68. குசத்தீவிலுள்ள ஒரு மலை.

*அரி யெனுங் குன்றும்-கூர்மபு. பிலக்க. 27.*

இலக்கியங்கள் தரும் இப் பரந்துபட்ட பொருண்மைகள் தவிர, நிகண்டுகள் இச் சொல்லுக்குத் தரும் பொருள்களும் மிகப் பலவாக உள்ளன. இலக்கியம் கூறாத பொருள்களையும் நிகண்டு சுட்டுவது, காரண காரியத் தொடர்போடு ஆய்தற் குரியது. (1) இலக்கியத்தில் குறிப்பாக உணர்த்தல், மறை பொருள், உள்ளுறை அமைத்தல், நேரடியாக-வெளிப்படை யாகக் கூறுமை-போன்ற நிலைமை (Ambiguity) சிறப்பு எனக் கருதப்படுவதால், பல்பொருள் நிலை பெருகி, நிகண்டுகள் அதற்கு உதவும் நிலையில் வாய்ப்பான பொருண்மைகளை எல்லாம் (All possible meanings) தொகுத்ததோ என நினைக் கலாம். (2) அல்லது இப் பொருள்களை உணர்த்தும் இலக் கியங்கள் இருந்து மறைந்திருக்கலாம் (3) அல்லது உலக வழக்கில் இப் பொருண்மைகள் பயின்றிருக்கலாம் (4) பிற மொழித் தோய்வு (வடசொல்) காரணமாக (ஹரி > அரி-திருமால் ; ஹரின் > அரி பசுமை (ஹரா-பச்சை) வும் இத்தகு புதுப் பொருண்மைகள் புகுந்திருக்கலாம்.

71 சிங்கராசி, 72 துவலை, 73 மூங்கில், 74 புகை, 75, (உயர் திணைக்) கிடப்பிடம், 76 கட்டில், 77 விசி, 78 அன்பு, 79 மருதப்பறை, 80 கடல், 81 சந்தி, 82 சிலம்பு, 83 தேர், 84 பச்சை, 85 கருங்கிளி என நிகண்டுகள் இணைக்கும் அரியின் பொருண்மை இங்குக் குறிப்பிடத்தக்கன.

தற்காலத் தமிழகராதிகள் இன்னும் மிகப் பல பொருண் மைகளைத் தருகின்றன. 86 மஞ்சள் நிறம், 87 குடியிறை, 88 பூமாலை, 89 கூர்மை 90 வலிமை, 91 குற்றம், 92 சக்கரம், 93 ஆயுதம், 94 கொடுவேலிமரம், 95 கருங்காலி மரம், 96 சந்திரன், 97 துளசி, 98 குலிசம், 99 வாய், 100 கம்பு, 101 ஆடு, 102 ஒருபேரெண், 103 விசிப் பலகை, 104 கபில

யேற்றம், 105 வாத ரோகம், 106 குன்மம், 107 மூங்கில் அரிசி, 108 கபிலநிறமே, 109 கருஞ்சிகப்பு, 110 காகம், 111 கிரணம் கதிர் 112 குயில் 113 கீழ்க்காய் நெல்லி, 114 கொள்ளின்வேர். 115 சுரம் (ஜுரம்), 116 நீர்த்தொட்டி, 117 நெருக்கம், 118 கதிர்களின் பசுங்காய்த் தெண்ணீர், 119 பர்த்ருஹரி என்னும் புலவன், 120 பனைமட்டைக் கருக்கு, 121 பொடி 122 பிரமன், 123 மநுடன், 124 யாழின் நரம்பு, 125 அன்னம் 126 வைரம் என இப்பொருள் நிலை பெருகிக் கொண்டே சென்றுள்ளது.

இற்றைநாள் இச் சொல்லினை வழங்குமிடத்து, 127 மொய்த்தல் (ஈயரிக்கிறது), 128 சிறிதுசிறிதாகத் தின்னுதல் (செல்லரித்த ஏடு), 129 தினவெடுத்தல் (உடம்பு அரிக்கிறது), 130 இம்சித்தல் (நச்சரிக்காதே), ஆகிய வினைப் பொருண்மைகள் பரவலாகக் காணப்படுகின்றன.

இப்பொருண்மைகளுள், தமிழ்ச் சொல்லகராதி மட்டுமே 113 பொருள்களை இலக்கியச் சான்றுகளும் நிகண்டு எடுத்துக் காட்டுகளும் தந்து அமைப்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று நிலையில் அரியின் பொருண்மையை நோக்கும் போது, சில அமைப்புக்கள் தென்படுகின்றன.

1. அன்று முதல் இன்றுவரைப் பயில்வன (செவ்வரி, சிங்கம், திருமால்).
2. குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வந்தன (கள்—சங்கம்).
3. குறிப்பிட்ட காலத்திலும், ஒரு இலக்கியத்தில் மட்டுமே காணப்பட்டன (இராமன்—கம்பன்).
4. மிகுதியான பயிற்சியுடையன (திருமால்).
5. குறைந்த பயிற்சி யுடையன (மயில்).

பெயர் நிலையில் பொருண்மைப் பெருக்கமைவது போன்று வினைநிலையில் அமையவில்லை. பெயரிலுள்ள அளவு வினையில் நெகிழ்ச்சி யின்மை இதற்குக் காரணமாகலாம்,

குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பொருண்மை மிகுதியாகப் பயின்றுள்ளது (Frequency)-சங்க காலத்தில், கண்ணின் செவ்வரியினையும், சிலம்பின் உள்ளிடு பரலையும் உணர்த்தி, பக்திக் காலத்தில் திருமாலையும் காப்பிய காலத்தில் சிங்கத்தினையும் மிகுதியாகச் சுட்டுகின்றது.

அரியின் பல பொருண்மைகளை வகை தொகையாக நோக்கும்போது, சில பொருண்மைகளிடையே தொடர்பு வெளிப்படுகின்றது.

1. செவ்வரி, கண், வரி.
2. சிங்கம், நரசிங்கம், சிங்கமுகன் எனும் அசுரன் குதிரை, மான், தவளை, பாம்பு,பன்றி,குரங்கு,முதலை, செம்மறியாட்டுக் கடா-ஆடு, வண்டு, மயில், கிளி.
3. நெற்கதிர், நெற்குவை (சூடு), கதிர், அறுக்கும் பருவம், அரிசி, நெல்லரி, சோறு, மூங்கில் அரிசி.
4. மென்மை, அழகு, நுண்ணிய நிறம், சிவப்பு நிறம், கறுப்பு நிறம், பொன், தகடு
5. பரல், மணி (அரிமாலை), மரகதக் கல், வைரம்; மரவயிரம், சிலம்பு, மலை, குசத்தீவிலுள்ள ஒரு மலை.
6. திருமால், இராமன், கண்ணன், (நரசிம்மன்) இந்திரன், யமன், சிவன், பிரமன்.
7. ஒருவகை ஓசை, ஒரு பறை, மருதப் பறை, தழுதழுத்த (ஓசை)
8. ஒளி, கதிர், கதிரவன், திருவோண நட்சத்திரம், சந்திரன், நெருப்பு, அக்கினிதேவன், அங்கிரீரனுடைய ஒன்பது புத்திரர்களில் ஒருவர்.
9. காற்று, வாயுதேவன்.
10. புள்ளிபட்ட, இடைவிட்ட, ஒழுங்கு பொருந்திய.

(1) ஒருசொல் முதலில் ஒரு பொருளை உணர்த்திப், பின் தொடர்புடைய, ஆயின் சிறிது வேறுபட்ட பிறிதொரு

பொருண்மையும் (Shades of meaning) சுட்டி அமைதல் இங்கு அமைகின்றது. மாலின் பல அவதாரங்களைக் குறிக்குமிடத்தும் ஹரி> அரி, அரி—சிங்கம் எனும் இருநிலைகள் பெரும் பான்மையாயின. நெல், நெல்லோடு தொடர்புடைய பொருட்கள், அரிசி- சோறு என்பனவற்றுடன் மூங்கிலரிசியும் தொடர்புற்றன. இவ்வாறே பிற வகுப்புக்களையும் (Groups) எண்ணிப் பார்க்கலாம். (2) நெருப்பு> அக்கினிதேவன், காற்று> வாயுதேவன் எனக் காலப் போக்கில் வளர்ந்த தன்மையும் உண்டு. 3) உறுப்பினைக் குறித்துப் பின் முதலுக் காயது செவ்வரி> கண் என்ற நிலைகளாலும், பரல்> வைரம், முத்து முதலிய சிலம்பின் உள்ளிடு பரல்கள்> சிலம்பு என்ற நிலைகளாலும் விளங்குகின்றன. (4) 'அர்' என்ற ஒலிக் குறிப்பு நிலை வளர்ந்து அரி என ஓசையை, பலவகை ஓசையை (தட்டை, தவளை) உணர்த்தியது என நினைக்கலாம். (5) அரிசி> அரி என்ற மாறிவந்த வடிவங்கள் போன்று அரவம்> அரவு> அரி எனவும் அருக்கன்> அரி எனவும் வடிவுகள் தோன்றியிருக்கலாமோ என்பது ஐயமே. (6) பொதுப் பொருண்மை பின் சிறப்பாயாது, நிறம்> செம்மை, கருமை — போன்றவற்றால் உணரலாம். (7) இந்நிலை மாறி, சிங்கத்தைக் குறிக்கும் சிறப்புப் பொருள்நிலை, பொதுவாகிக் குதிரை, மான், குரங்கு, பன்றி......போன்ற பல விலங்குகளை உணர்த்தும் நிலையும் உருவாகியுள்ளது.

வினைநிலையில், அரியப்படவேண்டியது (அறுத்தல், அழித்தல், விலக்கல், வேறுபடுத்தல்) என்ற நிலையில் 'பகை'ப் பொருண்மை உருவாகியிருக்கலாம். அரி> அரில் எனக் குற்றம் என்ற பொருண்மைப் பாங்கும் இங்கு நினைக்கலாம்.

பெயர், வினை நிலைகளில், முன்னொட்டாகவும், பெயர் நிலையில் பின்னொட்டாகவும் நின்று, இச் சொல் பொருள் விளக்கம் தருகின்றது. அரிமா, அரியணை; அரிவாள். (கூர்மை அல்லது வினை) அரிகதிர்கத்தி; கோளரி.

வடமொழியில் இதனோடு ஒத்த சொல்லுக்கு அமையும் பொருண்மைகள், அம்மொழித் தோய்வால் தமிழில் அவை

புகுந்தனவே என்ற எண்ணத்தை உருவாக்குகின்றன—பச்சை நிறம், பச்சை இணைந்த மஞ்சள் நிறம், மஞ்சள் நிறம், கருஞ் சிவப்பு, வெள்ளை; திருமால், இந்திரன், சிவன், பிரம்மன், யமன், ஒளிக்கற்றை, நெருப்பு, சூரியன், சந்திரன், சிங்கம், குதிரை, இந்திரனின் குதிரை, மனிதக் குரங்கு, குரங்கு, தவளை, பாம்பு, கிளி, மயில், வண்டு, கடல், முள், வரி.

மக்கள் பண்பாட்டின் சில கூறுகளையும் அரியின் சில பொருண்மைகளால் உணர முடிகின்றது. கள்ளை நாரால் அரித்து அருந்திய நிலை (நாரரி); வேலைப்பாடுடையதும் மரகதம் வைரம் முதலிய உட்பரல் பொருந்தியதும் இன்னோசையுடையதுமான அணி அணிந்தமை; இறைவனைக் குறிக்கப் பயன்பட்டமை — போன்றன.

மொழியின் வளர்ச்சி நிலையில் புதுச்சொல் ஆக்கமும், பொருள் பெருக்கமும் ஏற்படும் இயல்பினை இதனாலும் உணரலாம்.

---

இக்கட்டுரைக்குத் தம் சொல்லடைவுகளை உதவிய மர்ரே எஸ். ராஜம் அவர்கட்கும், தொகுத்துதவிய செல்வி. சிவகாமிக்கும் எம் நன்றி.

# சிலம்பில் வரி 17

தொழில் வரியும் வருமான வரியும் விற்பனைவரியும் பற்றிய செய்திகளை நாம் தினந்தோறும் நாளிதழ்களில் பார்க்கிறோம் எதற்கெடுத்தாலும், வரிபோடுகின்ற சூழ்நிலையைக் கண்டு பாமரன் முதல் பணக்காரன் வரை அஞ்சுகின்றனர். இத்தகு அச்சம் தரும் சொல்லாக அமைந்த அதன் பொருள் பற்றி ஆய்தல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றிற்று. வரலாற்று அகரவரிசைக்குப் பயன் படும் வண்ணம் இச்சொல்லை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பார்த்துப் பொருள் வளர்ச்சியை உணர்தல் தேவை. அதன் ஒரு படிநிலையாகச் சிலப்பதிகாரத்தில் அச்சொல்லின் தன்மையை அறிவதே கட்டுரையின் நோக்கம்,

சிலம்புக்கு முன்னும் வரி எனும் சொல்வழக்கு மிகுதியாக இருந்தமை தெரிகின்றது, (அட்டவணை பார்க்க) தொல்காப்பியத்தில் ஓரிடத்து மட்டுமே அமையும் இச்சொல், 'கோடு' என்ற பொருண்மை தருகின்றது (தொல்.1505). தொடர்ந்து வரும் சங்க காலத்துப் பல் பொருண்மைப் பயிற்சியுடையதாக அமைகின்றது. அதன் கண்ணும் கோடு என்ற பொருண்மையே மிகுதி. அருப்புத் தொழில், அழகு, அறல், ஆடை, எழுத்து, ஒழுங்கு, குடர், தேமல் (சுணங்கு, திதலை) நிறம், பாட்டின்வரி, பாம்பின் பத்திக்கீற்று, புலி, புள்ளி (புகர்), மடிப்பு, வளை என்பனவும் எழுதுதல், கட்டுதல், புனைதல் என்பனவும் பிற பொருண்மைகள் பெயர் வடிவில் மிகுதியும் வினை வடிவில் குறைவாகவும் இச்சொல் பயன் கொள்ளப் படுகின்றது. பிற சொற்களுக்கு அடையாகி, வரிக்குழல், வரிநிழல், வரிமணல், வரிமுலை, வரி

யல்குல். வரிவண்டு, வரிவலே போன்று சிறப்புச் செய்ய வருகின்றமையும் சங்க இலக்கியத்தில் உண்டு. 'கொடுவரி' போன்று ஒரு சொல் நீர்மைத்தாய் வருவனவும் உள.

சிலப்பதிகார காலத்தில் முற்றிலும் வேறுபட்ட பொருளில் இச்சொல் கையாளப்பட்டமை தெரிகிறது. அதன்கண் 'வரிக்கு' இசைப்பாட்டு என்ற பொருள்ஆட்சியே மிகுதி. கோடு, கூத்து, தொய்யில், வரைதல் என்பன முறையே பயன் கொள்ளப்படும் பிற பொருண்மைகள்.

இசைப்பாட்டு, கூத்து எனும் புதுப்பொருண்மைகள் இச் சொல்லுக்குச் சிலப்பதிகாரத்திலேயே ஏற்பட்டமை தெரிகிறது. கலித்தொகையில் 'வரிவண்டு' (66-2) எனும் தொடருக்கு நச்சிஞர்க்கினியர், 'பாட்டினையுடைய வண்டு' எனப் பொருள் கொள்வதற்குச் சிலம்பின் செல்வாக்கு காரணமாயிற்ருே என் எண்ணலாம்.

சிலம்பில், வரி எனும் இச்சொல் இசைப்பாட்டு எனும் பொருண்மையுடன் பல சொற்களுடன் இணைந்தும் வருகின்றது.

இசையெனும் பொருளில், 'கானல்வரி' என்பது காதைத் தலைப்பாகவும் அமைகின்றது, 'கானல் வரிப்பாடல், (7-24-1), 'கானல் வரிப் பாடற்பாணி' (7-24-4) 'கானல்வரி...பாட, (7-52-2) எனும் தொடர்கள் அதன் இசைப்பண்பையும், பாடப்பட்ட தன்மையினையும் நிறுவுகின்றன. 'வரிக்கும் ஆடற்கும்' (3 29) என்பதில் வரியென்பதற்குச், 'செந்துறை வெண்டுறை எனப் பாடாநின்ற இருவகைப் பாடல்கள் என்ற விளக்கம் தருகின்ருர் நல்லார். வரியென்பது இசைப் பொதுப் பெயராகச் செந்துறை வெண்டுறை அனைத்தையும் அடக்கும் முழுமைக் கருத்தாய் அமைந்தமை இங்குத் தெரிகின்றது. ஆடலும் வரியும் (14-150), வரியுங் குரவையும் (3ய-க-9, நூக-13) என்பன, கூத்திலிருந்து வேறுபட்டு, ஆயின் கூத்தோடு இணைந்த இசை நிலையினது வரி என்பதனைக் காட்டுகிறது. வரிநவில் கொள்கை (13-38) வரிநவில்

பாணி (27-58) எனும் குறிப்புக்கள், சொல்லோடு கலந்த பாடற்றன்மையை விளக்குகின்றன. மாதர்ப்பாணி வரியொடு தோன்ற (26-115) எனும் இடத்துத் தாளஇணைவுடன் இசை அமைந்தமை தெரிகின்றது. திணைநிலைவரி, இணைநிலை வரி (10-க-12) உள்வரிப் பாணி (17-28-7) என்பன, இதன் பொருள் செறி நிலையால் ஏற்பட்ட வகைகளைக் குறிக்கின்றன.

'வரி' இசையினைக் குறித்தமை போன்றே கூத்தினையும் சுட்ட வருகின்றது. சிந்து, கும்மி ஆகியன முன்பு ஆடலையும் பின்பு அவ் ஆடலுடன் இணைந்து இசைத்த பாடலையும் குறித்தது என்பர். வரி, முதலில் ஆடலைக் குறித்துப் பின் பாடலைச் சுட்டியதா அன்றி முறைமாறியா என்பது கேள்வி. பாடல் எனும் பொருண்மைச் சாயல் கலித்தொகையில் இருந்ததாக நினைப்பதற்கு இடமிருப்பதாலும், சிலம்பில் இசைப்பாட்டெனும் பொருண்மையே இச்சொல்லுக்கு மிக்கு இருப்பதனாலும், பாடலையே முதற்குறித்தது என்று கூறலாம்.

வேட்டுவவரி, ஊர்சூழ்வரி, எனும் காதைத் தலைப்புக்கள் கூத்தடிப்படையில் அமைகின்றன. வரி என்பது ஆடல் எனும் பொதுப் பொருளில் பயன்பட்டதோடு, ஒரு தனி வகை அல்லது தனித்த இயல்புடைய கூத்தைக் குறித்தது எனும் எண்ணம், 'அரங்கும் ஆடலும் தூக்கும் வரியும்' (10-க-10) என்ற அடியால் ஏற்படுகின்றது. 'வரி காணரங்கம்' (27-20), 'நேரத் தோன்றும் வரியுங் குரவையும்' (23-க-11), 'வரியுறு செய்கை' (12-1-74) என்பன அரங்கத்தில் காட்சிப் படுத்தப்படும் அபிநயக் கூறுகளுடையது வரி என்பதனைத் தெளிவுறுத்துகின்றன.

இவ்வரியின் வகைகளாக எட்டு சிலம்பில் கையாளப் பட்டுள்ளன. கண்கூடுவரி (8-77), காண்வரிக் கோலம் (8-82), உள்வரியாடல் (8-89), புன்புறவரி (8-93), கிளர்வரிக் கோலம் (8-101), தேர்ச்சிவரி (8-104), காட்சிவரி (8-106), எடுத்துக்கோள்வரி (8-108) என்பன அவை. சிலவற்றில்

வரும் ஆடல், கோலம் என்பன, ஆடற்பாங்கையும் ஆடியோர் அழகுறப் புனைந்து ஆடியமையையும் காட்டு கின்றன. 'வரி யென்றது நடத்தை' என்ற அரும்பத உரை யாசிரியர் விளக்கம் 'நட(ன)ம்' என்பதை வரியின் பொருண்மையாகவும், நடைவேறுபாட்டால் அதன்கண் அமைந்த வகை வேறுபாட்டையும் உணர்த்துகின்றது எனலாம்.

கலையுள்ளம் கொண்ட கோவலன், மாதவி தன்னோடு பகிர்ந்து கொண்ட வாழ்வை, அவள் ஆடல் வாழ்வோடு சார்த்தி விளக்கும் நிலையில் இவ்வரிகள் பற்றிய எண்ணம் அமைகின்றது. நல்லார் இவற்றிற்குத் தரும் விளக்கம் பல படிநிலைகளைக் காட்டுகின்றது. கண்கூடுவரி என்பது காட்சி; தலைவி தலைவன் மேல் காதலுடையாள் போலத் தானே வந்து நிற்றல் அது. காண்வரி, அவ்வாறு வந்த பின்னர் அவன் மனம் மகிழும் வண்ணம் தந்து நீங்குதல். உள்வரி. உண்மைக் கோலத்தை மறைத்துப் பிறிதோர் கோலம் புனைந்து வரல். புறவரி என்பது, அவ்வாறு வந்தாள், தலைவனைப் பொருந்தாதே மீண்டுவிடல். கிளர்வரி தலைவன் உணர்வினை மதிக்காது சென்றுழி, அவன் சொற்களால் தடுக்கவும் புரியாதாள் போன்று புலந்து போதல். தேர்ச்சிவரி, தலைவன் தனக்குத் துன்பிழைத்தானெனப் பாவனையாக அவன் சுற்றத்தார்க்குத் தேர்ந்து கூறுதல். அவ்வாறு கிளைஞரோடு நில்லாது, தன் துயர் பலரும் காண, அறிய, வெளிப் படுத்துதல் காட்சிவரி. துன்பத்தின் மிகுதி காரணமாகத் துவண்டு வீழ்ந்தாளைப் பிறர் எடுத்துத் தேற்றுநிலை எடுத்துக் கோள் வரியாம்.

நாடகப் படிநிலைகளாக அமையும் இவ்வரிகள் நடம் நாடகம் எனும் தொடர்பையும் இயலிசை நாடக இணைவை யும் சுட்டி நிற்கின்றன.

பல்பொருளுடைய வரியெனும் சொல் இங்கொரு கலைச் சொல்லாக அமைகின்றது. அது, இசை நாடகத்துறைகளில் வழங்கி வந்த பொருண்மையுடன் இலக்கியத்தில் முதன்

முறை ஆளப் பெற்றது சிலம்பில் தான். அவ் இருதுறைச் கூறுகள் பலவற்றின் இணைவு சிலப்பதிகாரத்தில் அமைந்த போது, அத்துறைச் சொற்களும் புகுந்து சொல்வளம் பெருக்கின எனலாம்.

## அட்டவணை

| பொருள் | தொல் | புறம் | அகம் | குறு. | ஐங் | நற் | பதிற் | பரி | கலி | சிலம்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோடு | 1 | 11 | 47 | 7 | 13 | 7 | 1 | | 4 | 11 |
| மடிப்பு | | 3 | | | | | | | | |
| பாட்டின் வரி | | 1 | | | | | | | | |
| புலி | | 1 | 1 | | | | | | 1 | |
| புகர்/புள்ளி | | 1 | | 2 | | | | | 1 | |
| எழுதிய (வி) | | 1 | | | | | | | | |
| ஒழுங்கு/வரிசை/நிரை | | | 7 | | | | 1 | | | |
| தேமல்/திதலை/சுணங்கு | | | 4 | 2 | | | | | | |
| அழகு/கோலம் | | | 1 | | | | 1 | | | |
| ஆடை | | | 1 | | | | | | | |
| புனைந்த (வி) | | | 1 | | | | | | | |
| வரிந்த (வி) | | | 1 | 1 | | | | | | |
| பாம்பின் பத்திக் கீற்று | | | | 2 | | | | | | |
| நிறம் | | | | | | 2 | | | | |
| வண்டு | | | | | | | | 1 | | |
| தொய்யில் | | | | | | | | | 2 | 4 |
| வளை | | | | | | | | | 1 | |
| எலும்பு | | | | | | | | | 1 | |
| இசைப்பாட்டு | | | | | | | | | | 14 |
| கூத்து | | | | | | | | | | 10 |
| வரைதல் (வி) | | | | | | | | | | 1 |

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | Rs. | P. |
|---|---|---|---|
| 1. | Descriptive Grammer of Cilapathikaram | 18 | 00 |
| 2. | Grammar of Akanaanuuru | 15 | 00 |
| 3. | Studies in Tamil Language and Literature | 5 | 00 |
| 4. | இலக்கணத் தொகை—எழுத்து | 7 | 00 |
| 5 | இலக்கணத் தொகை—சொல் | 10 | 00 |
| 6. | காந்தி கண்ட மனிதன் | 3 | 00 |
| 7. | இலக்கிய நினைவுகள் | 3 | 00 |
| 8. | சிலம்பில் சில பரல்கள் | 3 | 00 |
| 9. | மாந்தர் சிறப்பு | 3 | 00 |
| 10. | இலக்கியக் கனவுகள் | 4 | 00 |
| 11. | தமிழில் விடுகதைகள் | 10 | 00 |
| 12. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | 12 | 00 |
| 13. | ஒன்று நன்று | 8 | 00 |
| 14. | வீர சோழியம் - ஒரு திறனாய்வு மூலமும் கருத்தும் | 5 | 00 |
| 15. | தாயுமானவர் | 3 | 00 |
| 16. | சிலம்பும் சிந்தாமணியும் | 8 | 00 |
| 17. | இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 25 | 00 |

## பதிப்பாசிரியர்

| | | | |
|---|---|---|---|
| 18. | இளவேனில் - தொகுதி 1 | 4 | 50 |
| 19. | இளவேனில் - தொகுதி 2 | 6 | 00 |
| 20. | இளவேனில் தொகுதி 3 | 10 | 00 |
| 21. | ஆய்வு மலர் | 10 | 00 |
| 22. | ஆய்வுத்தொகை | 10 | 00 |
| 23. | யார்—எவர் | 1 | 00 |
| 24. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 5 | 00 |
| 25. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 1 | 10 | 00 |
| 26 | தமிழ் இலக்கியக் கொள்கை - தொகுதி 2 | 10 | 00 |
| 27. | திறனாய்வுக் கட்டுரைகள். | 10 | 00 |

கிடைக்குமிடம் :

**பாரி நிலையம்**

**59, பிராட்வே, சென்னை, 600 001**